உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 13 ஞாயிற்றுக்கிழமை (29.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 276

# வடமராட்சி கிழக்கு மக்கள் மீள்குடியமர

# யாழ்.மாவட்ட படைகளின் தளபதி அனுமதி

## பலாலியில் நடந்த கலந்துரையாடலில் இணக்கம்





யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 29

வடமராட்சி கிழக்கில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர், யுத்த நிலைமை காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்று மாலை பலாலி படைத் தலைமையகத்தில் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையிலான குழுவினரிடம் இதற்கான உறுதிமொழியை வழங்கினார் தளபதி ஹத்துருசிங்க.

முதற்கட்டமாக அம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த 81 குடும்பங்கள் நாளை திங்கட்கிழமை அங்கு மீளக்குடியமர்த்தப்படவுள்ளன. ஏற்கனவே அம்பன் பிரதேசத்தில் ஒரு சிறிய பகுதியில் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அனுமதி வழங்கப்பட்ட 81 குடும்பங்களும் மிக நீண்டகாலமாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் படாமல் தற்காலிக இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டிருந்தன. இதில் 73 குடும்பங்களுக்கு தற்காலிக இடங்களில் தலா 2 பரப்பு அரச காணி வழங்கப்பட்டதுடன் அரச திட்டங்களின் கீழ் வீட்டு உதவி களும் வழங்கப்பட்டிருந்தன. (25ஆம் பக்கம் பார்க்க)

## 5,000 ரூபா நாணயத்தாளை வெளியிடுகிறது மத்திய வங்கி

கொழும்பு,ஓக.29

இலங்கை மத்திய வங்கியின் அறுபதாண்டு பூர்த்தியை முன்னிட்டு 5,000 ரூபா நாணயத்தாள் வெளியிட அந்த வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

2011ஆம் ஆண்டு இந்த புதிய நாணயத்தாள் புழக்கத்தில் விடப்படும் எனவும் இலங்கையின் துரித அபிவிருத்தியை வெளிப்படுத்தும் வகையில் இந்த நாணயத் தாள் வடிவமைக்கப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டின் பணவீக்க வீதம் அதிகரித்துக் காணப்படும் பட்சத்திலேயே பெறுமதியான பணத்தாள்கள் அச்சிடப்படுவது வழக்கம் என பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ-சி)

### 2ஆயிரம் சதுர கிலோ மீற்றரில் புதைந்துள்ள

## 3 லட்சத்துக்கும் அதிக கண்ணிகள் இன்னும் அகற்றப்படாத நிலையில்

கொழும்பு,ஓக.29

இன்னமும் 2ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிகள் வன்னிப் பகுதியில் அகற்றப்படவேண்டியுள்ளன.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதவெல இதனைத் தெரிவித்தார்.

வன்னியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் அரைப்பங்கு மீட்கப்பட்டுவிட்டன. இதுவரை 1,800 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. மேலும் 2ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் மீட்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டு அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ள 3 லட்சத்து 500 கண்ணிவெடிகளை கண்டுபிடித்து அழிக்கப்படவேண்டியுள்ளன என்றும் -

கண்ணிவெடி அகற்றும் பணியில் 1,600 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு கிராம சேவையாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கண்ணிகள் அகற்றப்பட்டு விட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.(ஒ-ஐ)

### இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் குறித்து

## நிருபமாவைக் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேச்சு நடத்துவர்

கொழும்பு, ஓக. 29

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமாராவ் எதிர்வரும் புதன்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சு நடத்தவிருக்கிறார்.

இந்தியத் தூதரக இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வும் மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக ஆராயும் பொருட்டு இங்கு வரும் அவருடன் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசவிருக்கிறோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியமரத் தயாராக இருக்கும் பொதுமக்களுக்கு படையினர் விதித்துள்ள தடை குறித்தும் இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

மக்களின் மீள்குடியமர்வுக்கு விரைந்து இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குடாநாட்டில் வலி.வடக்கில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி மக்கள் மீளக்குடியமர ஏற்பாடு செய்துதர வேண்டும் என்றும் நிருபமாவிடம் கோரவிருப்பதாகவும் சுரேஷ் மேலும் கூறினார். (ஒ-ஐ)

### ஏற்கனவே நிலவிய சந்தேகம் தீர்ந்தது!

## செப்.15 ஐ.நா. கூட்டத் தொடரில் ஜனாதிபதி மஹிந்த பங்குபற்றுவார்!

கொழும்பு,ஓக.29

அடுத்தமாதம் 15ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள ஐ.நா. கூட்டத்தொடரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார்.

இந்த வருடத்துக்கான கூட்டத் தொடரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவார் என்று நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்ட நிலையில் ஜனாதிபதி கூட்டத் (27ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் 50ஆயிரம் வீடமைப்புத் திட்டம்; பயனாளிகளின் தெரிவு இலங்கை அரசாங்கத்திடம்!

### நிர்மாணப் பணிகள் மும்பாய் நிறுவனத்திடம்

கொழும்பு, ஓக.29

இலங்கையில் வடக்கில் இந்திய அரசு அமைக்கவுள்ள 50ஆயிரம் வீடுகளின் அமைவிடம், காணி உரிமை ஆகியன தொடர்பான முடிவை இலங்கை அரசே மேற்கொள்ளும்.

இந்தியத் தூதரக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

வடக்கில் அமைக்கத் திட்டமிட்டுள்ள 50ஆயிரம் வீடுகளையும் இந்தியாவின் மும்பாய் கட்டடத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது. அந்த வீடமைப்புத் திட்டத்தில் அமையவுள்ள வீடுகளின் அமைப்பை அந்த நிறுவனம் முடிவு செய்யும்.

அந்த வீடுகள் கிடைக்க வேண்டிய பயனாளிகள், வீடமைப்பு இருப்பிடம் ஆகியன தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும்.

குறிப்பிட்ட இடத்தில் வீடமைக்கும் பணியை அந்த நிறுவனம் பூர்த்தி செய்யும்.

பயனாளிகளின் காணி உரிமை, பயனாளியின் தெரிவு ஆகியன தொடர்பான முடிவுகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் - என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ஐ)




இறக்குமதி வரி நீக்கம்..

சிங்கர்

பொருட்களின் விலை குறைப்பு..

(011) 5 400 400 www.singersl.com




SL-SF40RCN

முன்னர் ரு. 8999/-

இப்பொழுது ரு. 7999/-

குறைந்த விலையில் மேலும் பல பொருட்கள்

SINGER Plus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இருமனமும் ஒருமனமாகும் திருமண வாழ்த்து



இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் திருமண விழாக் காணும்

**கண்ணன் – அநுசியா**

தம்பதிகளைப் பதினாறு பேறுகளும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

கௌசலா அகம்,
1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

வாழ்த்துவோர்:
அருள், அமல், கமல், தனிஷ், வெனிஸ்.

**D-Link Routers**
Building Networks for People

உங்களுக்குத் தேவையான Broadband / ADSL Routers
3 வருட உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில்

> உங்கள் இடங்களிலேயே எங்கள் சேவைகள்
> விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
> SriLanka Tele com ADSL இணைப்புப் பெற்றவுடன் எம்முடன் இணையுங்கள்

தொடர்புகளுக்கு: 021 222 7835, 0775578822, 0776 155 048

**திருமுருகன் கொம் நெற்**
259, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
5,ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி
44,மில் றோட் வவுனியா

Debug — Authorized Distributor in Jaffna.

## Walk In Interview

PRE-SCHOOL ENGLISH TEACHER (Full Time)
Dates : 28,29/08/2010
Time : From 10.00am – 04.00pm

**British College of Higher Studies**
No.15 2/1, Sirambiyadi Lane (Off Stanley Rd,
Closer to Ariyakulam Junction), Jaffna.
Tel:021-2224550 Email:info@bchs.lk

## மரண அறிவித்தல்

### திருமதி நவநீசன் பிருந்தா

(முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்)



சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நவநீசன் பிருந்தா நேற்று (28.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் நவநீசனின் (ஆசிரியர், பரந்தன் மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், சுந்தரலிங்கம்-பாலச்சந்திரேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் சண்முகநாதன்-அருந்தவமலர் தம்பதியரின் மருமகளும் பத்மினி (U.K.), றமேஸ் (றமேஸ் ஸ்ரோஸ்), பிரசாந்தி (கலைப்பீடம், 2008) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலைமதி, நந்தகுமார் (கொழும்பு), கஜந்தினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி/570443)

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 6183

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒத்திவைப்பு

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தக்கூட்டம் இன்று இடம்பெற விருந்தது என்றும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

## உர மானியத்தைப் பெற மட்டுவிலில் பதிவுகள்

மட்டுவில் வடக்கு விவசாய சம்மேளனப் பிரிவில் உள்ள மட்டுவில் கிழக்கு, சரசாலை, சந்திரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் உரமானியத்தைப் பெற்றுக் கொள்ள இன்று ஞாயிறு, நாளை திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் கண்ணகை சன சமூக நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-131)

## மாவிட்டபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட நகை, கைக்கடிகாரம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர் தங்க நகை ஒன்றையும் கைக்கடிகாரத்தையும் கண்டெடுத்து ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (ஓ-6)

### வாடகை/Rent

Jaffna, சுண்டுக்குளியில் 7 Rooms உடன், Car Parking Place, 2700 Sq.ft. மேல் வீடு, கீழ்வீடு வாடகைக்கு. NGO,Institution, Prayers Centre விரும்பத்தக்கது. 0757131027, 0112360325, 0718475656, 0777115378

### வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு: 0714221423, 0776845799

### காணி விற்பனைக்கு

உரும்பிராய், செல்வபுரம், சிவன்கோயிலடி அருகில் கிணற்றுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு : 0777910953, 0776063175

### வேலைக்கு ஆள்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும் கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனி அறிவுடையோர் தேவை. மானிப்பாயில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உங்களது சுயவிவரக் கோவையினை 05.09.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: Micro System Development Centre
Jaffna Road, Manipay.
T.P.: 021 3218462, 0772987082

### காணி விற்பனைக்கு

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 100 யார் தூரத்தில் யாழ்.மின்சார நிலைய வீதியின் மூன்றாவது ஒழுங்கையில் 2ஆவது காணி நான்கு பக்கங்களும் மதிலுடனும், கிணற்றுடனும் கூடிய 1 பரப்பு 4 குழி விஸ்தீரணம் கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: இ.பாலசுப்பிரமணியம் (சுப்புறு மாமா)
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
0776629961

**நிழல் அல்ல, நிஜம்!** ஒரே வாரத்திலே:
கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!
கரும்புள்ளிகள், முகச்சுருக்கம், தழும்புகள், உதடு கருமை நீக்கம் போன்றவற்றுக்கான தீர்வுகள்!
உடற் பருமன் கூட்டுதல், குறைத்தல்.
*WE CARE ALWAYS!*

தொ.பே இல.: 0777351954, 0774011129
SANEYA BEAUTY PALACE
132, KACHCHERI NALLUR ROAD.
(கிட்டுப் பூங்கா அருகில்).

## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயப் பிரதம குரு கதிர்காமநாதக் குருக்கள் அவர்களின் அன்புத் துணைவியார்

திருமதி **அருளாம்பிகை**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

கோண்டாவில் வாழ் மக்கள்.
(102645)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிர்காமநாதக்குருக்கள் அருளாம்பிகை அம்மா

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி கதிர்காமநாதக் குருக்கள் அருளாம்பிகை அம்மா நேற்றுமுன்தினம் (27.08.2010) வெள்ளிக்கிழமை காலை சிவபேறடைந்தார்.

அன்னார் சிவத்திரு.சிவ.கதிர்காமநாதக்குருக்கள் (கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு) அவர்களின் பிரிய பத்தினியும், காலஞ்சென்றவர்களான நடராசா (பூபாலு) - பாலாம்பிகை தம்பதியரின் செல்ல மகளும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் ஐயர் - பார்வதியம்மா தம்பரியரின் அன்பு மருமகளும், நந்தினி, தாட்சாயணி, நிரோஜினி ஆகியோரின் அன்புத் தாயும் சிவத்திரு.சிவ.இரங்கநாதக்குருக்களின் மைத்துனியும், அன்னபூரணம், அன்னலக்ஷ்மி, வரதராஜா, நவராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் சிவப்பேற்றுக் கிரியைகள் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் வேம்பன் மயானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு சமாதி வைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நிலக்ஸ்சன் றொபேட்

உருத்திரபுரம் வடக்கு, சக்திபுரம், எள்ளுக்காட்டைச் சேர்ந்த நிலக்ஸ்சன் றொபேட் (புனித பற்றிமா பாடசாலை மாணவன்) 27.08.2010 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஞானசீலன் (ஜெறோம்)-கிறிஸ்ரின் சாந்தி தம்பதியரின் பாசமிகு மகனும், குயின்ஸ்சிலி (புனித பற்றிமா பாடசாலை மாணவி), கனிஸ்ரன் றொபேட், கேசிவா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வரப்பிரகாசம் (உம்பையா), மேரி அருள்மணி, காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, பெர்ணபேற்றின் அன்புப் பேரனும், றொபேட் கலாசியஸ் (தங்கத்துரை), றொபேட் செலாசியஸ் (சுரேஸ்), றொபேட் அலோசியஸ் (றமேஸ்), இராசாத்தி ஆகியோரின் பாசமிகு மருமகனும் பாமினி, சுறேஜினி, மனோஜினி, யேசுராசா, செல்லப்பவுண், தங்கத்துரை, இன்பன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் உருத்திரபுரம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உருத்திரபுரம் வடக்கு,
சக்திபுரம், எள்ளுக்காடு.
0773443778 (102641)

தகவல்:
சுரேஸ் (மாமா).

DHL WORLDWIDE EXPRESS

**திருமுருகன் கொம் நெற்**

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ருபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ருபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பிரதான வீதி, நெல்லியடி
5, திருநகர் வீதி, கிளிநொச்சி
44, மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்

**Asian Furniture**
ஏசியன் தளபாட நிலையம்



மொறட்டுவவில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய நவீன வடிவமைப்பினால் ஆன வீடு மற்றும் அலுவலகங்களுக்குரிய தளபாடங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் மலிவான விலையில் பெற உடன் விரையுங்கள்.

யாழ்ப்பாணம்.
T.P: 0773583879- 0212227892

**ஏசியன் ரான்ஸ்போட்**
யாழ்- கொழும்பு கொழும்பு- யாழ்ப்பாணம்



வெளிநாடு மற்றும் உள்நாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கு ஆவணங்கள், சீட்டுகள் மற்றும் பொதிகளை மிக மிக குறைந்த செலவில் அனுப்ப எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

36/2, கதிரேசன் வீதி, கொழும்பு 13 T.P: 0112458972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுவேகமாக இராணுவ மயமாக்கப்படும் இலங்கையின் தமிழர் பிரதேசங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிரந்தப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் சபேந்திரசில்வா நியமிக்கப்படவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறே பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவராக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன் கொட நியமிக்கப்படவுள்ளார்.

இவர்களின் நியமனங்கள் முறையே ஐக்கிய நாடுகள் சபையாலும் பிரிட்டனாலும் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அங்கு இவர்களே இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களாக விளங்குவார்கள். அதாவது அங்கெல்லாம் இலங்கையின் குரலாக இராணுவக் குரல்களே ஒலிக்கும் நிலை உருவாகும்.

ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை ராஜதந்திர சேவைகளுக்கு நியமிப்பது இலங்கையில் ஒரு புதிய நடைமுறை என்று கூறிவிட முடியாது. அரசியல் அதிகாரத்துக்கு வருபவர்கள் தம்முடன் நெருங்கி ஒத்துழைப்பதையே எப்போதும் இராணுவத்தலைமைப் பீடங்களிலிருந்து எதிர்பார்ப்பதுண்டு. அதன் காரணமாகத் தமக்கு வேண்டியவர்களை அப்பதவிகளில் அமர்த்துவதற்காக ஏற்கனவே இருந்த படை அதிகாரிகளை நாகரிகமான முறையில் இராஜதந்திர சேவைக்கு நியமிப்பதுண்டு.

1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராகப் பதவியேற்ற போது இராணுவத் தளபதியாக இருந்தவர் அன்ரன் முத்துக்குமார் அவர்கள். இவர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே தளபதியாக இருந்தவர். எஸ் டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இவர் எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு வழங்குவார் என்பது தொடர்பாக தேசிய வாதிகள் மத்தியில் ஏற்கனவே பலத்த சந்தேகம் நிலவி வந்தது. 1958 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரங்களின் பின்பு ஏற்பட்ட சூழ்நிலைகள் இவரை இராணுவத் தளபதி பதவியிலிருந்து மாற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியிருந்தன. அதற்கு இவர் ஒரு தமிழர் என்பதும் காரணமாயிருந்தது. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இவர் கௌரவமான முறையில் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டார். இவ்வாறே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் என்று கருதப்பட்ட மேஜர் ஜெனரல் ஜானகப் பெரெரா அவுஸ்திரேலியாவின் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இப்படியாக அரசியல் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இராணுவ உயர்பீடத்திலுள்ள அதிகாரிகள் ராஜதந்திர சேவையில் நியமனம் செய்யப்பட்டு அவர்களின் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கௌரவமாகப் பறிக்கப்படுவதுண்டு. இப்படியான சம்பவங்கள் அரசாங்கங்கள் மாறும் போதும், சில நெருக்கடிகள் ஏற்படும்போதும் இடம்பெறுவது இலங்கையின் வரலாற்றில் தொடர்ந்தும் இடம்பெற்று வந்துள்ளன. ஆனால் இப்படியான அடிப்படையில் மேஜர் ஜெனரல் சபேந்திரசில்வா அவர்களதும்,

அட்மிரல் வசந்த கரன்கொட அவர்களதும் நியமங்கள் இடம்பெறவுள்ளதாகக் கூறிவிடமுடியாது. ஏனெனில் இவர்கள் இருவருமே இன்றைய அரசியல் தலைமைப் பீடத்துக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்பதும், விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போரில் காத்திரமான பங்கை வகித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்படியானால் இந்த நியமனங்களின் நோக்கம் என்னவாக இருக்க முடியும் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும். மேஜர் ஜெனரல் சபேந்திரசில்வா விடுதலைப்புலிகளுடனான இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற நாள்களில் இலங்கை இராணுவத்தின் 58ஆவது படையணிக்கு

**ஞாயிறு காரம்**

தலைமை தாங்கி நந்திக்கடல் பகுதியில் போரை நடத்தியவர். இக்காலப்பகுதியில்தான் மாத்தளன், முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படு கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். அது மட்டுமன்றி வெள்ளைக்கொடிகளுடன் சரணடைவதற்காக வந்த நடேசன், புலித்தேவன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை கொல்வதற்குக்

விடுதலைப்புலிகளின் கடற்படைப் பலத்தை முடக்குவதில் முக்கிய பங்காற்றிய முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிறல் வசந்த கரன்கொட நியமிக்கப்படவுள்ளார். இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாகப் பிரிட்டனும் இலங்கை இராணுவத்தின் மீது நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. அது மட்டுமன்றி பிரிட்டினிலுள்ள தமிழர் அமைப்புக்கள் உட்பட பல்வேறு தரப்பினராலும் இலங்கைக்கு எதிரான கண்டனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அட்மிறல் வசந்த கரன்கொடவின் நியமனமும் பல கேள்விகளை எழுப்புகின்றன. இவ்விரு படை அதிகாரிகளும் போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில் இலங்கை அரசின் சர்வதேசப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனை இலங்கை அரசு உலகின் முன் வெளிப்படுத்தும் ஒரு சவாலாகவே நோக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி இது இலங்கை தொடர்பாக உலகம் காட்டும் அக்கறையை உதாசீனப் படுத்தும் ஒரு போக்காகவே காணப்படுகிறது.

சர்வதேச அளவில் இப்படியான ஒரு போக்கு இலங்கையால் முன் வைக்கப்படும் அதே சந்தர்ப்பத்தில் நாட்டின் வடக்குக் கிழக்கிலும் மிக வேகமான இராணுவ மயமாக்கல் இடம்பெற்று வருகிறது.

# அரசியலையும் மக்கள் நலன்களையும் கீழ்ப்படுத்தும் போக்கு தலைதூக்கி வருகிறது

கட்டளையிட்டவர் இவரே என முன்னாள் படைத்தளபதி சரத்பொன்சேகாவினால் குற்றம் சுமத்தப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே சில விடுதலைப்புலிகள் கைகள் கட்டப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். அக்காட்சிகள் உலகம் முழுவதுமுள்ள இணையத்தளங்களில் வெளிவந்ததை உலகளாவிய ரீதியில் பலரும் பார்வையிட்டனர்.

இந்நிலையில் ஐ.நா பொதுச்செயலாளர் போரின் இறுதிநாள்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்துள்ளார்.

**சந்திரசேகர ஆசாத்**

இவ்விசாரணையில் சபேரந்தசில்வா அவர்களின் பெயரும் பிரஸ்தாபிக்கப் படும் என்றே எதிர்பார்க் கப்படுகிறது. இவர் ஒரு போர்க்குற்றவாளி யாக இனம்காணப்படக்கூடும் என்ற வகை யிலான அபிப்பிராயங்களும் நிலவுகிறது.

இப்படியான ஒரு நிலையில் எந்த ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் ஆலோசனைக்குழு செயற்படவுள்ளதோ அதே சபைக்கான துணை நிரந்தரப்பிரதிநிதியாக இவர் நியமிக்கப்படுவது பெரும் வியப்பையே ஏற்படுத்தியுள்ளது. இது ஐக்கியநாடுகள் சபைக்கு இலங்கையால் விடுக்கப்படும் ஒரு சவாலா என்ற ஐயமும் பலர் மத்தியில் எழுந்துள்ளது. ஏற்கனவே இலங்கையின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ச அவர்கள் கொழும்பில் ஐ.நா காரியாலயத்தை முற்றுகையிட்டு அச்சபைக்கு சவால் விட்டது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று பிரிட்டன் தூதுவராக இறுதிக்கட்டப் போரில் தீவிர பங்காற்றி

பொதுமக்கள் நீண்ட காலமாகக் குடியிருந்த காணிகளில் அவர்களின் மீள் குடியேற்றம் மறுக்கப்படுகிறது. ஆனால் அங்கு இராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன. காணுமிடமெங்கும் படை முகாம்களும், காவலரண்களுமே காட்சியளிக்கின்றன. பாதுகாப்புக் காரணம் எனக் கூறப்பட்டு இராணுவத்தின் நலன்களின் அடிப்படை யிலேயே ஏனைய சகல விடயங்களிலும் அணுகப்படுகின்றன. சிவில் நிர்வாக அதிகாரிகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு விடயங்களும் இராணுவத்தின் பிரசன்னம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு முடிவையும் இராணுவ அதிகாரிகளின் அனுமதியின்றி அவர்கள் மேற்கொள்ளமுடியாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட தமது மக்களைச் சந்திக்க இராணுவத்தின் அனுமதி வலியுறுத்தப்படுகிறது. அவர்கள் சுதந்திரமாக நடமாடித் திரிந்து தமது மக்களின் தேவைகளை அறிவது நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு, கிழக்கு மாகாணசபைகளின் ஆளுநர்கள் இருவரும் முன்னாள் படை அதிகாரிகளே. எப்படி இருப்பினும் இலங்கை அரசியல், தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் மிக வேகமாக இராணுவ மயமாக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இலங்கையின் ஜனநாயக பாரம்பரியம் இராணுவ மயமாக்கலுக்குள் புதைந்து போய்விடுமோ என்ற அச்சம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

* * * * * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை முகாமையாளர் தேவை (ஆண்)
(Sales Executive)

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்படவுள்ள பிரயாண மற்றும் வாடகைக்கு வாகனம் வழங்கும் ஸ்தாபனமொன்றுக்கு விற்பனை முகாமையாளரொருவர் உடனடியாகத் தேவை.

விண்ணப்பதாரி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் சிறந்த புலமை கொண்டவராகவும் கணனித் தொழில்நுட்பத் திறமை கொண்டவராகவும் இருத்தல் அவசியம். செல்லுபடியாகும் வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவராகவும் 30 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். உடனடியாக விண்ணப்பிக்கவும்

ஈமெயில் – jms @ sltnet.lk
தொலைநகல் – 0112423251

## வாடகைக்கு

மானிப்பாய், காரைநகர் பிரதான வீதி, சண்டிலிப்பாயில் 17 பரப்புக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொ.பே: 0773013060

**காணி விற்பனைக்கு** நவாலியில் நல்ல சூழலில் 5 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விசாலமான பாதை ஓரம் கிணறு ஒன்று உண்டு. பிரதானபாதையில்இருந்து சுமார்1/2KM.தூரம்.

தொடர்பு: 077 6257911

| SHAMROCTK | ஈச்சமோட்டை, யாழ். |
|---|---|
| A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவும் ஆங்கிலம் GIT 2012 நடாஷ் -N.சுஜீதரன் அரியாலை - S.S.செந்தூரன் | Gr. 1 முதல்O/L வரை Eng. meg. 6 to 11 Eng. Lit. 10 to 11 சிங்களம் |

## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம்

பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) தனிப்பட்ட முறையிலும், சிறு குழுக்களாவும் பௌதிகவியல்,இணைந்த கணிதம் கற்பிக்கப்படும். மீட்டல் பயிற்சியும் உண்டு. பௌதிகவியல் பகுதி I இற்கான ஏராளமான பயிற்சி விடைக்குறிப்புகளுடன் செய்து முடிக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. (தமிழ், ஆங்கிலம்).

தொ.பே:- 0776648751
ஆசிரியர்- R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.)Dip.in.E.D.
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(கடை யிந் கவாமியார் வீதிக்கு முன்னால் உள்ள ஒழுங்கை)

## திருடர் கைவரிசை

கொழும்புத்துறை மேற்கு வதரி பீட விநாயகர் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கோயில் மண்டபத்துக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு இருந்த பித்தளைப் பொருள்களைக்கள வாடிச் சென்றுள்ளனர்.

குத்துவிளக்கு, பஞ்சாராத்தி, தாம்பாளம், தீவர்த்தி உட்பட மற்றும் பித்தளைப் பொருள்களை அள்ளிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-26)

## உடனடி வேலைவாய்ப்பு

உலகளாவிய கம்பனிகளில் முன்னோடிக் கம் பனியாகத் திகழும் Innovage கம்பனிக்கு புதிதாக முகாமையாளர்களும் முகாமைத்துவ பயிற்சியாளர்களும் தேவைப்படுகின்றார்கள். தகுதியுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(குறைந்தபட்ச தகைமை G.C.E. O/L, G.C.E. A/L)
சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும்.
(20 பேர் மாத்திரம்)
தொடர்பு: 0214922177, 0775566224

## விற்பனைக்கு

JAPAN YAMAHA MATE 80 MOTORCYCLE
மற்றும் வீட்டுத்தளபாடங்களும் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- முகவரி கோயிலடி, கொக்குவில்.
T.P.: 0770367164

## தவறி விட்டது

பூதவராஜர் வீதி, கன்னாகம் தெற்கு, கன்னாகம் என்னும் முகவரியுடைய இராசதுரை நிரஞ்சன் என்பவரது தே.அ.அட்டை (852932414 v) கன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து சித்திரை முதலாம் பாதத்தில் பிறந்த அரசசேவை SLTS (SPECIAL) தொழில் புரியும் மணமகனுக்கு 39 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர் பார்க்கப் படமாட்டாது.

விளம்பர இல: 4064
C/O உதயன்.

## வேலையாள்கள் தேவை

கணனி, தொலைத் தொடர்பு, இன்ரநெற், Photo copy ஆகிய சேவைகளை வழங்கும் Best 1 com நிலையத்திற்கு கணனி மற்றும் இணைய அறிவுடன் Type setting, Photo copy மற்றும் Graphic design தெரிந்த வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் 30, 31/08/ 2010 திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நேரில் வரவும்.

தொடர்பு: Best 1 com
27, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
0212220066, 0774145144

## யாழ்ப்பாணத்தில் காணி தேவை

யாழ். நகர எல்லையிலிருந்து 5 கிலோ மீற்றர் இற்கும் 10 கி.மீ. இற்கும் உட்பட்ட பிரதேசத்தில் 2.5 அல்லது 03 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமம் அமைக்கக் கூடிய காணி உடனடியாகத் தேவைப்படுகின்றது. காணியின் அமைவிடம் பிரதான பாதைக்கும். பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய இடங்களை அண்மித்ததாக இருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. திருவாகர் இரத்தினதுரை
உதவி தேசிய இயக்குநர், எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமம்
தொ.பே.: 0112103890, 0777689631 த.பெ. இல. 5, கெஸ்பேவ, பிலியந்தலை.

## தென்னந் தோட்டம் விற்பனைக்கு

பளைப் பகுதியில் 274 மைல் கட்டையடியில் ஏ-9 வீதியுடனுள்ள 10 ஏக்கர் தென்னந் தோட்டம் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:- 0774104846

வெளிநாடுகளில் படிப்பதற்கும் வேலை பார்ப்பதற்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்!!!

31st August எமது நிபுணர்கள் யாழ்ப்பாணத்தில்......

- Free Assessment
- Free Visa Guidance
- Free Visa Consultancy
- Career Guidance etc.

**Call for Appointments**
**0774 301 974**

Inspire International (Pvt) Ltd
151, Kirulapone Avenue, Colombo-5

## YMCA JAFFNA Talent Search 2010 - Western Music

Closing date for the above Talent Search has been extended Saturday 4th September 2010

*The Coordinator*
*Western Music Talent Search 2010*

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் சிறிபாலசுந்தரம்

(உரிமையாளர், தர்சினி எலற்றிக்கல்ஸ், அச்சுவேலி)



வல்வெட்டியைச் சேர்ந்த சண்முகம் சிறிபாலசுந்தரம் நேற்று (28.08.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் மகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் அஸ்வினியின் பாசமிகு தந்தையும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, சரோஜினிதேவி, சுலோசனாம்பிகை, சிவபாலசுந்தரம், காலஞ்சென்ற ஜெயபாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாத்தாவளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (103626)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வி கனகரத்தினம் ஜெகதீஸ்வரி

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வி கனகரத்தினம் ஜெகதீஸ்வரி 27.08.2010 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - அமிர்தவல்லி தம்பதியரின் மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கு.திருமாறன்.

## கிளி.மத்திய கல்லூரி உயர்தர மாணவருக்கு

கிளிநொச்சி,ஓக.29

கிளிநொச்சி மத்திய கல்லூரியினூடாக பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கு விண்ணப்பித்த தரம் 12 (2011 உயர்தர) மாணவர்களுக்கான பரீட்சை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகளை இது வரை பெற்றுக் கொள்ளாதோர் விரைவாகப் பெற்று உரிய பரீட்சைக்குத் தோற்றுமாறு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் அறிவித்துள்ளார்.

(த-405)

## B.Sc. in Computer Science

Qualification: O/L OR A/L OR HND

Duration: 2 - 2 1/2 Years

**A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்

**01-09-2010**

## Diploma in Multimedia with IT

Duration: 1 Year

Qualification: O/L

16 July 2010
Colombo BMICH இல் நடைபெற்ற
8th International Convocation
இல் பட்டம்பெற்ற
NORTH LANKA IIT நிறுவன மாணவர்கள்..



இலங்கைக்கான
Malaysian High Commissioner
இடமிருந்து பட்டம்பெறும்
NORTH LANKA IIT
கணினிப் பட்டதாரி மாணவன்



விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு:
**NORTH LANKA IIT**
#113, Laxan Plaza,
Navalar Road, Jaffna.
0213214305

## STUDY IN LONDON



- O/L சித்தி மாத்திரம் போதுமானது
- University / College Admission
- தேவையான Document ஒழுங்குகள்
- முன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்

SINGAPORE
UKRAINE
INDIA

SPONSORSHIP PAYMENTS AFTER VISA

HND-BBA-BA-BSc-MA-MSc-BEng-B.Com-MBBS, PhD-IT-LLM-MBBS LLB-PGDip-MPharm-computer& ect

ISO CERTIFIED INSTITUTION

(Reg+Course+visa+ticket+consulting)
UK - 629000/= SINGAPORE - 150000/=
INDIA - 300000/= UKRAINE - 650000/=

LAWYERS: Mr M. DINESH - Mr.M.ZAHIR - Miss.SUBASINY

**INTERNATIONAL CITY COLLEGE**

No: 07 W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06 (10m from Galle Road) Tel : 0114 594 104 , fax: 0112 582722

தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 0771250789 0772 955 977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாய்கள் மௌனிக்க கத்திகள் பேசுகின்றன: குடாநாட்டுக்குள் ஊடுருகிறதா புதிய கலாசாரம்?

உங்களில் யாருக்கேனும் இராம பிரானின் தம்பியான 'லக்ஸ்மன்' அல்லது இலட்சுமணன் என்று பெயர் இருந்தால் உடனடியாக பக்கத்தில் உள்ள சோதிடரின் வீட்டுக்கு உங்கள் ஜாதகத்தோடு ஓடிச்சென்று, கத்திக்குத்துப் பலன் ஏதாவது உண்டா என்று பார்த்துக் கொள்ளுங்கள். சோதிடத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட இவ்வாறு பார்க்கவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு குடாநாட்டில் நிகழ்ந்த இருவேறு கத்திக் குத்துச் சம்பவங்களே இந்த நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன. ஒரே நாளில் நிகழ்ந்துவிட்ட இவ்விரு சம்பவங்களிலும் லக்ஸ்மன் (அல்லது இலட்சுமணன்) என்ற பெயருடையவர்களே கத்திக்குத்துக்கு இலக்காகி இருக்கின்றனர். எதேச்சையாக நிகழ்ந்துவிட்ட இந்தப் பெயர் ஒற்றுமை பலருக்கு குழப்பதையே ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் இந்த இரு லக்ஸ்மன்களில் ஒருவர் அடுத்த நாள் காலை உடல் நிலை மோசமாகி இறந்துவிட்டார். எந்த லக்ஸ்மன் இறந்துவிட்டார் என்பதில் பலருக்கும் குழப்பமாகவே இருந்திருக்கும். ஒருவர் பல்கலைக்கழக மாணவன். இன்னொருவர் மருதனார்மடத்திலுள்ள பெண்கள் விடுதியொன்றின் காவலாளி. இவர்களில் காவலாளி இலட்சுமணனே கத்திக்குத்தின் பாதிப்பால் உயிரிழந்தவர் ஆவார்.

**கத்திக்குத்து : 1**

*கலட்டிச் சந்திக்கு அருகிலுள்ள- பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் மாலை நேரங்களில் ஒன்றுகூடுகின்ற- உணவகம் ஒன்றில் அன்றைக்கும் கூட்டம் ஜே ஜே என்றிருந்தது. தனியார் வீடுகளில் வாடகைக்கு அறை எடுத்து தங்கியிருக்கும் பல்கலை மாணவர்கள் பலரும் இரவு உணவுப் பார்சலை வாங்கியபின் உணவகத்தின் வாசலில் நின்று பம்பல் அடித்துக் கொண்டிருந்தார்கள். 'கம்பஸில்' தான் சீனியர், ஜூனியர் வேறுபாடுகள் எல்லாம். இப்படிப்பட்ட பொது இடங்களில்*

## புறநானூறு முதல் இன்றைய தமிழ் சினிமாக்கள் வரை கத்தி எடுத்தவனையே கதாநாயகன் என்கின்றன

*அவற்றையெல்லாம் தூக்கி மூலையில் வைத்துவிட்டு பேதம் பார்க்காமல் கலந்துரையாடி அந்த இடத்தை சமரசம் உலாவும் இடமாக மாற்றிவிடுவார்கள். அன்றைக்கும் அப்படித்தான். அரசியல், பல்கலைக்கழகப் பகிடிகள், நாளைய திட்டமிடல்கள்,காதல் நடவடிக்கை முன்னேற்றங்கள் என்பனவெல்லாம் அங்கு கூடியிருந்த பல்கலை மாணவர்களால் அலசப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த அலசல் மெல்ல மெல்ல லக்ஸ்மன் என்ற மாணவருக்கும் இன்னொரு நபருக்குமிடையிலான முரண்பாடாக மாறத் தொடங்கியது. வாய்த் தர்க்கம் முற்றி கைகலப்பு ஏற்படக் கூடிய நிலைவரை சென்றது. லக்ஸ்மனோடு முரண்பாட்டில் ஈடுபட்டவர் அவ்விடத்திலிருந்து உடனேயே அகன்றுவிட்டார். பிரச்சினை ஓய்ந்தது என்று எல்லோரும் பெருமூச்சுவிட்ட சமயத்தில்தான், முரண்பாட்டில் ஈடுபட்ட பின் அங்கிருந்து நகர்ந்து சென்றிருந்த இளைஞர் ஆவேசமாக ஓடிவந்தார். கையில் கத்தி பளபளத்தது. 'சும்மா வெருட்டுவதற்காகத் தான் கத்தியைக் கொண்டு வந்திருக்கின்றான்' என்று எல்லோரும் நினைத்திருக்க, அதைத் தவிடுபொடியாக்கும் வகையில் லக்ஸ்மனின் வயிற்றில் அந்தக் கத்தி ஆழப் பாய்ந்தது. இரத்தம் சீறிப்பாய அவன் மயங்கி வீழ்ந்தான். லக்ஸ்மன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மரணத்தின் வாசலை நெருங்கி மயிரிழையில் இப்போது உயிர்பிழைத்துவிட்டான்.*

**கத்திக்குத்து: 2**

*மருதனார்மடம் உரும்பிராய் வீதியிலுள்ள 'அருளகம்' மகளிர் விடுதி. நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. ஊர் முழுதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்ததால் எங்கும் நிசப்தம். அந்த நிசப்தத்தைக் குலைப்பது போல திடீரென கதவைத் தட்டும் ஒலியொன்று விடுதியினுள் எழுந்தது. எந்நேரமும் கடமையே கண் என நினைத்து சீதையை காத்து நின்ற இராமனின் தம்பி இலட்சுமணன் போல இங்கும் காவல் புரியும் லட்சுமணன்(வயது 62)இந்தச் சத்தம் கேட்டதும் தான் தாமதம். உடனேயே 'டோர்ச் லைட்டை' எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை நோக்கி விரைந்து ஓடினார். தன்னுடைய திட்டம் பிழைத்துவிட்டது என்ற ஆத்திரமும் எப்படியாவது தப்பித்துச் செல்லவேண்டும் என்ற வெறியும் மேலெழ கதவைத் தட்டிக் கொண்டிருந்த அந்த ஆசாமி, கையிலிருந்த பொல்லால் இலட்சுமணனை தாக்கத் தொடங்கினார். இலட்சுமணனும் விடவில்லை. தனது எதிர்ப்பைக் காட்டினார். எனவே பொல்லடி மட்டும் போதாதென்று அவன் நினைத்திருக்க வேண்டும். தயாராக வைத்திருந்த கத்தியை.எடுத்து இலட்சுமணனுக்கு ஓங்கி ஒரு குத்து. அவ்வளவுதான்! இலட்சுமணன் சுருண்டு வீழ்ந்தார். பதறியடித்துக் கொண்டு அவரை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். ஆயினும் பயனில்லை: பரிதாபமாக அந்தக் காவலாளியின் உயிர் பிரிந்துவிட்டது.*

இவ்விரு கத்திக்குத்துச் சம்பவங்களும், அவற்றின் பின்னணிகளும் வெவ்வேறானவை. ஒரே இரவில் நிகழ்தல், ஒரே மாதிரியான கொலை முயற்சி என்பவையே இங்கு முக்கியம் பெறுகின்றன. உண்மையில் இவ்விரு சம்பவங்களும் வெவ்வேறான நோக்குகளோடு வேறு வேறு நபர்களால் நிகழ்த்தப்பட்டவை. ஆயினும் நமது யாழ்ப்பாணம் கத்திக்குத்துக் கலாசாரத்திற்குள் நுழைந்துவிட்டது என்பதற்கான அபாய அறிவிப்பாகவே இந்தச் சம்பவங்களைக் கொள்ளவேண்டியிருக்கிறது. இச்சம்பவங்கள் நிகழ்வதற்கு சரியாகப் பத்து

ஹிரண்யன்

நாள்களுக்கு முன்னர் கொக்குவில் பகுதியில் தளபாடவிற்பனையில் ஈடுபட்டிருந்த தென்னிலங்கை வியாபாரிகளும் கத்திவெட்டுக்கு இலக்காகியிருந்தனர். இதைவிட சில மாதங்களுக்கு முன்னர் மருத்துவபீட மாணவன் ஒருவன் பேராசிரியர் ஒருவரை கத்தியால் குத்தியதும் உங்களுக்கு நினைவிருக்கலாம். அதன் பின்னர் ஒரே நாளில் நடந்து முடிந்த இரு கத்திக்குத்துச் சம்பவங்களும் பலரின் கவனத்தையும் ஒருங்கே ஈர்த்துள்ளன.

தென்னிந்தியாவில் மதுரை மாவட்டம் இத்தகைய கத்திக்குத்துக் கலாசாரத்திற்கு பேர்போனது. அங்கே வாயால் பேசுவதைக் காட்டிலும் கத்தியால் பேசினாலே காரியம் ஆகும் என்றொரு எண்ணக்கரு வளர்ந்தோங்கியுள்ளது. இதனால்தான் மதுரைப்பின்னணியை மையமாகக் கொண்டு உருவாகும் திரைப்படங்களில் அரிவாளும் இரத்தமும்



நிறைந்திருப்பதைக் காணலாம். அதுபோலவே இலங்கையின் மதுரையாக யாழ்ப்பாணமும் உருவெடுத்து வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.


'' நானும் இலங்கையில் பல இடங்களுக்குப் போயிருக்கிறேன். ஆனால் யாழ்ப்பாணத்தவர்கள் வைத்திருக்கின்ற வாளைப் போல வேறொரு இடத்திலும் பார்த்ததில்லை. நாலடி நீளம் கொண்ட வாள்களைக்கூட வைத்திருக்கிறார்கள். பார்த்தாலே பயத்தில் செத்துவிடுவோம்'' என்று அண்மையில் ஒரு

## தமிழகத்தின் மதுரை போல யாழ்ப்பாணமும் ஒரு வன்முறை நகரமாக மாறி வருகின்றதா?

தென்னிலங்கை நண்பர் கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது. இளைஞர் குழுக்களிடத்தே சண்டை மூளும் போது அதன் உச்சக்கட்டமாக மிக நீண்ட வாள்களோடு அவர்கள் மோதிக்கொள்வார்கள். எனினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய வாள்களை அவர்கள் ஒரு 'வெருட்டுதலுக்காகவே' பயன்படுத்துவார்கள். எந்தக் குழு அதிக வாள்களைக் கையில் கொண்டிருக்கிறதோ அவர்களின் கையே குறித்த சச்சரவில் ஓங்குவதுண்டு. என்னதான் பெரிய சண்டையென்றாலும் வெட்டுக்குத்து வரை செல்வது வெகு குறைவுதான். ஆனால் இந்த மாதத்தில் மட்டும் மூன்று கத்திவெட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதில் மொத்தமாக நால்வர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார். நாங்கள் வாய்ப்பேச்சில் ஈடுபடுவதைத் தவிர்த்து கத்திகளால் பேச முனைவதையே இது எடுத்துக்காட்டுகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தின் அடிப்படை [illegible] வன்முறை [illegible] ஆழ

வேரூன்றிவிட்டது என்பதையும் இதன் மூலம் ஒத்துக் கொள்ள வேண்டியவர்களாக மாறிவிட்டோம்.

அண்மையில் 'சன்சீ' என்ற பெரிய படகு மூலம் கனடாவுக்குள் ஈழ அகதிகள் உள்நுழைந்தனர். அதன்போது ஈழ அகதிகளுக்கு எதிராக பல்வேறு கட்டுரைகள், செய்திகள் கனேடிய ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தன. இலங்கையிலிருந்து வருகின்ற சிங்கள மக்களை இங்கு சாதுவானவர்களாகவே இருக்க தமிழர்கள் மட்டும்



அதிகளவு வன்முறைக்குணத்தோடு அலைவதாகவும் இது கனடாவின் நற்பெயருக்குத் தொடர்ந்தும் களங்கத்தை உண்டு பண்ணிவருவதாக 'சன்சீ' அகதிகளுக்கு புகலிடம் அளிக்ககூடாது என்றும் அப்பத்திரிகைகள் எழுதியிருந்தன. அகதிகளாகப் போன ஈழத் தமிழர்கள் கனேடியக் குடியுரிமை கிடைத்தவுடன் தமக்கிடையே குழுக்களாகப் பிரிந்து குத்துவெட்டுக்களில் ஈடுபட்டு வருவது எல்லோருக்குமே தெரிந்த சங்கதி. இத்தகைய ஒருசிலரின் செயற்பாடுகள் உயிரைப் பணயம் வைத்துப் புறப்பட்ட 500 இற்கும் அதிகமானோரின் புகலிடக் கோரிக்கையை நிச்சயமற்ற தன்மைக்குள் தள்ளியுள்ளது.

'தூரமும் காலமும் குணத்தை மாற்ற முடியாது' என்று சொல்வார்கள். அது சரிதான் போலிருக்கிறது. கனடாவில் இருந்தாலென்ன, லண்டனில் இருந்தாலென்ன, யாழ்ப்பாணத்திலிருந்தாலென்ன எங்கிருந்தாலும் ஏதாவது சச்சரவில் ஈடுபட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பது நமது இளையோரின் புதிய நாகரிகமாகவே மாறிவிட்டது. இதுநாள் வரையும் வாய்த்தர்க்கத்தில் மட்டுமே ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் அவற்றினை நாம் லட்சியம் செய்யாதிருந்தோம். ஆனால் இப்போது எதற்கெடுத்தாலும் கத்திக்குத்தே பதிலாகக் கிடைக்கும் என்ற நிலை உருவாகத் தொடங்கிவிட்டது. இது மீளவும் சின்னச் சின்ன இரத்தக் களரிகள் இந்த மண்ணில் உருவாகப் போகின்றன என்பதையே சுட்டி நிற்கின்றன.

இது யார் பிழை? முழுப் பழியையும் இளைய சமூகத்தின் மீதே போட்டுவிட்டு தப்பித்துவிட முடியாது. காலாதிகாலமாக கத்தியெடுத்தவனே கெட்டிக்காரன்; கதாநாயகன் என்பதே தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடாக இருந்து வருகின்றது. புறநானூறு முதல் இன்றைய தமிழ் சினிமாக்கள் வரை நாலைந்து பேரின் அல்லது அதற்கு மேற்பட்டோரின் உயிரை பறிப்பவனேயே நாயகனாக்கி பூஜித்து வருகின்றன. நமது சமூகத்தின் அடிப்படைக் கருத்து நிலையே இத்தகைய கலை வடிவங்கள் ஊடாக வெளிப்படுகின்றது. எனவே அடிப்படையிலேயே நாம் வன்முறையை நமக்குள் வரிந்து கொண்டிருக்கிறோம். இதுதான் அவ்வப்போது வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றது. இந்த நிலையைத்தான் முதலில் நாம் மாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழர்கள் வன்முறையாளர்கள் என்ற பிரமை உலகெங்கும் ஏதோவொரு விதத்தில் பரவிவிட்டது. இதை மாற்ற முடியாவிட்டாலும் முயற்சிக்கவாவது வேண்டும். நல்லவிடயங்களுக்காக ஆரோக்கியமான வகையில் ரௌத்திரத்தை - கோபத்தை- வெளிப்படுத்தலாம். அது தவறல்ல. ஆனால் அதுவே எல்லை மீறி இரத்தக் களரிவரை செல்வது தான் நமது சமூகத்தின் கலாசார இருப்பியலை அதிர்வுறச் செய்கிறது.

குழந்தையின் வளர்ப்பிலிருந்து இளையோரை வழிப்படுத்துவது வரை வன்முறை எண்ணங்கள் அவர்களுக்குள் ஊற்றெடுக்காத வண்ணம் மிகக் கவனமாகப் பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்விக்கூடங்களும், 'அடியாத மாடு படியாது' என்பன போன்ற வன்முறை வழியிலான போதிப்பைக் கைவிட்டு புதிய முறைகளுக்குள் நுழைய வேண்டும். கலை, இலக்கியங்களும் இதுபோன்றே கத்தியெடுக்காதவர்களும் கதாநாயகர்களாகலாம் என்பதை சொல்லி நிற்க வேண்டும். இவையெல்லாம் சீராக நிகழுமானால் இளையோரிடத்தே புகுந்துள்ள வன்முறைப் பிசாசு காலஓட்டத்தில் விலகிவிடும். இல்லாவிடின் யாழ்ப்பாணம் இலங்கையின் மதுரையாவதைத் தடுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hotline: 077 308 9 309



கடந்த ஆண்டு கால் பதித்தோம்...!
சொன்னதைச் செய்தோம் ...!
மாணவர் மனங்களை வென்றோம்...!
எனவே இம்முறையும்
உங்கள் தெரிவு....

ESOFT
The Leader in Professional IT Education

இலங்கையில் முதல்வன்

பட்டப்படிப்பிற்கான கற்கைநெறி

- BIT — Bachelor of Information Technology - UCSC
- bcs — Higher Education Qualifications
- BIT @ UOM — Bachelor of Information Technology - University of Moratuwa
- HND — HND in Computing and Business

டிப்ளோமாக் கற்கைநெறி

- DiTEC — Diploma in Information Technology
- DiSE — Diploma in Software Engineering
- DiBM — Diploma in Business Management
- DiWE — Diploma in Web Engineering

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- Weekdays Mon, Tue, Thu, Fri — WeekEnd days Sat, Sun — Time 8.30 am, 12.30 pm

மாணவர்கள் Esoft ஐ தெரிவு செய்யக் காரணங்கள்...

- BIT பயிற்சி நெறிக்கு, மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் இணைந்த பங்காளி நிறுவனம்.(university of Moratuwa parther for collaborative provision)
- இலங்கையில் BIT, BCS பயிற்சி நெறிகளைப் போதிப்பதில் நம்பர் 1 நிறுவனம்.
- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் BIT பட்டமளிப்பு விழாவில் ஒவ்வொரு ஆண்டும் தங்கப்பதக்கம் வெல்லும் மாணவர்களை உருவாக்கும் நிறுவனம்.
- அரசாங்க ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சியை கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் வழங்கும் நிறுவனம்.

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO தரச்சான்றிதழ் பெற்ற கணனி நிறுவனம்.

ESOFT — The Leader in Professional ICT Education

**ESOFT Computer Studies**
Regional Head Office
114, Navalar Rd, Jaffna.
Tp: 0217501120

| | | |
|---|---|---|
| Jaffna | : 267, Navalar Road, | 021 222 4142 |
| Nelliyady | : 153, Jaffna Road, | 021 226 4940 |
| Chavakachcheri | : Periya Arasady, | 021 227 0333 |
| Kilinochchi | : 01, Kanagapuram Road, | 021 228 5444 |
| Vavuniya | : 115, Mill Road, | 024 222 6060 |
| Mannar | : Convent St, Sinnakadai, | 023 222 3377 |

Branches in Islandwide ➡ Anuradhapura, Bandarawela, Battaramulla, Batticaloa, Colombo, Empilipitiya, Galle, Ja-Ela, Kalmunai, Kandy, Kegalle, Kiribathgoda, Kurunegala, Matale, Matara, Nawlapitiya, Negombo, Piliyandala, Polonnaruwa



BRITISH COUNCIL | IELTS

அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

யாழ் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்...!

இப்பொழுது **BBS** ஆனது **British Council** இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

Academic, General
IELTS பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள், BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்..

**BBS இல் ஆங்கில வகுப்புக்கள்**

- Certificate in English
- Diploma in English
- Advanced Diploma in English
- IELTS

- O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.
- தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
- வசதிக்கேற்ப நேர அட்டவணை.
- பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்.
- ஒலிக்கருவி பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
- வாரஇறுதிநாட்கள் மற்றும் வார நாட்களில் வகுப்புக்கள்.
- இலக்கண வகுப்புக்கள்
- பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- தமிழ் மொழியில் விளக்கங்கள்.
- விசேட செயற்திறன் பயிற்சிகள்.

British Business School — Where Students Come First

**பாலர் பாடசாலை**
சர்வதேச தரத்தில், ஆங்கிலத்துடன் தமிழிலும்

8th Anniversary

| Play Group 2-3 Years | Montessori 3 - 4 Years | Pre-School 4 - 5 Years |
|---|---|---|

கற்பித்தல் முறை
சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method.
ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்.

விசேட நிகழ்ச்சிகள்:
English Concert, குதூகலவிழா, ஒளிவிழா, Pre School Graduation, சித்திர கைவினை கண்காட்சி, விளையாட்டு விழா.

அச்சுவேலியில், அரசினர் வைத்தியசாலை அருகே
புதிய வளாகம் நல்லூர் தேர் (07.09.2010) அன்று ஆரம்பம்.

எல்லா வளாகங்களிலும் புதிய தவணைக்கு அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**BBS இன் 9 வளாகங்கள்**

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோவில் வீதி, நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi Cottage (புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |

யாழ் மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
இலவச கண் சிகிச்சை முகாமும், விசேடவிலையில் கண்ணாடி வழங்கலும்.

நல்லூர் ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் **BBS** வளாகத்தில் பிரபல *Specs* நிறுவனத்தினரால் நடாத்தப்படும் இலவச கண்சிகிச்சை முகாம்.

September 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில்
இலவச கண்சிகிச்சை முகாம்.

- இலவச கண் பரிசோதனை.
- சிறந்த விலைக்கழிவில் கண்ணாடிகள்.
- மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு.

விற்பனை வருவாயின் 5% புலோலி சிறுவர் கிராமத்திற்கு அன்பளிக்கப்படும்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, உறவுகளையும், உடமைகளையும் இழந்த சிறார்களுக்கு, புலம்பெயர்ந்த / உள்நாட்டுதொப்புள் கொடி உறவுகளின் உதவியுடன் நடாத்தப்படும் சிறுவர் கிராமம்.
புலோலி சிறுவர் கிராமம், உபயகதிர்காமம், புலோலி.
தொடர்பு: 0773627055 / 0774083656


British Business School — Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி, நல்லூர். Contact: 021 222 5796, 0773627055, 0776646357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் 'றோலர்' படகை கைவிடுவதற்கு ஒரு வருட கால அவசாகம்



**'றோலர்' மீன்பிடித் தடை உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இந்திய மீன்வர்களுடன் பேச்சு நடத்துவதற்கு இலங்கை மீனவர்களின் பிரதி நிதிகள் 23 பேர் அடங்கிய குழு கடந்தவாரம் இந்தியா பயணமாகியிருந்தது. இந்தப் பேச்சுக்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக அந்தக் குழுவுக்குத் தலைமை வகித்துச்சென்ற யாழ்.மீனவர் சங்கப் பிரதிநிதி க.சூரியகுமாரன் 'உதயனுக்கு' வழங்கிய செவ்வி இது.**

## இந்திய மீனவர் குழுவொன்றும் விரைவில் நிலைமைகளை ஆராய இலங்கை வரும்

## இரு தரப்புச் சந்திப்பின்போது நிபந்தனைகளுடன் உடன்பாடு என்கிறார் யாழ்.பிரதிநிதி சூரியகுமாரன்

**சந்திப்பு: சங்கர்**

இலங்கை கடல் எல்லையினுள் அத்துமீறி நுழைந்து 'றோலர்' படகை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதை முற்றாக தடைசெய்யும் நோக்குடன் முதல் கட்டமாக ஒருவருட கால அவகாசம் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியா சென்று இந்திய மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய இலங்கை மீனவர்கள் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் கந்தவனம் சூரியகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாகச் சூரியகுமாரிடம் கேட்டோம்.

இது குறித்து அவர் வழங்கிய முழுமையான செவ்வி இங்கே:

கடந்த 30 வருட காலமாக எமது மக்கள் பல்வேறு துன்ப துயரங்களை கடந்து வந்துள்ளனர். யுத்தம் நிறைவடைந்த 2009ஆம் ஆண்டின் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள எமது மக்கள் இலங்கை அரசிடமிருந்து உதவிகள் கிடைக்கும் என நம்பியிருக்கவில்லை. அவ்வாறு கிடைக்கப்போவதுமில்லை. எமது கடல் அன்னை எம்மை வாழவைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதன் காரணமாகத்தான் நகைகளை அடகு வைத்தும், பணத்தை அதிக வட்டிக்கு பெற்றும் மீளக் கடற்றொழிலை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த நிலையில் இலங்கை கடற்பரப்பினுள் றோலர் படகுடன் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகள் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றமை எமது நாட்டு மீனவர்களுக்கு மேலும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. எமது மீனவர்கள் பாரம்பரிய தொழில் உபகரணங்களுடன் கடற்றொழில் மேற்கொள்ளும்போது அவர்களின் வலைகளைச் சேதப்படுத்தி அழித்து விடுகின்றன. தமிழக மீனவர்களின் றோலர் படகுகள் ஆயிரக்கணக்கில் வரும். இந்த றோலர் படகுகள் எமது கடல் வளத்தை அள்ளி செல்வதுடன் அதன் விருத்தியை பாதிப்பதாகவும் உள்ளன.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் 2004ஆம் ஆண்டு இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தை முதல் கட்டமாகக் கொழும்பில் இடம்பெற்றது. சுனாமிப் பேரலை அனர்த்தம், தீவிரமடைந்த உள்நாட்டு யுத்தம் ஆகியன காரணமாக இந்தப் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் போயிற்று.

இந்த வருடம் மீளவும் இலங்கை - இந்திய மீனவர்கள் சந்தித்துப் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

நீர்கொழும்பிலுள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், தென்னிந்திய மீனவர் சங்கம் ஆகியனவற்றின் ஏற்பாட்டிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எமது குழுவில் 23 பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சமாசப் பிரதிநிதிகள், கியூடெக், தேசிய மீனவர் ஒத்துழைப்பு கழக பிரதிநிதிகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர், மன்னார் மாவட்டப் பங்குத் தந்தை ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணத்தை எமது குழுவின் தலைவராகத் தெரிவு செய்திருந்தோம். கடந்த 16ஆம் திகதி தென்னிந்தியாவிற்கு பயணமாக நாம் விமான நிலையத்துக்கு சென்றோம். எஸ்.தவரட்ணத்துக்கான விசாரணை இன்னும் முடிவடையவில்லை. எனவே அவர் மறுநாள் விசேட விமானத்தில் வருவார் என எமக்கு இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் கூறப்பட்டது. பின்னர் அவருக்கான விசா மறுக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

தென்னிந்தியா சென்ற எமக்கு எமது குழுவின் தலைவர் எஸ்.தவரட்ணம் எம்முடன் வராதது பெரிய சிக்கல்களை ஏற்படுத்தின. இருந்தும் எமது நிலைப்பாட்டைத் தமிழக மீனவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற இலக்கை அடையக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது என்பதற்காக எமது குழுவினரின் ஆலோசனைக்கு ஏற்ப அந்தக் குழுவின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன்.

தென்னிந்திய மாவட்டங்களான இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகபட்டினம் ஆகிய மாவட்டங்கள் தோறும் உள்ள மீனவர் கிராமங்களுக்குள் சென்றோம்.

தென்னிந்திய மீனவர் கிராமங்களுக்குள் செல்லும்போது எமக்கான வரவேற்பு எவ்வாறிருக்கும் என நினைக்கும்போது தயக்கம் ஏற்பட்டது. நிலைமை எப்படி யிருந்தாலும் எமது நிலைப்பாட்டை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் என்பதில் திடமாக இருந்தோம்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு தங்கச்சிமடம் பகுதியில் மிகப் பிரமாண்டமான கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொள்ளச் சென்று கொண்டிருந்தோம். கூட்டம் இடம்பெறவிருந்த அனைத்துப் பகுதிகளிலும் எமது இலங்கை உறவுகளே வருக! வருக! என பதாதைகளும் 'கட்டவுட்'களும் வைக்கப்பட்டருந்தன. பட்டாசு சத்தங்கள் காதுகளைக் கிழிக்க உற்சாகத்துடன் எம்மை வரவேற்ற தமிழக மீனவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இது எமக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எமக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தவேளை எமது தரப்பு நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட தொழில்கள் எதுவும் செய்ய அனுமதிக்க முடியாது என அங்கு குறிப்பிட்டோம்.

தென்னிந்திய மீனவர் கிராமங்கள் அனைத்திலும் இடம்பெற்ற பொதுக் கூட்டங்களிலே இவ்வாறே எமது தரப்பு நிலைப்பாட்டைத் தெரிவித்து வந்தோம். தென்னிந்திய மீனவர்களின் உள்ளத்தை உருக்கக் கூடிய விதமாக எமது நாட்டு மீனவரின் துன்ப துயரங்களை எடுத்து விளக்கினோம். அவர்களும் எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர்.

சென்னை நகரில் கிண்டிப் பிரதேசத்திலுள்ள பறங்கி மலையிலுள்ள சென்.தோமஸ் ஹோட்டலில் இடம்பெற்ற மூன்று நாள் கலந்துரையாடல்களின் போதும் இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்து 'றோலர்' படகினை பயன்படுத்துவதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டோம்.

தென்னிந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அகஸ்ரின் அன்ரனி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல்களில் சுமார் 30 வரையிலான பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழக அரசினால் மானிய விலையில் 'றோலர்' படகுகள் வழங்கப்பட்டு அதற்கான பயிற்சிகளும் எமக்கு வழங்கப்பட்டன. 'றோலர்' படகு தொழில் தவிர்ந்த எனைய தொழில் எம்மிடமில்லை. எனவே உடனடியாக அதனைக் கைவிடுமாறு கேட்பது எந்த விதத்தில் நியாயமானது. தமிழக அரசு மாற்றுக் கடற்றொழிலுக்கு உதவிகள் வழங்க முன்வரவில்லை. எமது கடற்பகுதியில் குறிப்பாக இராமேஸ்வரத்தில் கடல்வளம் இல்லாத நிலைமையிலேயே இலங்கைக் கடல் எல்லைக்குள் நாம் வரவேண்டியுள்ளது - எனத் தமிழக மீனவர்கள் அங்கு தெரிவித்தனர்.

நாகபட்டினத்திலிருந்து இராமேஸ்வரம் வரையான கடற்பகுதியில் ஏறக்குறைய 10 ஆயிரம் இழுவைப்படகை பயன்படுத்திய தமிழக மீனவர்கள் உடனடியாக றோலர் படகுத் தொழிலைக் கைவிடமுடியாத நிலையில் இருப்பதனை எம்மால் உணர முடிந்தது. எனவே நாம் இரண்டு தரப்பினரதும் கோரிக்கைகளில் சில மாற்றங்களைச் செய்துகொள்ளத் தீர்மானித்தோம்.எனவே நாம் மனித நேய அடிப்படையில் சகோதரத்துவ உணர்வுடன் இந்திய மீனவர்களிடம் எமது தரப்புக் கோரிக்கையை முன்வைத்தோம். மிகவும் இறுக்கமான நிபந்தனைகளுடன் எமது தரப்பு நிலைப்பாட்டை அவர்களிடம் தெரிவித்தோம்.

இலங்கைக் கடல் எல்லையினுள் அத்துமீறி நுழைந்து ' றோலர்' படகினைப் பயன்படுத்துவதை முற்றாக தடைசெய்யும் நோக்குடன் முதல் கட்டமாக ஒரு வருட கால அவகாசம் வழங்குவது எனத் தீர்மானித்தோம்.

அந்த ஒரு வருட காலத்தில் மட்டும் 'றோலர்' படகைப் பயன்படுத்த முடியும். படகுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். வாரத்தில் புதன், சனி ஆகிய இரண்டு நாள்கள் மட்டுமே தொழிலில் ஈடுபட முடியும். அந்த நாள்களில் ஒரு நாளுக்கு 12 மணித்தியாலங்கள் கடற்றொழிலில் ஈடுபடமுடியும். ஒரு வருட காலத்தில் 70 நாள் மட்டுமே அனுமதிக்கப்படும் எனவும் இதில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் எமது கடல் பகுதியான காங்கேசன்துறைக்கு வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இலங்கை- இந்திய கடல் எல்லையிலிருந்து 4கிலோ மீற்றருக்குள் மட்டுமே உள்வந்து தொழில் செய்ய முடியும். மேலும் மன்னார் கடற்பரப்பில் 3 கிலோ மீற்றருக்கு வெளியே இறால் மடி, இழுவைப் படகு பயன்படுத்தலாம். இரட்டைமடி வலையை எந்தக் காரணம் கொண்டும் எமது கடல் பகுதியில் பயன்படுத்த முடியாது என நாம் அவர்களிடம் தெரிவித்தோம்.

இந்த உடன்படிக்கையை நவம்பர் மாதம் முதலாம் திகதி அமுல்படுத்துவது எனவும் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைக் கண்காணிப்பதற்கு இரண்டு நாட்டு மீனவர் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவை நியமிப்பது எனவும் தீர்மானித்தோம்.

இந்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு முன்னர் தென்னிந்திய மீனவர் பிரதிநிதிகள் எமது பகுதிக் கிராமங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் கண்டும் கேட்டும் அறிய வேண்டும். அதன் மூலம் தென்னிந்திய மீனவர்களும் எமது கோரிக்கையில் உள்ளடங்கியிருந்த யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தோம். அதன் பின்னர் இந்த உடன்படிக்கையின் நகல் எமது பகுதி பிரதேச சமாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மக்களின் கருத்துக்கள் அறியப்பட்டு அவை அறிக்கையிடப்பட்டு இலங்கை கடற்றொழில் ரீதியில் வளத்துறை அமைச்சருக்கு அதனை அனுப்பி வைப்போம்.

ஏனென்றால் இலங்கை - இந்திய கடல் எல்லை தொடர்பான விடயம் இரண்டு நாட்டு அரசாங்கங்களுடனும் தொடர்புபட்ட விவகாரம் ஆகும். அதில் நாம் தலையிட முடியாது.

எமது பயணத்தின்போது இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் நாயகம் எஸ்.பத்திரன, உதவி இயக்குனர் எஸ்.தில்கரத்தின மற்றும் லால் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். அவர்கள் அங்கு இடம்பெற்ற கூட்டங்கள், கலந்துரையாடல்களில் பார்வையாளராக அமர்ந்து அனைத்தையும் அவதானித்து வந்தனர். இலங்கை அதிகாரிகள் போலவே இந்திய அரச அதிகாரிகளும் பார்வையாளராகப் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு நாட்டு அரசுகளும் இருக்க இரண்டு நாட்டு மீனவர்களும் சந்தித்து மனந்திறந்து உரையாடியுள்ளமை புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராமஜெயம்

யாழ்.வண்ணை

# ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி உற்சவம் 01.09.2010 (புதன்கிழமை)

கண்ணன் அடியார்களே!

உலகோர் உய்ய பகவத்கீதையை அருளியவனும், ஆபத்பாந்தவனும், அநாதரட்சகனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் ஆவணித் திங்கள் 16ஆம் நாள் (01.09.2010) புதன்கிழமை மாலை 4 மணிமுதல் ஸ்ரீவேணு கோபால சுவாமிக்கு அஷ்டோத்தர (108) கலச சங்காபிஷேகமும் விசேட தீபாராதனை வழிபாடுகளுடன் சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும்.

★ தொடர்ந்து இரவு 9.30 மணிக்கு பஜனை: தேவஸ்தான பஜனைக்குழுவினர்

★ இரவு 10 மணிக்கு வேணுகான இசைநிகழ்வு

வீணை: கலாவித்தகர் திருமதி குமுதா உமாகாந்தன்

மிருதங்கம்: இசைக்கலைமணி திரு.சி.துரைராசா

கடம்: இசைக்கலைமணி திரு.அ.செல்வரத்தினம்

★ நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணனின் ஜனன பூஜை மற்றும் தாலாட்டு நிகழ்வுகள்நடைபெற்றபின் ஸ்ரீகிருஷ்ணபாலன் வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளுவார். வசந்தமண்டபத்தில் ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி காயம் அடியார்களுக்கு வழங்கப்படும்.

### உறியடி உற்சவம்

ஆவணித் திங்கள் 17ஆம் நாள் 02.09.2010 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வசந்தமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வெளிவீதி திருஉலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சி வழங்கி உறியடி உற்சவம் நடைபெறும். அடியார்கள் இப்புனித நாள்களில் தேவஸ்தானத்திற்கு வந்து விழா நிகழ்வுகளில் கலந்து கண்ணபிரான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்.

ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை, யாழ்ப்பாணம்.

ஆதீன மஹாசபை.
தொ.பே.இல: 0212222476

---

ICTA ideas actioned YMCA

ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள ஆர்வம் உள்ளவர்களா?

## "English Language Skills for Students & Youth"

Supported BY:
" Information & Communication Technology Agency " (ICTA)

- Reading writing & Spoken with Grammar
- Computer Based Practices
- Practicalexercises
- Spoken Practices

Cours Duration: 03 Months - Leading to GATEWAY Exams.
Limited opportunity - Apply early

*For further details please contact:* 021 222 2499

General Secretary - YMCA Jaffna

---

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## அ.யோகானந்தா

(BSc.(cey), Dip. in Education (Srilanka),
Assistant Director of Education - Maths, Thenmaradchi

திதி: அபரபக்க பஞ்சமி
(29.08.2010)

பிறப்பு: 16 - 10 - 1952 இறப்பு: 04 - 09 - 2004

ஆண்டுகள் ஆறு உருண்டோடியதப்பா!
கண்டதெல்லாம் கனவாகிப்போனதப்பா!
நேற்றுவரை எம்மோடு இருந்தீர்!
இன்று எங்கே சென்றீர் ஐயா!
வையகம் இயங்குவது பௌதிகத்திலென்பீர் - அந்த
பௌதிகத்திற்கே சிறப்பு உம் அறிவு தான் ஐயா!
காலத்தினால் இட்ட கட்டளையை
ஞாலத்தில் யாரும் வென்றதில்லை - ஐயா!
ஞாலத்தில் உம் மாணாக்கர் உள்ள வரை
உங்கள் நினைவலைகள் இருக்கும் ஐயா!

51, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மகள்மார், மருமக்கள்,
பேரன், பேர்த்திமார்.

---

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய், 7ஆம் கட்டை ஐயனார் கோயில் வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773013060

## விற்பனைக்கு

பழைய ஓடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 39,M.P.C.S.ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே:- 0214920295

## வேலையாள்கள் தேவை

தென்மராட்சியில் இயங்கும் யாழ்.ரெக்ஸ் நிறுவனத்திற்கு

- கணனி இயக்குநர்:- பெண்கள்
- விற்பனையாளர்:- ஆண்கள் தேவை.

இன்று (29.08.2010) காலை 8-மாலை 5 மணிவரை நேரில் சமூகம் தரவும்.
தொடர்பு:- இல.13, நவீன சந்தை, சாவகச்சேரி.

## கடை வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:- 0770851881, 0212270010

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை Courts Road இல் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்பு 6 குழி காணி விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு:* 011 2360220

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா நிரந்தரப் பிரஜாவுரிமையுடன் மின்னணுப் பொறியியலாளராகக் கடமையாற்றும் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள 5'11" உயரமுடைய திருமணமாகாத மணமகனுக்கு 45 வயதுக்குட்பட்ட பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு: 0773550348
Email: goodguess99@hotmail.com.

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி றோட்டிலிருந்து 50 யார் தொலைவில் 2ஆவது காணி, 6 பரப்பு நவீன வசதிகள் கொண்ட, 2,000 சதுர அடிக்கு மேற்பட்டது. சுற்று மதிலுடன் கராஜ், கொட்டில் வசதிகளுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776522098, 0775099332, 0214921490

## வகுப்பு

German Swiss மொழி வகுப்புகள் A-I Exam இற்கு ஏற்றவாறு CD புத்தக விளக்கத்துடன் நடைபெறுகின்றன. அடுத்த பிரிவு September ஆரம்பமாகின்றது. German Institute, 10, Palaly Road, Jafffna.
T.P.: 0771604823, Kajenthini

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரம், ஐஸ்பழம் தயாரிக்கும் இயந்திரம் என்பவற்றுடன் குளிர்சாதனப் பெட்டிகள் (Deep- freeze) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 7 மணி தொடக்கம் 11 மணி வரை
தொடர்பு: 0774147213

## விற்பனைக்கு

சங்கானை M.P.C.S இற்கு அருகில் வியாபார சுற்றாடலில் அமைந்த 1000 சதுர அடி விஸ்தீரணமுடைய வாகனத் தரிப்பிட வசதிகளும் அமைந்த கடைகள் விற் பனைக்குண்டு.
தொடர்பு: 0777743400

## மணமக்கள் தேவை

யாழ். கத்தோலிக்க பெற்றோர் அவுஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை பெற்று Electronic Engineer (வயது 38) ஆக பணிபுரியும் மணமகனுக்கு அவுஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை பெற்று Solution Analyst (வயது 36) ஆக பணிபுரியும் மகளுக்கும் தகுந்த மணமக்களைத் தேடுகின்றனர். குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல. 4063, மே/பா உதயன்

## மணமகள் தேவை

ஆண், கௌரவகுடும்பம், [illegible] தொழில் முதலாளி (யாட்) ஒரு கோடி பெறுமதியான சொத்துக்களுக்கு உரிமையாளர், சகோதரர் இருவர் வெளிநாட்டில் மணமகன் ஆணழகன், நட்சத்திரம் பரணி, ஆண்டு 1978, [illegible], லக்கினத்தில் சந்திரன் [illegible] தீர்க்க சுமங்கலி திருமண சேவை
24, [illegible] லேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 புறொயிலர் குஞ்சுகள் 06.09.2010 அன்று காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே: 0212226944

பதிவு செய்யும் இடங்கள்

சன்னதி பாம் சென்ரர்
சன்னதி தொ.பே. 0776904590

நெல்லியடி விற்பனை நிலையம்
நெல்லியடி தொ.பே: 0774656377

சூட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
021 321 6990

## மணமகன் தேவை

1979, அத்தம், 3ஆம் பாதம், லக்கினத்தில் நீச செவ்வாய், மொத்த பாவம் 60, SLAS உத்தியோகத்தில் உள்ள மணமகளிற்கு தகுதியான மணமகன் தேவை. (வடமராட்சிப் பிரதேசம் விரும்பத்தக்கது.)
தொ.பே.: 0775526091, 0774159507

---

### கணனி கொள்வனவு

கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தின் பயன்பாட்டிற்கென கணனித் தொகுதியை கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இதனால் கணனித் தொகுதியை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டுப் போட்டி

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் (2010 ஆம் ஆண்டு) விளையாட்டுப் போட்டிக்கான அட்டவணை தயாரித்தல் தொடர்பான நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. விளையாட்டுக் கழக அங்கத்தவர்களை சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

# கண்ணீர் அஞ்சலி



பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## Dr.யமுனா மார்க்கண்டு

(MBBS, MD, MRCP (UK)
(MILTON KEYNIS HOSPITAL - UK)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நடராசா சூரியகுமாரன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் குணபாலசிங்கம்



கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குணபாலசிங்கம் கடந்த (26.08.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜரூபன், நிருஜா(கனடா), நிரூஜன், திரிபுரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதாஸ் (கனடா) வின் அன்பு மாமனும் சரோஜினி, சிவசக்தி, புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரனும் சண்முகவடிவேலின் பாசமிகு மைத்துனரும் மகேஸ்வரன்-பஞ்சலட்சுமி தம்பதியரின் சம்பந்தியும் நிலாஸ்(கனடா), நிவாஸ்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.08.2010) ஞாயிற்றுக்கிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெங்கியடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
0779184122

தகவல்:
(சி/570401) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை எம்மிடம் உள்ள வேளை அருத்தவரை துன்புறுத்தின் அது மீள வந்து நம்மைத் தாக்கும்!

"சமூக மாற்றத்தை ஏற்படுத்தாமல் சமூகத்தைப் பிரதிபலித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பல்கலைக்கழகமல்ல ஒரு பெரிய பள்ளிக்கூடமே!" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பான ஒரு நீண்ட விவாதம், "தேசம்" இணையத்தளத்தில் தொடர்கிறது. இவ்விவாதம் இதுவரை பேசப்படாத பல விடயங்களை மக்கள் தளத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

மேலும் தமிழ் அறிவியல் சமூகம் - அதன் ஸ்தாபனமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றியுமான ஒரு மீள் மதிப்பீட்டின் அவசியத்தை இந்த விவாதம் வலியுறுத்தி இருந்தது. இலக்குகள் மீள் வரைபுக்கு உட்பட்டுத் தன் சுயாதீனத்தையும் சுய அடையாளத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னை மீள் நிர்ணயம் செய்ய வேண்டிய அவசரமும் அவசியமும் தற்போது ஏற்பட்டு உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டு அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத அரசியல் சூழலில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல் அவர்களுடனான இந்த நேர்காணல் இந்த விவாதத்தை மற்றுமொரு தளத்திற்கு நகர்த்தும் என்கிறது "தேசம்" இணையத்தளம். அவரது உரையாடல் மொழியிலேயே பதில்கள் தரப்பட்டுள்ளன.

கேள்வி:- உங்களைப் பற்றிய ஒரு ஆழமான சுருக்கமான அறிமுகம்...

பதில்:- ஃகூல் குடும்பத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீநிவாசன் ஆவார். அவர் பருத்தித்துறையில் ஒரு சைவக் கோயில் மணியகாரன். ஆனால் 1845 ஏப்ரல் 15 ஆம் திகதியன்று கனம் பீற்றர் பேசிவல் ஊழியத்தால் ஞானஸ்ஞானம் பெற்று பின்பு பேசிவலோடு மெதடிஸ் திருச்சபையிலிருந்து அங்கிலிக்கன் திருச்சபைக்கு 1850 மட்டில் மாறினார். இதிலிருந்து நாம் நல்லூர், சுண்டிக்குழி ஆகிய அங்கிலிக்கன் ஸ்தாபனங்களைக் கொண்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறோம். ஊர் என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் சிக்கலானது.

எனது அம்மாவின் தகப்பனார் சாமுவேல் சங்கரப்பிள்ளை சோமசுந்தரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் கொடிமர சங்கரர் என்ற பட்டத்தை உடையவர். மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, கருகம்பானை ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர். மாவிட்டபுரம் கோயிலின் மூலஸ்தானத்திலுள்ள மூன்று விக்கிரகங்களில் இடது பக்கமாகவுள்ளது சோமசுந்தரத்தின் தமையன், முதலியார் பிள்ளையால் திருவிழாவில் கொடியேற்றும் உரிமையைத் தொடர வாரிசு வேண்டி நேர்த்திக் கடனாகக் கட்டியது.

சோமசுந்தரம் கிறிஸ்தவனாகிப் பரியோவான் கல்லூரியின் டீன் ஆகவும், சுண்டிக்குழி, சோமசுந்தரம் வீதியில் வீடு கட்டி, பின் நல்லூரில் 32

**மனித உரிமைகள் என்பதன் பொருள்**

நியூயோர்க் இலங்கைத் தமிழ் சங்கத்தின் பத்திரிகை ஆசிரியனாகவும், (1983 / 1984) செயற்பட்டு Tamil News என்ற வெளியீட்டை வைத்தியர் நாகேந்திராவின் தலைமையில் செய்தேன். ஆனால் நாமே எம்மைக் கொல்லத் தொடங்கியதும், எங்கள் நிறுவனங்கள் யாவும் அவற்றை ஆதரித்ததும் கண்டு நான் தனியாய் இயங்கி எங்கு மனித உரிமைகளைப் பேண முடியுமோ அங்கு செய்யக் கூடியதைச் செய்து வருகிறேன். மனித உரிமைகள் தமிழரின் மட்டுமல்ல, பெண்கள், பிள்ளைகள், சாதிப் பெயரில் தாழ்த்தப்படுவோர் போலப் பலரையும் அடக்கும்.

மேலும் என் பாட்டனுக்கும் அப்பாவுக்கும் குரு உடைகள் (Cassock) தைத்தவர் ஒரு இஸ்லாமிய தையலாளர். அவர் மகன்மார் ரஃபிக், ஸசீற் ஆகியோர் பரியோவான் கல்லூரியில் படித்து, என்னையும் என் சகோதரரையும் Brother என்று அழைத்து, பிரதான வீதியில் கடை வைத்து, எமது உடுப்புகளைத் தைத்தனர். அவர்களைத் துரோகிகள் என்று குடியெழுப்பியது, எல்லாமே எனக்குப் புளித்துவிட்டது. அதை ஆதரித்த என்னுடன் தமிழ் அரசியலில் இயங்கிய அமெரிக்கத் தமிழ் நண்பர்களைச் சகிக் முடியாத நிலையேற்பட்டது.


கே:- மனிதன் ஒரு சமூக விலங்கு என்பார்கள். நீங்கள் சமூகம் பற்றிய ஆழமான அக்கறையுடைய ஒரு மனிதர். அந்த வகையில் சமூக மாற்றம் பற்றிய உங்கள் இளமைக்காலக் கனவுகள், எதிர்பார்ப்புகளுக்கு உங்கள் கல்வியியல் சாதனைகள் துணைபுரிந்துள்ளனவா?

ப:- நான் கிறிஸ்தவனாக வளர்க்கப்பட்டேன். குடும்பமாக திருவிவிலியத்தை வாசித்து வந்தோம். என் கனவுகள் எல்லாம் அந்த அடிப்படையில் அமைந்துள்ளன. கடவுள் கெட்டவர் உட்பட யாவரையும் நேசிக்கிறார். இந்த அடிப்படைக் கூற்றிற்கு அமைய விதவைகளையும் அனாதைகளையும் பேணல், ஊர் பெயரும் தற்காலிக வாசிகளைப் பராமரித்தல், மறியலில் உள்ளோரைப் பார்த்தல், அறுவடை நேரம் உண்டு.

கே:- இலங்கையிலும் இலங்கைக்கு வெளியே உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களிலும் பட்டப் படிப்பை மேற்கொண்டும் அப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் ஆய்வாளராகவும் கடமையாற்றி உள்ளீர்கள். அவற்றின் ஒப்பு நோக்கில் கடந்த ஆறு சகாப்த சுதந்திர இலங்கையில் பல்கலைக்கழகங்கள் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக கலாசார அம்சங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

ப: சிங்களவரும் தமிழரும் மார்க்க ஏகாதிபத்திய சரித்திரம் எழுத வெளிக்கிட்டிருக்கிறார்கள். மெய்யென்றாலும் பரவாய் இல்லை. பல படுபொய்கள் சரித்திரம் என்று பாடப்புத்தகங்களில் எப்படி சிறுபான் மையினரைத் தாக்குகிறது என்று யோசியாமல் எழுது கிறார்கள். எழுதி இலங்கையை நொருக்கிவிட்டார்கள்.

இலங்கையிலோ, மேல்நாட்டிலோ பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சியே முதற்கடமை. பட்டப் (B.A, B.Sc) படிப்பு அல்ல. இந்த அடிப்படையில் தான் விரிவுரைகள் ஒரு வருடத்திற்கு 9 மாதங்களுக்கு அதுவும் கிழமைக்கு 4 -5 மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன. இதை எல்லோரும் சரியாயச் செய்தால் எல்லாம் சீராக இருக்கும். அதனால் வரும்



பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல்

கூற்றுகளுக்கு இடையிலான போட்டியும் விவாதமும் இந்த மார்க்க ஏகாதிபத்தியத்தை முறித்திருக்கும். சிலர் சொல்வார்கள் இலங்கையில் வசதிகள் இல்லாமல் ஆராய்ச்சி செய்ய முடியாததென்று. அப்படியென்றால் எப்படி ஒவ்வொரு வருஷமும் சுமார் 150 இலங்கையர் ஜனாதிபதியின் பரிசைத் தமது ஆராய்ச்சிக்கு வெல்லுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் மீண்டும் அடிப்படை ஆராய்ச்சி செய்யப் பல வாய்ப்புக்கள் தலைப்புகள் எல்லாத்துறைகளிலும் உள்ளன.

## யாழ்ப்பாணத்தில் பல தலைப்புக்களில் ஆராய்ச்சி செய்வதற்கான வாய்ப்புக்கள் எல்லாத் துறைகளிலும் நிறையவே உள்ளன

வருடம் குருவாகவும் இயங்கினார். என் ஐயாவின் தாய் பக்கம் ஏழாலையைச் சேர்ந்தவர்கள்.

என் மனைவி துஷியந்தி ஆசீர்வாதம். ஐந்து பிள்ளைகள்.

அரசியல் பின்னணி என்றால் தமிழரசுக் கட்சி செல்வநாயகம், திருச்செல்வம் (தகப்பன் - மகன் - நீலன் திருச்செல்வம்), நாகநாதன், கதிரவேற்பிள்ளை, வன்னியசிங்கம், தர்மலிங்கம் யாவரும் ஏதோ ஒரு விதத்தில் எனக்குச் சொந்த மானவர்கள். அப்பா ஃகூல் போதகர். அவர்கள் TULF மேடைகளில் பேசாமல் உட்கார்ந்து இருப்பார்.

படித்தது நல்லூர் சாதனா பாடசாலை மற்றும் பரியோவான் கல்லூரி. பட்டங்கள் D.Sc(Eng) London, Ph.D.Carnegie Mellon, MSc (Distinction London), B.Sc. (Ceylon / Katubedde), IEEE Fellow, C.Eng.

கே:- உங்கள் இளமைக்காலம் தமிழ்த்தேசிய எழுச்சியுடன் பின்னிப் பிணைந்ததாக இருக்கும் என நினைக்கிறேன். அதனை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?

ப:-குறிப்பாகப் பெரிதாய் ஒன்றும் இல்லை. அம்மா நல்லூர் பரி. யாக்கோபு ஆலயப் பெண்களுடன் சத்தியாக்கிரகம் இருக்கப்போனபோது நான் துணையாகப் போவேன். சொந்தக்காரர் தமிழரசுக் கட்சி வேட்பாளரானபோது நானும் சிறு பெடியனாக அவர்களுடன் ஒரு வால் போலப் போனேன். 1970 இல் மாணவர் பேரவை ஊர்வலங்களில் ஈடுபட்டிருந்தேன். 1986 வரை இயக்கங்களுக்கு ஆதரவு என் மனதில் இருந்தது. என் அண்ணன் ஒருவர் சத்தியசீலன், தோமஸ் அரியரத்தினம் ஆகியோருடன் சுப்பிரமணியம் பூங்காவில் வகுப்புகளுக்குப் போனவர்.

ஒரு பங்கை அறுக்காமல் ஏழைகளுக்கு விடல் போன்ற பல கட்டளைகள் வேதவசனத்தில் உள்ளன. இவை யாவும் எம் மத்தியில் சமத்துவத்தைப் பேணுகின்றன. ஆகவே உங்கள் கேள்விக்குப் பதிலாக, என் சமயக் கல்வியே என் கனவுகளை உருவாக்கியுள்ளது. சமயசார்பற்ற கல்வியில் சமத்துவத்திற்கோ மனித உரிமைகளுக்கோ அடிப்படை காண்பது கஷ்டம்.

**பல்கலைக்கு உள்ள பொறுப்பு**

கே:- சமூக மாற்றத்திற்கு அல்லது சமூகப் பொறியியலுக்கும் அறிவியல் சமூகத்திற்கும் உள்ள உறவுபற்றி குறிப்பிட முடியுமா? பல்கலைகழக சமூகத்தை அறிவியல் சமூகமாக வரையறுக்க முடியுமா?

ப:- மேற்கூறியவாறு சமூகக் கல்வியில் எது சரி, எது பிழை என்பதற்கு அடிப்படையில்லை. நான் Ethics for Engineers என்ற ஒரு பாடம் கற்பிக்கிறேன். பல்கலைக்கழகத்தில் நாம் சமயம் சாராமல் படிப்பிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் புத்தகங்களில் இன்னும் ஒரு திருப்தியான அடிப்படையில் சரி - பிழைக்கு வரைவிலக்கணம் இல்லை. ஆகவே சுயநலத்தையே அடிப்படையாக வைத்துப் பலர் கற்பிக்கிறோம். உதாரணமாக மனித உரிமைக்கு அடிப்படை 'அதிகாரம் வல்லமை உள்ள நாம் இன்று மற்றோரை நசுக்கலாம். ஆனால் நாளை இந்த அதிகாரம் வல்லமை மறுபக்கம் மாறினால் அவர்கள் அதே துன்புறுத்தலை எமக்குச் செய்யலாம். ஆகவே இருவரும் சேர்ந்து உரிமைகளைப் பேணும் ஒரு [illegible] இதில் பல்கலைக் கழகத்திற்குப் பெரிய பொறுப்பு

**நேர்காணல்:- க.ஜெயபாலன்**

கே: 19 ஆம் நூற்றாண்டில் இருந்த பல்கலைக் கழகம் பற்றிய கருத்தியலுக்கும் பல்கலைக்கழகம் பற்றிய தற்போதுள்ள கருத்தியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன? இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கருத்தியல் என்னவாக உள்ளது.

ப: காலப்போக்கில் பல்கலைக்கழகங்கள் மாறி வருகின்றன. பழைய காலத்தில் ஓர் ஆராய்ச்சியாளர் மாணவரை வைத்துத் தன் ஆராய்ச்சியை நடத்தினால் பல வருடங்களுக்குப் பின் ஆசிரியருக்குக் கலாநிதிப் பட்டம் (D.Sc, D.Litt.) வழங்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியின் நிமித்தம் கூடக் கூடப் பட்டதாரிகள் தேவைப்பட கல்வி ஜனநாயகப்படுத்தப்பட்டது. இதனுடன் வந்த ஆசிரிய தேவையை பல்கலைக்கழகங்களில் பூர்த்தி செய்ய கலாநிதிப் படிப்பு தனிமையாக பல வருடங்களில் முடிக்கும் நிலையிலிருந்து 2 -5 வருஷங்களில் ஓர் ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் செய்யும் பாடமாக மாற்றப்பட்டது. இதன் தாக்க விளைவையே இன்று காண்கிறோம். உலகெங்கும் அரசாங்கங்களும் முதலீடுசெய்கின்றன. ஆராய்ச்சிக்கு, ஆராய்ச்சியாளரே நிதி திரட்டுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தக விளைவு தரும் ஆராய்ச்சி மட்டுமே இப்படி மேலோங்குவது துக்கத்திற்குரியது. ஆராய்ச்சிக் கலாசாரம் வேரூன்றாத இலங்கையில் இது ஒரு பேரழிவு. குறிப்பாக எமக்கு வேண்டிய சமூக சரித்திர வட்டாரங்களில் கேடு தரும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் ஆங்கிலம்

ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்***

தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ?

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
Local and UK Certificates for Each Level

மாணவர்கள்,தொழில் புரிவோர்க்கான வகுப்புக்கள்

**City and Guilds UK Training and Certification*****

ESOL L1
ESOL L2
ESOL L3
Spoken English(KU/C&G)
IELTS Prep

New Intakes :05/09/2010 & 15/09/2010

பேசலாம் வாங்க !

City & Guilds Approved Centre

Web Site with full info: WWW.KUGROUP.INFO

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.
0777302882/0213208342

**Knowledge Universe**
Malaysian College of Business and ICT

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)



Your Future
# STUDY in UK
UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS

INTAKES @ September , October , November



- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

Also Handling :
- Tourist Visa
- Visit Visa
- Dependent Visa
- Administrative Review
- Re-Apply

Our Services for Students :
- Visa Consulting
- Career Advice
- Scholarship
- Accommodation
- Air Ticket
- Airport Pick-Up

Minimum Entry Qualification : O/L or Equivalent

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

OSIEG

| Jaffna Office: | Kotahena Office: |
| --- | --- |
| 111 / 2 , Brown Road, Kokuvil East,Jaffna Tel:021-2221875 | 169,George R De Silva Mawatha, Kotahena, Colombo-13. Tel: 011-2434989 , 011-2434767 |

After Office Hours & Sundays Please Contact - 077 3502612


# United Nations Development Programme

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP's programme portfolio in Sri Lanka includes the UNDP Support to Mine Action Project. The Project supports the Government to coordinate and manage Mine/unexploded ordnance clearance and other Mine actions in the North and East of Sri Lanka. The UNDP support to Mine Action Offices (DMAO) in Jaffna, is looking for experienced and energetic candidate to fill the following vacancies.

## VACANCIES

**IT/IMSMA (Information Management System on Mine Action) Assistant**
**Duty Station Jaffna ( 1 position)**

Following an initial period of orientation, the duties and responsibilities of the IT/IMSMA (Information Management System on Mine Action) Assistant are as follows:

- Support the maintenance of a national filing system for the Information Management System on Mine Action (IMSMA) and Task Dossier related documentation.
- Verify the entry of all minefield related information in IMSMA.
- Assist in collecting, verifying and maintaining IMSMA data relating to mine and UXO incidents and accidents, cross-checking with UNICEF, UNHCR, ICRC and other relevant sources.
- Support synchronizing all data between the IMSMA main server and other regional terminals on a regular basis using hard and electronic format. Correct inaccuracies of minefield and victim survey information.
- Produce maps, charts, presentations and reports as required.
- Maintain archived information in the IMSMA Archives.
- Assist IMSMA training and technical assistance to DMAO staff, Mine Action partners and stakeholders as needed.
- Provide general information technology support to the District Mine Action Officer, and District Mine Action Office.
- Support the District Mine Action Office in monitoring and evaluating Mine Actions and communicating effectively with partners.

**The successful candidate should possess the following qualifications:**

- Recognized Institutional Diploma (2 years) in computer sciences or a related subject; University degree in computer sciences or a related subject is desirable.
- At least 3 years experience in IT programme/project management.
- Experience in providing IT related training and technical assistance.
- At least 3 years work experience relating to database management (RDBMS and DBMS related experience highly desirable), GIS, SQL programming, and the MS Word package.
- A very good ability in topographical map reading.
- Demonstrated experience in preparing state-of-the-art charts, graphs, maps and reports.
- Ability to work accurately, travel and meet tight deadlines.
- Ability to organize work and collaborate effectively with a wide range of teams, including individuals of different national and cultural backgrounds.
- Good oral and written command of English as well as fluency in Sinhala/Tamil.

For full terms of reference please visit the UNDP Sri Lanka website "Jobs".
http://www.undp.lk

Candidates are invited to send an updated CV, containing details of educational & professional qualifications, work experience, the names of two non-related referees, an email address and a contact telephone number during working hours. Closing date for applications is on or before **Wednesday, 10th September 2010**. Applications should be forwarded to the Deputy Country Director (Operations) to the address given below. Candidates should compulsorily send separate applications/ e-mails for each position and duty station applied for, indicating the specific position and duty station on the top left hand corner of the envelope/s or in the subject line of the e-mail/s. Qualified female candidates are encouraged to apply. Only short-listed candidates will be contacted for an interview.

**The United Nations Development Programme**
**202-204, Bauddhaloka Mawatha, Colombo 7**
**E-mail: vacancy.lk@undp.org**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.10.1948 மறைவு 12.09.2009

## திருமதி பகவதியம்மா சத்தியமூர்த்தி

திதி: அபரபக்க அட்டமி (01.09.2010)

ஆறாது ஆறாது ஆறாது
ஆசை முகமின்றி - எம்
நெஞ்சு ஆறாது
உன் ஆசை முகம் தொலைந்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ!
ஆயிரம்பேர் எம்மைச் சூழ நின்றாலும்
யாரும் இல்லாதோர்போல் ஆனோமே
நிலையில்லா வாழ்வுதனை உணர்ந்தோம்
உம் பிரிவினிலே - அம்மா
உம்மைக் காணாது தேடிய எம் விழிகளுக்கு
நிழற்படமே விடையானதுவோ

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்:
பே. சத்தியமூர்த்தி,
'லக்சுமி பவனம்'
கே.கே.எஸ்.வீதி, வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 18 - xxxx தொடரிலக்கமுடைய FN14 ரக Nissan Pulsar கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0773791144



மணமகன் தேவை: 32 வயது, ரோகினி நட்சத்திரம், A/L சித்திபெற்ற கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு மணமகன்தேவை.
தொடர்பு: 0779155798



## மணமகள் தேவை

யாழ். நகரில் சொந்தமாக கடை நடத்தும் 50 வயது இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு 40 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0212227217,0770711365, 0775396682



## அருள்முருகன் திருமணசேவை

கல்வி, பதவி, தொழிற்தகைமைகள் கூடிய/சற்றுக் குறைவான/சாதாரண மணமக்களில் (Govt.officers, Teachers, Doctors,Engineers முதலானோரில்) விரும்பும் மணமக்களை பிற்பகல் 4.30 வரை நீங்கள் தெரிவு செய்யலாம். இந்து, கிறிஸ்தவ சகல சமூக மணமக்களுக்குமான கௌரவசேவை இது. (தரகரல்ல) 03,யாழ்.வீதி, சிறாம்பியடி லேன் (cosy Restauvant lane) பலாலி வீதி/ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9334


# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

9ஆம் ஆண்டு | 8ஆம் ஆண்டு





அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
பிரபல வர்த்தகர் மானிப்பாய் V.S.K)

திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி (பவளம்)

| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
| --- | --- | --- | --- |
| 27.12.1922 | 07.09.2001 | 10.02.1933 | 28.12.2002 |

திதி: ( பஞ்சமி 29.08.2010 ஞாயிறு) திதி: (தசமி 30.12.2010 வியாழன்)

அன்பினைத் தளமாக்கி அறிவினை வளமாக்கி பண்பினை பாசமாக்கி
தருமத்தை நெறியாக்கி நீங்கள்
வாழ்ந்த வாழ்க்கைதனை என்றும் நினைவு கூருகின்றோம்
தங்கள் ஆத்மா சாந்தியடைய மானிப்பாய் வேற்கை முருகன்
பாதாரவிந்தங்களைப் போற்றி வணங்குகின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.


(103430)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்



க. சுபாங்கி, தரம் -4,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தி.




சஜீசிகரன், தரம் -8C,
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.



க. சுபாங்கி, தரம் -4,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகாந்தா வி.



இ. அபிநயா, தரம் -4,
யா/முத்துக்குமாரசாமி மகா வித்தி.



த. மாலவன், தரம் -8C,
யா/ இந்துக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 71

1. 2010 ஆம் ஆண்டு பிரபஞ்ச அழகி யார்?
2. தரம் 5இற்கான 2010 புலமைப்பரிசில் பரீட்சை எப்போது நடைபெற்றது?
3. அண்மையில் கிரிக்கெட் ஒஸ்கார் விருது பெற்ற இங்கிலாந்து சுழல் பந்து வீச்சாளர் யார்?
4. யாழ். மாவட்டத்தில் நீளம் பாய்தல் போட்டியில் சாதனை படைத்த வீரர் யார்?
5. இவ்வாண்டுக்கான யாழ். மாவட்ட கூட்டுறவு தின விழா எத்தனையாவதாக கொண்டாடப்படுகிறது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 04.09.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்புமி 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா?

**69 இற்கான சரியான விடைகள்**

1. யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
2. லண்டன் லீட்ஸ்
3. நாகசாகியில்
4. கனடா
5. ஒகஸ்ட் 26

### பரிசுபெறுவோர் விவரம்

1. ந. கபில்ராஜ், தரம் 8B, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
2. சி. லதாங்கி, தரம் 1, யா/ நுன்னாலை, காசிநாதர் வித்தியாலயம்.
3. சு. ஸ்ரீவித்யா, தரம் 7A, யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.
4. சூ. விமலேசன், தரம் 10A, யா/ ஹாட்லிக் கல்லூரி.
5. த.ரிக்ஷன், தரம் 9, யா/ மத்திய கல்லூரி.
6. ஜெ. துவாரகா, தரம் 4C, யா/ இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை.

## பட்டம் விட்ட முயற்குட்டி

சிங்கத்தின் தோட்டத்திலே
சிக்கி விட்டதெங்கள் பட்டம்
தொங்குமதை எடுத்துவர
தூரப்பறக்கும் புறாவாரும் தன்
சிறகிரண்டும் சிக்கிக்கொண்டார்
சிநேகிதரே குரங்காரே நீவீர்
மறைவாக மரந்தாவி
பட்டமதை எடுத்துவந்து
பக்குவமாய்த் தருவீரோ!

* * *

அறுகின்ற கயிற்றிலேறி
அந்தரத்தில் தொங்கும் குரங்காரை காக்க
நெடுங்கழுத்துச் சிவிங்கியாரே
நின்றுதவி செய்வீரோ?



சி. நேருஜா, தரம் 8
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## ஒற்றுமையால் கிடைத்த பலன்

ஒரு காட்டில் நான்கு காட்டுமாடுகள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. இதனால் அக்காட்டிலுள்ள சிங்கத்திற்கு இம் மாடுகளைப் பிடித்து உண்ண முடியாது இருந்தது. சிங்கம் காட்டு மாடுகளைப் பிடிக்க முயற்சி செய்தால் நான்கு காட்டு மாடுகளும் ஒற்றுமையாக வந்து சிங்கத்தைத் தாக்கிவிடும். இத னால் சிங்கம் இக்காட்டு வதில்லை. காட்டு மாடுக தனிப்படுத்தி கொல்ல சிந்தித்தது. பின்பு இவ்வி கூறியது. நரி சரி இராஜவே காட்டுமடுளைஉங்களிடம் றேன் எனக் கூறி, நரி காட்டு களிடம் சென்றது. காட்டு மாடுகளுக்கு அருகில்சென்ற நரி, இந்த இடத்தில் புற்கள் அதிகமாக இல் லையே! சற்று முன்னால் செல்வீர்க ளானால் நிறைய புற்கள் இருக்கின்றன. ஒருவர் என் னுடன் வந்தால் நான் காட்டி

மாடுகளுக்கு அருகில் செல் ளை ஒவ்வொன்றாகத் வேண்டும் என சிங்கம் டயத்தை நரியிடம் நான் ஒவ்வொரு அழைத்து வருகின் மாடு



விடுவேன் என நரி காட்டு மாடுகளிடம் கூறியது. அதற்கு காட்டு மாடுகள் ஒருவர் அல்ல நாம் எல்லோரும் வருகின்றோம் எனக் கூறி காட்டு மாடுகள் நரியைப் பின் தொடர்ந்து சென்றன.

சற்றுத் தூரம் சென்றதும் சிங்கம் ஒழிந்திருப்பதை காட்டு மாடுகள் கண்டு விட்டன. நரியின் தந்திரத்தை உணர்ந்த காட்டு மாடுகள் நரியை கடுமையாகத் தாக்கின. இதனால் இந்த இடத்திலேயே நரி இறந்து விட்டது. பின்பு சிங்கத்தையும் காட்டு மாடுகள் தாக்கத் தொடங்கின. சிங்கம் உயிர் தப்பினால் போதும் என நினைத்து அந்தக் காட்டை விட்டு ஓடியது.

**நே. வித்யாசாகர்**, தரம் 8B, கிளி/மத்திய மகா வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர்:-.....................................................
தரம் :-.....................................................
பாடசாலை :-.....................................................
.....................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென உறுதிப்படுத்துகிறேன்.

(தரம் 9 இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)




எஸ். கஜன், தரம் -9B,
யா/பண்ணாகம் மெய்கண்டன் ம.ம.வி.



க. அச்சுதன், தரம் -6B,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



சி. டிசாந்தன், தரம் -6A,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி.



அ. ரகுராகுல், தரம் -5A,
யா/கொற்றாவத்தை அ.மி.த.க



சி.நேருஜா, தரம் -8,
யா/ இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LOOKING FOR A REPUTED EDUCATIONAL INSTITUTION IN JAFFNA

A differently abled male in the late 30s with good communication skills, excellant command of both spoken & written English , holding a DIPLOMA IN BUSINESS ADMINISTATION, FROM THE ASSOCIATION OF BUSINESS EXECUTIVES (UK ). Having more than 10 years of teaching experience in English medium can handle

*General English
*Business English
*Business Communication
*Business Studies
*Economics- for professional Exam.

Wishes to join an established reputed Educational Institution in Jaffna.

Interested Intitutions may reply to:

No. 4062
C/O Uthayan
361, Kasthuriyar Road,
Jaffna.

(102470)

## Auto A/C



வாகன குளிரூட்டி

சகல திருத்த வேலைகளுக்கும் பொருத்துதல்களுக்கும் விசேட நிபுணத்துவம் பெற்றவர்கள்

1 நாள் சேவை

*Ranco Air Conditioning Services*
No. 12, Wasala Road, Dehiwala.
T.P. 2737274, 0777-487788
வில்லியம் கிரைண்டிங் மில்லுக்கு எதிரே

வேலைக்கு ஆள்தேவை: ரெஜிபோம் எழுத்து வெட்டி டஸ் போடக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள்ளும் மானிப்பாயில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. 0774598100

## பரிசளிப்பு விழா

கோப்பாய், ஒக 29

கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவன பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இயக்குநர் சி.சிவரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் இ.பிறேமராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-72)

## நிதி மற்றும் நிர்வாக அலுவலகருக்கான வெற்றிடம் - கிளிநொச்சி

MEDECINS SANS FRONTIERES

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எப்-ஹொலண்ட்) ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம். இந்நிறுவனமானது மக்களுக்கு அத்தியாவசியமான வேளைகளில் மனிதனால் அல்லது இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளினால் துன்புறுபவர்களுக்கும் ஆயுத வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவ உதவியை சாதி, சமய, இன மற்றும் அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கி வருகின்றது. கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்கு தகுதியான ஒருவரை எதிர்பார்க்கின்றோம்.

நிதி மற்றும் நிர்வாக அலுவலர் - கிளிநொச்சி (வெற்றிடம் 1)

பொறுப்புகள்:

★ திட்டத்தில் நிதி நிர்வாகத்துடன் உதவுதல்
★ திட்டத்தில் மனிதவளங்கள் மற்றும் நிர்வாக முகாமைத்துவத்துடன் உதவுதல்
★ அனைத்து உள்ளூர் தேசிய பணியாளர்களையும் மேற்பார்வையிடல்
★ உள்ளூர் உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது திட்ட இணைப்பாளருக்கு ஆலோசனை வழங்கல்.

தேவையானவைகள்:

★ நிதி மற்றும் மனிதவளங்கள் அனுபவங்களை செய்து காட்டக்கூடிய திறமைகள்
★ இலங்கையின் ஊழியர் சட்டம், வரி மற்றும் சமூக காப்புறுதி சட்டம் தொடர்பான அறிவு
★ கணனித்திறமைகளில் திருப்திகரமான மட்டம்
★ ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள( விரும்பத்தக்கது) மொழிகளில் வாசிப்பு, எழுத்து மற்றும் பேச்சுத் திறமையைப் பெற்றிருத்தல்.
★ பொருத்தமான பொழுது சுயமாக ஒழுங்குபடுத்தல் மற்றும் வேலைப்பழுவினை முன்னுரிமைப்படுத்தல் என்பனவற்றிற்கான ஆரம்ப நிலைகளைப் பயன்படுத்தும் ஆற்றல்.
★ விபரங்களில் கவனமாயிருத்தல், பகுத்தாயும் திறமையில் உயர்மட்டம்
★ நேர்மை மற்றும் செயன்முறை
★ நல்ல தொடர்பாடல் மற்றும் குழு முகாமைத்துவ திறமைகள்
★ வேறு அரசுசார்பற்ற நிறுவனங்களுடன் இதே பங்கில் முன் அனுபவம் (விரும்பத்தக்கது!)

இந்த பதவியில் ஆர்வம் இருப்பின் தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுயவிவரக்கோவையை 9.9.2010ற்கு முன்பாக அனுப்பவும்:

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து
49/44A கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
தொலை நகல்: (94) 024 222 0381
அல்லது இணைய அஞ்சலுக்கு:
msfh-kilinochchi-pc@field.amsterdam.msf.org

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/Job seekers.
- The Course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 13th Sept 2010

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

**Closing Date: 9th Sept 2010**

*English Language Teaching Unit*
*St. John's College, Jaffna*

## வசீகரத் தோற்றத்திற்கு! சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பார்தாமரை, கண்ணைச் சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களை பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் வீரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்!

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).


MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

(கல்வி தந்து கண்ணெனக் காத்த அப்பாவே! எப்பிறப்பில் காண்போம் இனி)

அன்னை மடியில்
14.12.1930

ஆண்டவன் அடியில்
31.07.2010



### அமரர் வினாசித்தம்பி சுப்பிரமணியம்
(மணியம் ஸ்ரோஸ், சாவகச்சேரி- பத்திரிகை முகவர்)

கடந்த 31.07.2010 அதிகாலை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வினாசித்தம்பி சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோஸ், சாவகச்சேரி- பத்திரிகை முகவர்) அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி வழியாகத் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட வர்களுக்கும், ஏனைய வழிகளில் எமக்கு உதவியவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (29.08.2010) ஞாயிற்றக்கிழமை மு.ப 11மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன உபசாரத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
தொ.பே: 0213001372

குடும்பத்தினர்.

## What's after your A/L's...? My Options?

**Results in 3-4 Months, don't waste your Time?**

2011 ஆம் ஆண்டிலிருந்து 99% மான பல்கலைக்கழக பாடநெறிகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெறுமென உயர்கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். எனவே நீங்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முன்னர் போதியளவு ஆங்கில அறிவைப் பெற City & Guilds London Institute இன் ஆங்கில Diploma வகுப்பில் இன்றே இணைந்து கொள்ளுங்கள். இலங்கையில் எல்லா வளங்களும் நிறைந்த English College களில் ஒன்றென எமது College அங்கிகாரம் பெற்றுள்ளது.

# Spoken English & Diploma in English

City & Guilds

கடந்த 24.04.2010 இல் நடைபெற்ற City & Guilds இன் Diploma in English பரீட்சையில் எமது கல்லூரியில் இருந்து தோற்றி சித்தியடைந்த சாதனையாளர்கள் சிலர்



S.Senthitchelvan S.Sujantha P.Umachandra S.Thanusha V.Kalaichchelvi

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற : சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும் ·

IELTS பரீட்சை எடுப்பதற்கு முன் City & Guilds இன் Diploma in English பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தினால் IELTS பாடநெறியை மிகவும் இலகுவாகப் பின் பற்றமுடியும்.

**புதிய வகுப்புக்கள் 06.09.2010 ஆரம்பமாகும்**

The Diploma is suitable for anybody. The qualification covers all four language skills and so is recognised as a good assessment of a learner'soverall language ability byuniversities and the UK Borders Agency (UKBA).

The International ESOL Diploma Covers all Four Language skills: Reading , Writing, Listening and Speaking

| Course Schedule | Mon-Tue-Wed-Thu-Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 3 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30 - 10.30 a.m<br>10.30 a.m 12.30 a.m | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 6th Sep 2010 | 11th Sep 2010 |

**BRITISH COLLEGE OF ENGLISH**
143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0213216027 - 0778803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

இந்தியா - ரூ.2.00

கனடா - ரூ.2.50

அமெரிக்கா - ரூ.2.50

யூகே - ரூ.2.50
(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, ம.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஞாபகசக்தி வளர்வதற்கு

தாமரைப்பூவை தண்ணீர் விட்டு காய்ச்சி காலை மாலை இருவேளையும் குடித்து வந்தால் ஞாபகசக்தி வலுப்படும். தேகம் சிவப்பு நிறமாக மாறும்.

வல்லாரை கீரையை பருப்புடன் சேர்த்து கடைந்து சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி வளரும். மூளையில் உள்ள செல்களை வளர்க்கும் ஆற்றல் வல்லாரைக்கு உண்டு.

தேங்காய்ப் பாலும் பாதாம் பருப்பும் அடிக்கடி சாப்பிட்டு வருவதால் ஞாபக சக்தி வலுப்படும். இரண்டு கரண்டி கரட் சாறு, பால் இரண்டு கரண்டி, தேன் இரண்டு தேக்கரண்டி கலந்து குடித்து வந்தால் ஞாபக சக்தி வளரும்.

இலவங்கபட்டை சுக்கு இரண்டையும் பொடி செய்து தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து கஷாயம் தயாரித்து காலை மாலை இரு வேளைகள் குடித்து வந்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

ஒரு குவளை தண்ணீரில் கொஞ்சம் துளசி இலையை இரவில் போட்டு வைத்து காலையில் எழுந்ததும் அந்த தண்ணீரை மட்டும் குடித்து வந்தால் மூளை பலம் பெரும். ஞாபகசக்தி பெருகும்.

வசம்பு, கீழா நெல்லி, மிளகு, தூதுவளை, அரிசி, திப்பலி, கடுக்காய் இவைகளை எந்த வகையிலாவது உணவில் சேர்த்து கொண்டால் ஞாபக சக்தி, அறிவு விருத்தி ஏற்படும்.








# வாக்குரிமையைப் பாதுகாப்போம்

உங்களுக்குத் தெரியுமா....?

★இத்தினங்களில் வாக்காளர் பதிவுப் புத்தகம் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன...

★வாக்காளர் பதிவுப் புத்தகத்தில் உங்களது பெயர் இடம்பெறவில்லை என்றால் எதிர்வரக்கூடிய தேர்தலின்போது உங்களது வாக்குரிமை இழக்கப்படும்.

## இதுபற்றி நீங்கள் அறியாமல் இருந்தால்

★உங்களது பிரிவின் கிராமசேவகர் உங்களுக்கு உரிய பத்திரத்தை வழங்கியிருக்கவேண்டும்.

★இதுவரைக்கும் அந்தப் பத்திரம் கிடைக்கவில்லை என்றால் உங்களது பிரிவின் கிராமசேவகரை சந்தித்து உரிய பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.



★ நீங்கள் உங்களது பிரதேசத்திற்கு மீள்குடியேறியவர் என்றால் அது தொடர்பில் கிராம சேவகரிற்கு உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்து வாக்காளர் பதிவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும்.

★கிராம சேவகர் உங்களுக்கு வாக்காளர் பதிவுப்பத்திரத்தை கொடுக்க மறுப்பின் அதுபற்றி உங்களது பிரிவின் பிரதேச செயலாளருக்கும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் தகவல் கொடுக்கவும்.

குறிப்பாக உங்களது வீட்டிற்குரிய வாக்காளர் பதிவுப்பத்திரத்தை நிரப்பி கிராமசேவகரிடம் ஒப்படைக்கும்போது பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Campaign for free & fair elections
CaFFE

ஒரு நபர்... ஒரு வாக்கு... ஒரேபெறுமதி...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH & IT AT GATEWAY FOR A PROMISING FUTURE

*Now Available in Jaffna & Nelliady*

ICDL International Computer Driving Licence

**Get an International Recognized Qualification in Information Technology**


# INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE

Special offer for A/L 2010 Students

Total Fee Rs.16800/= Rs.10000/= Only

## ICDL 7 Modules

- Concept of Information Technology
- Using the Computer & Managing Files
- Word Processing MS Word
- Spreadsheet MS Excel
- Database MS Access
- Presentation MS Power Point
- Information and Communication



ICDL | ICDL Advanced | e-Citizen | ICDL CAD | ICDL ImageMaker | ICDL WebStarter | e-TYPE

GATEWAY cfiCT

## GATEWAY CENTRE FOR INFORMATION TECHNOLOGY

*UTHAYAN IT ISLAND*
*347, Kasthuriyar Road, Jaffna.*
*021 222 7967 / 021 567 5555*
*gatewayjfn@sltnet.lk*

*LUKSHMEE Educational Services*
*Luxmy Theatre Lane, Nelliady*
*021 226 2395*
*gatewaynelliady@sltnet.lk*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் காமாலையை விரைவில் குணப்படுத்தும் அன்னாசி

மஞ்சள் காமாலையை விரைவில் குணப்படுத்தும் ஆற்றல் அன்னாசி சாறுக்கு உண்டு. இரத்தமிழந்து பலவீனமாக இருப்பவர்களுக்கு அன்னாசி மிகச் சிறந்த மருந்து. பித்த சம்பந்தமான கோளாறு கள் காரணமாகக் காலை வாந்தி, கிறுகிறுப்பு, பசி மந்தம் போன்றவற்றை நீக்குவதில் அன்னாசி உகந்தது.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் குணமாக அன்னாசி உதவும். ஒரு பக்கத் தலைவலி, இருபக்கத் தலைவலி கண், காது, பல், தொண்டை சம்பந்தமான அனைத்து நோய்களையும். வாய்ப்புண், மூளைக்கோளாறு, ஞாபகசக்தி குறைவு போன்றவை தேனும் அன்னாசிப் பழமும் சேர்த்து செய்யப்படும் அன்னாசிப்பழ சர்பத்தை 40 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் விரைவில் குணம் கிடைக்கும்.



அன்னாசிப்பழம் அதிக சூடு, சீதபேதி, வயிற்றுவலி ஏற்படுத்தும் என்பது மூட நம்பிக்கை.

மாம்பழம், ஒரேஞ்சு பழங்களில் உள்ள அதே 14 கலோரி தான் அன்னாசி யிலும் உள்ளது. இது நாம் தின மும் பயன்படுத்தும் புளியின் அள வான 82 கலோரி யைவிட மிகக் குறைவு. இரத்தத்தைச் சுத்தி செய் வது, சீரண உறுப்புகளை வலுப்படுத்துவது, மலக்குடலைச் சுத்தப் படுத்துவது அன்னாசி யின் சிறப்பு. ★


TWO JCB BACKHOES - 4WD
இயந்திர விற்பனை



ஐக்கிய இராச்சியத்தில் UK தயாரிக்கப்பட்ட கடுமையான இடங்களிலும் பாவிக்கக்கூடியது. மேலதிக மண் தோண்டியும் உண்டு. இணைந்த உருளைகளைக் கொண்டது. 5-10 தொன்
Cat-320 இற்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
மேலும் கனடா, UK தயாரிப்பு இயந்திர வகைகளுக்கான ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். லீசிங் வசதியும் உண்டு. விற்பனையின் பின் உத்தரவாதம்

SSR Enterperise
Nc 2/1, வனிக சூரியமாவத்த, பிலியந்தல.
தொ.பே: 0774330388, 0711867806.



உழைப்பின் உருவமான
MRF
மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்கள்
இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்!




சாதாரண டயரை விட
3 மடங்கு தூரம்!

பலமான கட்டமைப்பு
உயர் தரம் கொண்ட மூலப்பொருள்
சிறந்த பதிப்பு
உயர்ந்த பட்ச பாதுகாப்பு

முச்சக்கர வண்டிக்கு மற்றும் மோட்டார் சைக்கிளுக்கு சிறந்த வெளித்தோற்றம்

யாழ்ப்பாணம் மற்றும் நாடு பூராகவும் உள்ள அங்கீகாரம் பெற்ற அசல் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் முகவர்கள் மற்றும் MRF முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் டயர் விற்பனை முகவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

tradlanka



DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600



முதலாவது மூன்றாவது
பிறந்தநாள் வாழ்த்துகள்




திரு.திருமதி ஜெயசுதாகர்- மனோஜா தம்பதியரின் செல்வப் புதல்வி **பவிஷா** முதலாவது பிறந்த நாளையும் செல்வப் புதல்வன் **மிதுஷசன்** மூன்றாவது பிறந்தநாளையும் நாளை (30.08.2010) திங்கட்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இவர்கள் இருவரும் இறைவன் துணையுடன் பல்லாண்டுகாலம் வாழ அன்பு அம்மா, அப்பா, அப்பப்பா சிவலிங்கம், அப்பம்மா கமலா, அம்மம்மா வசந்தா, அம்மப்பா இராசேந்திரம், மாமா பகிதரன், மாமிவதனி, மச்சான் சாருஜன், மச்சாள்மார், ஜனு, ஜக்சி சித்தப்பா சுரேந்திரன், சித்தி குந்தா மற்றும் உற்றார், உறவினர் வாழ்த்துகின்றனர்.

நிருபத்தம்பை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
மொன்றியல், கனடா.

தகவல்:
சுதா- மனோ
(பெற்றோர்)






MEGA CHECK
உங்கள் குழந்தையை தொந்தரவு செய்ய வேண்டாம்




காது நெற்றி வெப்பமானி




Blood Glucose Monitoring System
குருதியிலுள்ள குளுக்கோஸ் அளவை அறியும் கருவி
திட்டவட்டமானது




இலங்கையில் முதலாவது
1ST 2 in 1+ BLOOD GLUCOSE BLOOD PRESSURE MONITORING SYSTEM
One device - dual purpose
குருதி சர்க்கரை குருதி அழுத்தம் அளவிடும் மானி

Hotline:0773 863529
Mega Meditech (Pvt) Ltd.
A Subsidiary Company of Mega Pharma (Pvt) Ltd.

City Medicals
487, Hospital Road, Jaffna.

Jegan Pharmacy
462/1, Hospital Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# புத்தன் பரம்பரை



இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்' - என்ற குறளின் உண்மையை அறிந்திருக்க அவன் என்ன குறள் கற்றவனா? எத்தனையோ, படித்துப் பட்டம் பெற்ற அறிஞர்கள் கூட அநியாயத்துக்கும் அகந்தைக்கும் அடி மைப்பட்டுக் கிடக்கும் போது படிப்பு வாசனை தெரி யாத சுபசிங்கா எம்மாத்திரம்? கொள்கை, தியாகம், நீதி, நேர்மை என்பவற்றை 'ஏதோ கறிச்சரக்காக்கும்' என எண்ணிக் கொண்டிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான் சுபசிங்கா.

படுக்கையில் கிடந்துழலும் சுபசிங்காவைப் பார்த்த அவன் மனைவி மெனிக்காவுக்குப் பரிதாபமாயிருந்தது. அவள் தன் கணவனை நோக்கி, 'அன்று தடுத்தேனே, கேட்டியா சிங்கா? என் சொல்லைக் காதிலும் விழுத்தாது விட்டாயே. அன்று உன் உதவியை நாடியவர்கள் இப்போது எங்கே?' என அரற்றினாள். அவள் வேதனை விம்மலாக வெளிக் கிளம்பியது. குடித்து விட்டு வைக்கப்பட்டிருந்த சாராயப் புட்டியின் அடியைத் துடைத்தெடுத்து வந்து சுபசிங்காவுக்கு நோக்கண்டிருந்த இடங்களில் தேய்த்து விட்டாள். அதிலே சிறிது சுகம் கண்டு சுபசிங்கா கண்ணயர்ந்தான்.

காடையர் தலைவன் சுபசிங்காவுக்கு அன்றொரு நாள் கிடைத்த வரவேற்பு! ஆஹா!! அன்றையதினம் அவன் உள்ளம் மகிழ்ச்சியில் கிளர்ச்சி கொண்டு கூத்தாடியது. ஆனால் இன்று.....?

மோட்டார்க்காரில் தொட்டுப் பார்க்கும் அனுபவம் கூட அற்றிருந்த சுபசிங்காவுக்கு மேத்தானந்தா காரில் ஏறிச்சவாரி செய்யும் முதல் அனுபவத்தைக் கொடுத்ததுடன் நிறுத்தினாரா?

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 163**

இல்லையே! சாராயப் புட்டிகள், கள்ளுமுட்டிகள், இறைச்சி வகை, பணம் இப்படிப்பட்ட எத்தனை வகையான பரிசுகள் - அதிஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டுதான் அடித்திருக்கிறது' என்ற எண்ண அலைகளிலே மகிழ்வு ஊஞ்சலாடினான் சுபசிங்கா அன்று.

ஒரு நாள் மேத்தானந்தா சுபசிங்காவை அழைத்து, 'நாளை கொழும்பு காலி முகத்திடலில் தமிழர்கள் கூட்டங் கூட்டமாக வந்திருப்பார்கள். அவர்கள் வரும் காரணம் ஒரே இன வெறிதான். சிங்களச் சகோதர்களாகிய

(18 ஆம் பக்கம் பார்க்க)



1950 களில் தமது மாணவப் பருவத்திலிருந்தே ஈழத்துச் சிறுகதைத் துறையில் பிரவேசித்த பத்மா. சோமகாந்தன், சிறுகதை எழுத்தாளர் சோமகாந்தனின் துணைவியாராவார். வண்ணார்பண்ணை இவரது பிறப்பிடம். தமது மாணவப் பருவத்திலேயே சுதந்திரன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசைத் தட்டிச் சென்றவர். இவரது சிறுகதைகள் வீரகேசரி, ஈழகேசரி, சுதந்திரன் போன்ற ஈழத்து முன்னணிப் பத்திரிகையில் அக்காலத்தில் பிரசுரமாகியுள்ளன.

கடவுளின் பூக்கள், [1993], புதிய வார்ப்புக்கள் [1997] உட்பட மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் ஆன்மீக நூல்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளார். 'பெண்ணின் குரல்' பெண்கள் சஞ்சிகையில் ஆசிரியராக 15 வருடங்கள் பணியாற்றி யுள்ளார்.

ஆசிரியையாகத் தொழிலை ஆரம்பித்து, அதிபர் பதவி வகித்து ஓய்வு பெற்ற இவர் தற்போது 'மைவெளி' என்ற பெண்கள் ஊடக அமைப்பின் தலைவியாகப் பணிபுரிகிறார்.

1956 ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த 'புத்தனின் பரம்பரை' என்ற இவரது சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

கோவில் மணி 'டாண், டாண்' என்று ஓசை எழுப்பியது. சுபசிங்கா பல தடவைகள் தன் கண்கள் இறுக இறுக மூடிப்பார்த்தான். அவனுடைய முரட்டுச் சுபாவத்தை அறிந்துபோலும், நித்திராதேவி அவனை அணுக அஞ்சினாள். சுபசிங்கா படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவனுக்கு ஒரே அலுப்பாயிருந்தது. எழுந்திருக்க முயன்றான். கால், கை, மூட்டுக்கள் யாவும் நோவு கண்டிருந்தது. அந்தக்கிராமத்திலேயே முரட்டு வீரத்தில் முதலிடம் வகிக்கும் சுபசிங்கா, இப்படியான நிலைமை தனக்கு ஏற்படுமென்று எதிர்பார்க்கவில்லை. 'பிறர்க்கு

---

# சேய் குன்றம்

**இலக்கியக் காட்சி 54**

பண்டைய புலவர்கள் இயற்கையைப் பாடுவதில் மிகுந்த புலமைத் திறன் வாய்ந்தவர்கள். அவர்களது மொழியாற்றலும் கற்பனை வளமும் பிற இலக்கியப் பயிற்சியும் பாடல்களில் நன்கு புலப்படுகின்றன. சிறப்பாக நிலங்களின் தன்மை பற்றிய, புலவர்களின் காட்சிப்படுத்தல் இரு நிலையில் அமைந்துள்ளது. ஒன்று நேரில் காணும் இயற்கைக் காட்சியை உள்ளவாறே எடுத்துக் கூறுவது. மற்றது அது தொடர்பான பிற செய்திகளை இணைத்துக் கூறுவது. செய்திகளில் வரலாற்றுக் குறிப்புகளும் புராண இதிகாசக் கதைகளும் பல சங்க இலக்கியச் செய்யுள்களிலே இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்தகைய குறிப்புகளை இணைக்கும் போது அகவுணர்வுகளைப் புலப்படுத்தும் பாடல்களிலும் பொருத்தமுற இணைத்துப் புலவர்கள் பாடியுள்ளனர். இத்தகைய பாடல் ஒன்றை நோக்கலாம்.

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழல் நொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.
*(குறுந்தொகை:1)*

மலை நாட்டைக் காட்சிப்படுத்தும் புலவர் இப்பாடலில் இயற்கையான காட்சியையும் புராணக் காட்சியையும் இணைத்துக் காட்டுகிறார். பாடலின் முதற்பகுதி புராணச் செய்தியாகவும் பிற்பகுதி இயற்கைத் தோற்றம் பற்றிய செய்தியாகவும் உள்ளது. முருகனுடைய போராற்றல் பற்றிய செய்தியைக் கூறி அவன் உறையும் மலையென மலையின் சிறப்புப் பேசப்பட்டுள்ளது.

மலையின் செம்மையான தோற்றம் முதலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அக் காட்சியை நேரிற்காண முடியாது. கற்பனையில்தான் காணமுடியும். போர்க்களக் காட்சியாக முதற்காட்சி அமைந்துள்ளது. போர்க்களமெங்கும் செந்நிறமாகும்படி அவுணர்களைக் கொன்றொழித்தபோது அம்புகளெல்லாம் செம்மை பெற்றிருந்தன. யானைகளுடைய வெண்மையான கோடுகள் எல்லாம் செஞ்நிறம் அடைந்திருந்தன. அத்தகைய கொடியபோர் செய்த வீரக் கழல்களை அணிந்த சிறுவன் முருகனுடைய குன்றம் இது.

அடுத்த காட்சியில் அக்குன்றத்திலே குருதியின் நிறத்தை யொத்த பூக்கள் கொண்ட குலையாகக் காட்சியளிக்கின்ற காந்தள் மலர்கள். மலர்களின் பெருக்கத்தால் குன்றமே செம்மையாகத் தோன்றுகிறது. இப்பாடலைத் தோழி கூற்றாக அமைந்த பாடலென உரையாசிரியர்கள் வகுத்துள்ளனர். குன்றத்தைப் பற்றிய கூற்றாக அமைந்த இப்பாடல் கூறும் செய்தியைக் கொண்டே தோழி கூற்றென முடிவு செய்துள்ளனர். யாருடைய கூற்று எனத் தீர்மானிப்பதற்குக் குறிப்பிட்ட சொல் எதுவும் பாடலில் இடம் பெறாமையால் புலவர் கூற்றாக அமையும் இப்பாடல் தோழி கூற்றெனக் கொள்ளப்பட்டுள்ளது.

பாடலில் வந்துள்ள குன்றம் பற்றிய புராணச் செய்தி வாய் மொழி மரபாக எல்லோராலும் அறியப்பட்ட செய்தியாக இருப்பதால் அதனைப் புலவர் பாடலில் இணைத்துள்ளார். ஆனால் போர்க்களத்தின் செம்மையை எல்லாவற்றிலும் பொருத்திக் கூறும் கவிநயம் புலவரது தனிச் சிறப்பாகவே உள்ளது.

செங்களம், செங்கோல், செங்கோடு என மூன்று சொற்கள் போர்க் களத்தின் செம்மையைப் புலப்படுத்து கின்றன. அம்பு போர்க் கருவியாகவும் யானை போர்ப் படையாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 'கழல்தொடி' என்ற சொல் போர் வீரனைக் காட்சிப் படுத்துகிறது. எனவே முருகனுடைய போர்க் காட்சியை நேரே காண்பதற்குப் புலவர் தன் மொழி நடை ஆற்றலைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார். 'சேஎய்' என்ற சொல் சிறப்பாக முருகனைக் குறித்து நிற்கிறது. அவுணர்களைத் தலையெடுக்க விடாமல் கொன்றொழித்த வீரனான முருகனுடைய குன்றத்தைப் பற்றித் தோழி தலைவிக்குக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளதென உரையாசிரியர் இப் பாடலுக்கு உரை செய்துள்ளார்.

அகப்பாடல் என இப்பாடலைக் கொள்வதற்குக் காந்தள் மலரின் மலர்ச்சி பற்றிய செய்தியே உதவுகிறது. பண்டைத் தமிழரது வாழ்வியலில் காலத்தின் கணிப்பு இயற்கையின் தோற்றத்தின் மூலமே செய்யப்பட்டது. இயற்கையின் மாற்றங்களை ஊன்றிக் கவனித்துக் காலத்தின் கடப்பைக் கணிக்கும் முறைமை இருந்துள்ளது. சிறப்பாக மலர்களின் மலர்ச்சி நாள்களின் கடப்பையும் பருவமாற்றங்களையும் கணிப்பதற்குப் பேருதவியாக இருந்தது. ஒருநாளின் இருபகுதிகளான இரவும் பகலும் கூட மலர்களின் மலர்ச்சியால் அறிவுறுத்தப்பட்டன.

இப்பாடலில் காந்தள் மலரின் மலர்ச்சி பற்றிய குறிப்பு குன்றத்தினுடைய அழகான தோற்றத்தைக் காட்டும் நிலையில் ஆண்மகனுடைய வரவை எதிர்பார்த்திருக்கும் பெண்ணின் உள்ளத்திலே ஒரு மலர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது. மலையிலே குலையாகப் பூத்திருக்கும் காந்தள் மலர்களின் குருதி போன்ற நிறம் மலையை அழகுபடுத்தி நிற்பதை முழுமையாகக் காண்பதற்கு ஆவல் ஏற்படுகிறது. பெண்ணின் உள்ளத்தில் தனது நெருங்கிய நட்புக்குரியவன் இன்னும் வராததால் [illegible] உடைய தோழி கவனித்து விடுகிறாள். பெண்மனதின் உட்கிடையை ஊகித்து அறிந்து விடுகிறாள். எனவே அவளுடைய துன்பத்தை நீக்க நட்புக் குரியவனின் குன்றத்துச் சிறப்பை எடுத்துக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. தோழி கூற்றாகப் பெண்ணின் மொழிநடையில் பாடல் வடிவம் பெற்றுள்ளது. குன்றின் பெருமை கூறும்போது சேஎய் குன்றம் எனச் சிறப்பித்துக் கூறுகின்றாள். வீரம் விளைந்த குன்றமாதலால் உனது நட்புக்குரியவனும் உன்னிடம் வருவான் என நம்பிக்கையை ஊட்டுகிறாள். 'குருதி' என்ற சொல்லின் பயன்பாடு தோழியின் மொழி ஆற்றலாகப் புலவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்க்களத்திலே அம்புபட்டு, யானையின் கொம்பால் தாக்குண்டு இறந்தவர்களுடைய உடல்களில் இருந்து வெளிப்பட்ட குருதியின் செம்மையான நிறத்திற்கும் குன்றிலே மலர்ந்திருக்கின்ற காந்தாள் மலர்களின் செம்மையான நிறத்திற்கும் வேறுபாடு இல்லை. எனவே காந்தள் மலரைப் புலவர் 'குருதிப்பூ' என்றே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

'குன்றம்' என்று சொல்லுக்கு மலை என்றே பெரும்பாலும் சொற்பொருள் வழங்கப்படுகிறது. ஆனால் குன்றத்திற்கும் மலைக்கும் தோற்றத்தில் வேறுபாடு உண்டு. குன்று என்பது அதன் முழு உயரத்தையும் கண்ணால் பார்க்கக்கூடிய அளவுடையது. ஆனால் மலையென்பது கண்ணால் முழு உயரத்தையும் காணமுடியாத உயர்ந்த தோற்றமுடையது. குன்றிலே மலர்ந்திருக்கின்ற குருதிப்பூக்களைப் பார்க்கும்படி தோழி கூறுவது பெண்ணின் உள்ளத்தைச் சாந்தமடையச் செய்வதற்காகவேயாகும்.

பாடலில் தோழி ஒரு வழிபாட்டு மரபையும் உணர்த்துவதாகப் புலவர் காட்சிப்படுத்தியுள்ளார். முருகவழிபாடு மலைவாழும் மக்களிடையே இருந்ததைப் பல சங்கப்பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. இப்பாடலிலும் 'சேஎய் குன்றம்' என்ற தொடர் முருகன் உறையும் மலையெனக் குறிப்பிடுவதன் மூலம் தோழி பெண்ணுக்கு ஒரு வழிபாட்டு மரபு இருப்பதையும் நினைவூட்டுகிறாள். மலையில் வாழ்பவர்கள் முருகனைத் தமது குலதெய்வமாக வழிபடும் மரபையும் புலவர் காட்டியுள்ளார். அவ்வழிபாட்டு நடைமுறைகள் பெண்களால் பேணப்பட்டுவந்ததையும் உய்த்துணர வைத்துள்ளார்.


பாடலைப் பாடியவர் திப்புத்தோளார் என்பவர். பாடலில் வரும் கருப்பொருள்களான யானையும் காந்தள் மலரும் குறிஞ்சித் திணைக்குரிய பாடலாக இப்பாடலை இனம்காட்டுகின்றன. பெண்ணின் நட்பை நாடும் அகவுணர்வு உய்த்தறியப்படுகிறது.★★★★★★★★



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 127



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இராணுவத்தினரின் பணி.
5. தோழன்/ கூட இருப்பவன்.
7. மரத்துண்டு/ உடலையும் கூறுவர்.
8. செய்தி/ புதினம்.
10. ஒரு திசையின் சுருக்கம்.
11. அடையாளம்/ குறி.
12. தலைகாக்கும்.
15. வயல்.
16. சேர்.
17. நிறை/ எடை/சுமை.
18. ஊனம்.
19. சேமம்.
20. பெரிய பழம் தருவது.
21. ஒரு தூர அலகு.
22. அழுது அரற்றுதல்.

### மேலிருந்து கீழ்

1. புராணம் பாடுபவர்/ விஷ்ணு சமயத்தவர்.
2. கெட்டது செய்பவர்.
3. ஒரு புள்.
4. ஒரு கிரகம்.
5. பிணம்.
6. அரையின் அரை/ உடலைத் தாங்குவது.
9. நித்திரையில் வருவது.
11. ஓர் இராசி.
13. இதுவும் ஒரு இராசியே.
14. வாய் ஓயாமல் தொண தொணவென்று பேசுதல்.
16. தாண்டு
17. கசப்பான ஒரு மரக்கறி வகை.
18. வெளியில் பூசுவது.
19. பாரம்.
20. சில அல்ல.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 125 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சாசுவதம் (5)கதி (7)கத்திரி. (8)கருணை. (9)சதி. (10) சபலம். (12)கனல். (13)புசி. (15)வாரம். (16)தலித். (17)மானம். (18) கலை. (19)தர. (20)நானாவிதம். (22)விம்பம். (23) திசை.

### மேலிருந்து கீழ்

(1)சாகசம். (2)சுத்தி. (3)வதி. (4)தரிசனம். (5) கரும்பு. (6)திணை.(8)கல.(11)பல். (12)கரம். (14)சித்தம். (15)வானரம். (16)தலைவிதி. (17) மாதவி. (18)கனா. (20)நாம். (21) தசை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 125 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** – செல்வி இ.லக்சுமி, இல.08, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** – எஸ். சுதாமலர், நகரசபை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு** – செல்வி பொ.சிவகாமி, இலக்குமி பதி, சங்கானை.

**4 ஆம் பரிசு** – அ.ஶ்ரீஸ்கந்தராஜா, 15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு** – திருமதி ஈ. ஶ்ரீவாணி, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.ப.கிருஸ்ணன், 244/4, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(2) க. தில்லையம்பலம், கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டி.

(3) தே.விமலதாசன், இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 127**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 01.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.127இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.09.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# புத்தன் பரம்பரை

(17ஆம் பக்கத் தொடர்ச்சி....)

எங்களையெல்லாம் சூறையாடி, அடித்து நொருக்கி, எங்களை ஒரு கை பார்த்துவிட்டுப் போகிறார்கள். எமது அன்னை ஶ்ரீலங்காவே தமிழரிடம் அடிமையாகப் போகிறாள். நாட்டு நிர்வாகம் யாவும் அவர்கள் கையிலேயே ஆகிவிடும். எமது சுதந்திரமே பறிபோய்விடும். தமிழரை நாம் அடங்கியொடுக்கி வைத்தால்தான் நாம் ஒருவாறு தலையெடுக்க முடியும். பணம், நிலம், பட்டம், பதவியெல்லாமே தமிழருக்காகி விடும். எமதுதாய் - சிங்கள அன்னை தனிமை யில் கதறுவாள். இலங்கைத் தமிழருக்குப் பக்கபலமாக இந்தியாவில் உள்ள பலகோடி தமிழரும் முன்வந்துள்ளனர். சிங்கள மொழியையும் சிங்கள இனத்தையும் அழிப்பதே அவர்களுடைய நோக்கம். எனவே நாம் காரியத்தில் கவனமாக - கண்விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். யூன்மாதம் 1ஆம் திகதி கொழும்பில் நீங்கள் நடந்து கொள்வதில்தான் எமது எதிர்காலமும் எமது அன்னை சிங்கள மாதின் சுபீட்சமும் தங்கியுள்ளது. 'சிங்களம் வாழ்க! தமிழ் வீழ்க! என ஒரு குட்டி 'லெக்சரே' அடித்துவிட்டார்.

படித்துப்பட்டம் பெற்ற மேத்தானந்தா தன் இனத்தைத் தமிழினம் ஒதுக்க முன் வந்துள்ளது எனக்கூறியது சுபசிங்காவுக்கு முழுதும் நியாயமாகவே பட்டது. இனவெறி மாத்திரமல்ல, குடிவெறியும் - தான் ஒரு செயல்வீரன் - மேத்தானந்தாகூட தன்னிடம் உதவி கோரி வருகிறாரே என்ற எண்ணவெறி, கிறுக்கு யாவும் சேர்ந்து சுபசிங்காவுக்கு உற்சாகமளித்தது. அவனது உற்சாக உணர்ச்சியில் உவப்பு நடனமிட்டது.

'சிங்களம் வாழ்க! தமிழ் வீழ்க! சிங்களம் வீழ்க!

தமிழ் வாழ்க! என அவன் குரல் உச்சஸ்தாயியில் - தடுமாறி - ஒலி செய்தது.

சுபசிங்கா தன் இனத்திற்காகவும் நாட்டுக்காகவும் கடமை செய்யும் நாள் நெருங்கிவிட்டது என்பதை 'பீக், பீக்' என்ற மேத்தானந்தாவுடைய காரின் குழற்சத்தம் அறிவுறுத்தியது.

சில சிங்களவரின் செயல்கண்டு சீற்றங் கொள்ளும் 'புத்தன் இதயம்' கொண்ட சில சிங்கள மக்களைப்போல சீறி உறுமியபடி அதன் பின்னே வந்து நின்றது 'வான்'.

சுபசிங்காவின் தலைமையில் அந்தக் கிராமத்து வெறியர்கள், குடிகாரர்கள் யாவரும் தம்மை ஏற்றிச் செல்லவந்த வாகனங்களுள் ஏறி அமர்ந்து கொண்டனர். 'காரும் வானும் கொழும்புநோக்கி 'விர்' எனப் பறந்தன. போகும்போது தனக்குத் தெரிந்த இழிவான - பேசக்கூடாத வார்த்தைகளைச் சுபசிங்கா ஞாபகப்படுத்திக்கொள்ள மறக்கவில்லை.

காலி முகத்திடலே 'அவிழ்த்துவிட்ட நெல்லிக் காய் மூடைபோல' வாகனங்களின்றும் வெளியேறினர் சுபசிங்காவும் அவரது சகாக்களும். சுபசிங்காவுக்குச் சுதந்திர உணர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவனது கிராமத்திலே குடிப்பதும், குழறுவதும், ஆடுவதும், பாடுவதுமாக அவன் உள்ளம் கரை காணாத 'ஏனென்று கேட்பாரற்ற' காட்டுக் கழுதைபோலச் சுதந்திர உணர்ச்சியுடன் உலாவித்திரிந்தவன் சுபசிங்கா. அத்தகைய சுபசிங்கா தன் வாழ்க்கை யில் என்றுமே காணாத, அனுபவியாத சுதந்திரத்தை அன்று கண்டான் காலி முகத்திடலில். கோயில்களில் கொலு வைத்திருக்கும் கற்சிலைகளைப் போலத் தமிழர்கள் கூட்டங் கூட்டமாயிருப்பதைக் கண்டான்.

முதல் நாள் மேத்தனாந்தா காண்பித்த போட்டோக்களுக்குரிய உடல்களைத் துருவித் துருவிப்பார்த்தான். ஒரே வெள்ளையுடையையும், வெள்ளையுள்ளத்தையுமன்றி வேறெதையும் அவனால் காண முடியவில்லை.

கல்லுப்பிள்ளையார் போலிருந்தவர்களை உதைந்தான். 'தமிழ் வாழ்க!' எனக் கோஷமிட்டுக் கொண்டிருந்தவர்களைக் கற்கள் கொண்டு தாக்கினான். முதுகிலறைந்தான்; நெஞ்சில் குதித்தான்; மேற்சட்டைகளை இழுத்துக் கிழித்தான். திடீரென அவன் பொதுவுடைமையாக விட்டதையெண்ண அவனுக்குச் சிரிப்பும் வரத்தான் செய்தது. தன் விருப்பப்படி மண்டியிருந்த மக்களுடைய சட்டைப் பையினுள் கையை விட்டான். ஒரு இரண்டு ரூபாய்தான். அப்படியே அந்த நபரருகேயிருந்தவருடைய சட்டைப் பையில் ஏதோ தெரிந்தது. ஆவலுடன் எடுத்தான். கண்ணுக்கணியும் கண்ணாடியை வைக்கும் பெட்டி அது. அவனது ஏமாற்றம் அவனுக்கே ஆத்திரம் தந்தது. அறைந்தான் அந்தத் தமிழனுடைய கன்னத்தில். அவன் வாயும் ஏதேதோவெல்லாம் அரற்றிக் கொண்டது.

கண்ணயர்ந்திருந்த சுபசிங்காவை இடுப்பில் ஏற்பட்ட வலி இவ்வுலகுக்கு இழுத்தது. கருணையின் வடிவம் - அவனது தெய்வம் அவனுடைய கஷ்டத்தைப் பார்த்து கவலை கொண்டு ஆறுதல் கூறுவது போலத் தோன்றியது. சுபசிங்காவுக்கு ஐயோ! மற்றவர்களுக்கு அடிப்பதிலும் உதைப்பதிலுமே அமைதியும் ஆனந்தமும் கொண்ட சுபசிங்காவின் மேல் இரக்கம் கொள்ள இவ்வுலகில் ஒருவர் உண்டா? அப்படியானால்... அந்த உருவம் மேத்தானந்தா தானா? கண்களை நம்பமுடியாமல் கசக்கிவிட்டுத் திரும்பவும் விழித்து விழித்துப் பார்த்தான் சுபசிங்கா. மேத்தானந்தாவின் இனவெறியும், சுயநலமும் கலந்த, இரக்கம் செத்த, இருள் படர்ந்த இதயத்தின் முன் நேர்மையும் கருணையும் கட்டிப்புரள அன்பு ஒளிவீசும் அந்த அழகொழுகும் வதனக் காட்சி அவனை ஆகர்ஷித்தது. சுபசிங்கா தன் நினைவு உணர்ச்சியையே இழந்தான். அன்பென்ற சீமையிலே கருணை என்ற சாயம் தீட்டப்பெற்ற உடை அவனை அழைத்துக் கொண்டது போன்ற ஓர் உணர்ச்சி. இனம் தெரியாத ஒரு சக்தி அவனை எழுந்திருக்கச் செய்தது. உடலில் நோவே இல்லை. உள்ளத்தில் ஒருசிறு நோவைத்தவிர, ஓடினான். அவன் குடிசைக்கருகே சிற்றாறு ஒன்று அமைதியாக அழகு நடை பயின்று கொண்டிருந்தது. ஆற்றின் கரையிலே விழுந்து [illegible] அணைப்புக்காக மன்றாடினான். குளிர்ந்த உள்ளம் படைத்த நீரன்னை அவனை ஏற்று இறுகத்தழுவினாள். அவள் அணைப்பிலே இன்பங்கண்ட - குளிர்மையில் மகிழ்வு கண்ட சுபசிங்கா முற்றிலும் புதியவனாக ஆற்றினின்றும் வெளியேறினான்; அவன் உடலிலிருந்து தண்ணீர் 'சொட், சொட்' டென ஒழுகிக் கொண்டேயிருந்தது. மொட்டாக, இருண்டு சுயநலத்தால் மூடப்பட்டிருந்த சுபசிங்காவின் இதயம் விரிந்து விட்டதென்பதை அவன் கரங்களிலிருந்த விரிந்த நிர்மலமான தாமரை மலர்கள் வலியுறுத்தின. அவனுடைய உள்ளம் மாத்திரமல்ல. உடலும்கூட எதையோ தேடி ஓடிக்கொண்டேயிருந்தது.

பாழடைந்த பழசாப்போன கற்களின் மத்தியிலே புத்தருடைய சிலை ஒரு பக்கம் சாய்ந்து கிடந்தது. அதை எடுத்து நேராக, சரியாக வைத்தான் சுபசிங்கா. அந்தச் சிலையை தன் ஈரக்கரங்களால் துடைத்துச் சுத்தப்படுத்தினான். அந்தச் சிலைக்கருகே ஒரு அரசமரம். பல கிளைகள் பட்டுப் போய்விட்டாலும், 'புத்தம்' என்றுமே பட்டு மறைந்து விடக்கூடியதல்ல. ஒரு சுபசிங்காவினுடைய உள்ளத்திலாவது தளிர் விடவே செய்யும் என்று அறிவுறுத்துவதுபோல தளிர்விடும் சிறிய கிளையொன்று அந்த அரசமரத்துக்கு அமைதியை அளித்தது.

சுபசிங்காவுக்கென தேநீர் கொண்டு வந்தாள் மெனிக்கா. படுக்கையிலே சுபசிங்கா இல்லாதிருந்தது, அவளுக்குப் பயத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. - அங்குமிங்குமாகத் தேடினாள். சத்தம் வரும் திசையை நோக்கி ஓடினாள்.

அங்கே!

முளந்தாளில் மண்டியிட்டபடி சிலையின் முன்னே உட்கார்ந்திருந்தான் சுபசிங்கா. அவன் கண்களிரண்டும் மகாவலிகங்கையின் கடமையில் ஈடுபட்டிருந்தன. அவன் உள்ளத்தை அன்பும் கருணையும் இறுக அணைத்துக் கொண்டன. 'விஷயம் தெரியாது தவறுதலாகப் பிழைவிட்டது உண்மை. மன்னிக்க வேண்டும்' எனப் பல முறை அவனுடைய இதயம் ஓலமிட்டலறியது.

''புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி''

என அவன் வாய் தோத்தரிக்கத் தொடங்கியது. புத்தனுடைய அன்புப் பிணைப்பிலே ஆனந்தமாக நீந்திக் கொண்டிருக்கும் சுபசிங்காவைக் கண்டதும் மெனிக்காவின் உள்ளம் ஆனந்தத்தால் கும்மாளமிட்டது. அவளும் அவன் அருகே அமர்ந்தபடியே.

'புத்தம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி''

எனத் தன்னை மறந்து உச்சரிக்கத் தொடங்கினாள்.

பிழையான பாதையால் வழிநடத்தப்பட்டுவந்து அறியாத் தவறு செய்த அந்த இரு உள்ளங்களும்கூட தாம் புத்தனுடைய பரம்பரை தானா என எண்ணி நாணிக் கொண்டன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டதே இன்றைய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

ஆவணப் பெட்டகம் 08

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

செப்ரெம்பர் 1895 யாழ்ப்பாண மணியகாரர் பிரிவு (தற்போது பிரதேச செயலர் பிரிவு பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் உதவி அரசாங்க அதிபர் பதவிக்குச் சமனான பதவி மணியகாரன் பதவி என அழைக்கப் பட்டது) மூன்று பதிவாளர் பிரிவாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன வண்ணார் பண்ணை மேற்கு முஸ்லிம் பதிவாளர் பிரிவு, வண்ணார்பண்ணை கிழக்கும் நல்லூரும் புரட்டஸ்தாந்த பதிவாளர் பிரிவு, சுண்டிக் குளி கத்தோலிக்க பதிவாளர் பிரிவு.

09.11.1895 அரசாங்க அதிபர் துவைனம் சேவையில் இணைந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன் னிட்டு அவரது பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இந்தக் காலத்தில் பிரிட்டனின் குடியேற்ற நாடு களில் கடமையாற்றிய குடியியல் உத்தியோகத்தர் கள் எவரும் இவ்வாறு பொன்விழா கொண்டாடவில்லை யென இந்து சாதனம் பத்திரிகை தெரிவித்துள்ளது.

01.01.1896 அன்று அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்திற்கு பிரிட்டிஷ் அரசு சேர் பட்டம் வழங் கிக் கௌரவித்தது. அன்று முதல் அரசாங்க அதிபர் சேர். உவில்லியம் துவைனம் என அழைக்கப் பட்டார்.

13.01.1897 ஆளுநர் றிட்ஜ்வே, உயரதிகாரி கள், இராணுவத்தளபதி கப்டன் வார்ட் ஜக்சன் சகிதம் நான்கு நாள் விஜயமாக யாழ்ப்பாணத் திற்கு விஜயம் செய்து உயர் அரச அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலை மேற் கொண்டார். பதினாறாம் திகதி முற்றவெளி யில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். ஆரம்பத்தில் கிரா மத் தலைமைக்காரன் பதவியை உடையார் பதவி என நான் தமிழில் எழுதியிருந்ததைப் பார்த்த கிராம சேவகர் ஒருவர் Village headman என்றால் அது கிராம சேவகர் பதவியைத்தானே குறிக்கும் என்றார். கிராம சேவகர் பதவி முன்பு விதானையார் பதவி என அழைக் கப்பட்டது. விதானையார் பதவி 1806ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கையில் உருவாக்கப்பட்டது. உடையார் பதவி அதற்கு முன்னரே உருவாக்கப்பட்டது.

உடையார் பதவி விதானையார் பதவியை விட அதிகாரம் கூடியது. பிரபல இடதுசாரி அரசியல் வாதியான கொல்வின். ஆர். டீ. சில்வாவும் Village headman என ஆங்கிலேயர்கள் விளித்த பதம் தமிழ்ப் பகுதிகளில் உடையார் என அழைக்கப்பட்டதாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கு குத்தகை 1821 ஆம் ஆண்டு அரசாங்க அதிபர் டைக்கின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப் பாணக் கடல் நீரேரியில் முதல் தடவையாக சங்கு பிடி பட்டது. சங்கின் மூலம் கிடைக்கும் வருமானத்தை உள்ளூர் அபிவிருத்திக்குப் பயன்படுத்துமாறு அரசாங்க அதிபர் டைக் பணித்தார். ஆனால் டைக்கின் திட்டம் வெற்றியளிக்கவில்லை. டைக்கிற்குப் பின்னர் அரசாங்க அதிபராகப் பதவியேற்ற துவைனம் 1841 - 1891 வரையான காலப்பகுதிக்குரிய சங்கு குத்தகையை 191, 930 ரூபாவுக்கு வழங்கினார்.

16.01.1896 திகதியன்று சேர் உவில்லியம் துவைனம் அரசாங்க அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆர். டபிள்யூ. லெவேர்ஸ் (R.W. Levers) இதே திகதியில் அரசாங்க அதிபராக நிய மனம் செய்யப்பட்டார். இருபத்தேழு ஆண்டுகள் அரசாங்க அதிபராகப் பதவி வகித்த துவைனம் பன்னி ரண்டு ஆளுநர்களின் கீழ் பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைப் பற்றி நன்கு அறிந்து வைத்தி ருந்த துவைனம் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழைகள் அனைவருக்கும் பாரபட்சமின்றி சேவையாற்றி யதாக குறிப்புக்கள் கூறுகின்றன. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, யாழ்ப்பாணத்திற்கு புகையிரத சேவையை ஆரம்பிப்பதையும், யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபை உருவாக்குவதையும் இவர் கடுமையாக எதிர்த்தார். ஓய்வு பெற்ற பின் யாழ்ப்பாண வை.எம்.சி.ஏ தலைவராக இருந்த துவைனம் 1848ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பொது நூலகக் குழுவின் தலைவராகவும் ஆளுநர் பியேக்கினால் ஆரம்பிக்கப் பட்ட (Blake) விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். தனது பதவிக் காலத்தில் யாழ்ப்பாணத் திலிருந்து திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் வரி வருமானத்தை அதிகரிக்கச் செய்ததுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையின் மீது கட்டுப்பாடுகளையும் விதித்தார். தனது செல்வாக்கைப் பிரயோகித்து புகையிலைச் செய் கையை அபிவிருத்தி செய்வது தொடர்பான பயிற்சி நெறியொன்றையும் துவைனம் ஏற்பாடு செய்தார்.

தனது பதினெட்டாவது வயதில் சேவையில் இணைந்து கொண்ட துவைனம் ஆரம்பத்தில் 12000 ரூபாவையும் ஓய்வு பெறும் போது 18000 ரூபாவையும் வருடாந்த சம்பளமாகப் பெற்றார். ஓய்வுபெற்ற பின் 12,333 ரூபாவை ஓய்வூதியமாகவும் சேர் துவைனம் பெற்றார். ஓய்வு பெற்ற பின் கடற்கரை வீதியிலிருந்த அல்பேர்ட் வில்லாவில் (Alferd Villa) தனது ஓய்வு காலத்தைக் கழித்து வந்தார் சேர். துவைனம். குடியேற்ற நாடுகளின் செயலாளர் உட்பட பலராலும் பாராட்டப்பட்ட துவை னம் சிறந்த நிர்வாகியாக விளங்கினார்.

09.04.1897 அன்று சேர் துவைனத்தின் பாரியார் லேடி துவைனம் காலமானார். மனைவி காலமான செய்தி கேட்டு துவைனம் கொழும்பிலிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் திரும்பி மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டார். லேடி துவைனத் தின் இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நவம்பர் 1898 சேர் துவை னத்தின் மூத்த மகன் பச்சிலைப் பள்ளியில்(தற்போதைய கிளி நொச்சி மாவட்டம் அவ் வேளை யில் பச்சிலைப்பள்ளி என அழைக்கப்பட் டது) மலேரியா காய்ச்சலால் மரண மானார். 05.02. 1899 அன்று அரசாங்க அதிபர் லெவேர்ஸ் பொது மக்கள் சந்திப்பு ஒன்றை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடத்தினார்.

14.12.1899 அன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற ஆபத்தில் உதவும் நண்பர்கள் (Friend in need society) கழக கூட்டத்தில் இந்தக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வைத்தியசாலையை (Friend in need society hospital) அரசாங்கத்திடம் கையளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மருத்துவமனை தான் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை யாக மிளிர்கிறது. ஆங்கிலேய அரசாங்க அதிபர்க ளான டைக், துவைனம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் பேர்சிவல் ஆகியோர் யாழ்ப்பாண வைத்தி யசாலை உருவாக்கத்தில் முன்னின்று உழைத்தவர் கள். அரசாங்க அதிபர் டைக் யாழ்ப்பாண வைத்தியசாலை கட்டட நிதிக்கு பத்தாயிரம் ரூபா அன்பளிப்புச் செய்ததா கவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

01.01.1900, 1892ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறுநகர சுகாதார சட்டத்தின் கீழ் (Small town sanitary ordinance) பருத்தித்துறையும் இணைக்கப்பட்டது.

மே 1900 ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் துவைனம் முத்துக்குளிப்பு மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டார். 1900 ஆம் ஆண்டு பிரிட்டிஷார் ஆட்சியில் என்றுமில்லாதளவு பெருந்தொகைப் பணத்தை வருமா னமாக முத்துக்குளிப்பு மூலம் பெற்றுக் கொடுத்தார்.

01.03.1901 நான்காவது சனத் தொகைக் கணிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது.
வடமாகாணம் -340936 பேர்,
யாழ்ப்பாணம் - 33879பேர்

6.6.1901 யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராகக் கடமையாற்றிய பஸ்தியாம்பிள்ளை காலமானார்.

14.07.1907 அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி லெவேர்ஸ் கொழும்புசென்று கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து திருமதி லெவேர்ஸை கரடி ஒன்று தாக்கியது. திருமதி லெவேர்சுடன் கூடச் சென்ற வேலைக்காரன் கரடியைச் சுட்டுக்கொன்றான்.

தாண்டவன்


(தொடரும்)

# வெள்ளறுகு குடல் நோய் தீர்க்க வல்ல மூலிகை மூங்கில் அரசி, வரகு குரக்கன் போன்று நலன் தரும்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**வெள்ளறுகு**

**தாவரவியற்பெயர்:** Enicostema Littorale
**எனிகோஸ்ரெமா லிற்றோராலே**
**குடும்பம்:** GENTIANACEAE
**ஜென்ரியானேசியே**
**சிங்களப்பெயர்:** ஜென்தும்ப
**சமஸ்கிருதப்பெயர்:** கோஜிஷ்வா



**ஆங்கிலப் பெயர்:** Indian Gentian

இது பூண்டு வகுப்புக்குரியது. சிறிய தனி இலைகள் மழைக்காலத்தில் வயல் வரம்புகள், தரிசு நிலங்களில் முளைத்துக் காணப்படும். மருத்து வத்தில் அதிகம் பயன்படுகிறது.

இப் பூண்டைக் குடிநீர் செய்து குடித்து வரக் குன்மம், குடல்நோய், கீல்பிடிப்பு, தினவு, சிரங்கு முதலியன மாறும் .

இதைத் தனித்து அல்லது மஞ்சளுடன் சேர்த்தரைத் துக் கரப்பன், சிரங்கு முதலியவற்றுக்குப் பூசிவரலாம்.

பூண்டை உலர்த்திப் பொடி செய்து 1-2கிராம் அளவில் வாதநோய்களுக்கு பாவிக்கலாம்.

**மூங்கில்**


**வேறு பெயர்:** வேணு, வம்ச விருட்சம்,வேய்
**தாவரவியற்பெயர்:** Bambusa arundinacia
**பம்பூசா அருண்டினேசியா**
**குடும்பம்:** Graminea (கிராமினியா)
**சிங்களப் பெயர்:** உண
**சமஸ்கிருதப் பெயர்:** வம்ச
**ஆங்கிலப் பெயர்:** Bamboo

மூங்கில் என்றதும் அதிலிருந்து செய்யப்படும் புல்லாங்குழலும் அதை இசைக்கும் கண்ணபிரானும் நினைவிற்கு வருவர். மூங்கிலில் மஞ்சள் மூங்கில், பச்சை மூங்கில் என்ற பேதங்களுண்டு. மூங்கில் முப்பது வருடங்களுக்கொருதடவை பூத்துக் காய்க்கும். மூங்கிலின் விதை மூங்கிலரிசி எனப்படுகிறது. இதனை மக்கள் உணவாகச் சமைத்து உண்பதும் உண்டு. இதற்குப் பஞ்சம் காக்கும் அரிசி என்றும் ஒரு பெயருண்டு. மூங்கில் கணுக்களிலிருந்து வெண்மை நிறமான ஒரு பொருள் எடுக்கப்படுகிறது. அதற்கு மூங்கிலுப்பு என்று பெயர். மூங்கில் இலை, வேர், அரிசி, உப்பு முதலியன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

மூங்கில் இளங்குருத்தை உணவாக உட்கொள் ளலாம். இதனால் குடற்சூலை, வயிற்றுநோ என்பன மாறும்.

மூங்கிலரிசி மதுமேக நோயினர்க்கு ஏற்ற உணவா கும். வரகு, குரக்கன் போலவே இதுவும் நலம் தரும்.

வேரை அரைத்துச் சொறி, சிரங்குக்குப் போட .



அவை மாறும். இலைச்சாற்றை அழுகிய புண்கள், புழுப்பிடித்த புண்களின் மீது பூச அப்புண்களிலுள்ள புழுக்கள் வெளியேறி, புண்ணும் ஆறும். இளங் குருத்தைக் குடிநீர் செய்து கொடுக்க சூதக்கட்டு, வெள்ளை சாய்தல் மாறும்.

மூங்கிலுப்பைத் திப்பலி, இலவங்கம் என்பவற்றுடன் சேர்த்து இடித்துப் பொடி செய்து சீனி சேர்த் துச் சாப்பிட இருமல், இரைப் பிருமல் முதலியன நீங்கும்.★★★★★



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S).
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRITISH COUNCIL

## Have you ever thought about training to become an English teacher?



**What is the CELTA?**
The Certificate in Teaching English to Speakers of Other Languages (CELTA) is an internationally recognised EFL qualification. Whether you have trained to teach another subject or have never taught before, the CELTA course will help you to develop the skills you need to teach English as a foreign language.

**What does the CELTA course consist of?**
The course lasts for ten weeks and is held on **Sundays and Mondays**. The input is given in the form of workshops designed to be as "hands on" and practical as possible. The120-hour course includes the following: input sessions and teaching practice with extensive feedback, assignment preparation, and observation of experienced teachers and their peers.

**When is the course?**
The next course is from **9 October to 17 December 2010**
Application deadline **10 September 2010**
**Fees:** Rs 290,400 and we are offering a number of discounted places to potential teachers in or from the Jaffna area

For more information contact:
British Council, 49 Alfred House Gardens, Colombo 3
T (011) 4521521, (011) 7521521, 0772521599
E info.lk@britishcouncil.org

**Opening times:**
Monday to Sunday 0830 – 1900

**www.britishcouncil.org/srilanka**

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவருக்கு மணமகள் தேவை. டாக்டரின் வயது 30, உயரம் 5' - 10''

தொடர்பு :077-3448863

## திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல்அமுதன் பாரிய சேவைக் கட்டணக்குறைப்பு! விவரங்களைச் சுயதெரிவு முறை முன்னோடி, சர்வதேச, மூத்த, திருமண ஆற்றுப்படுத்துநர் வேல்அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொண்டு விசாரித்தறிக!

தொ.பே:0112360488, 0112360694, 0114873979

## House for Rent

A big house and property along Kandy road, Chavakachcheri, opposite the old police station, a big yard in the front, large rooms, four toilets including two attached bathrooms with commodes is available for rent or lease for two years.

**Please Contact: 0777184585**

## அல்பம் கட்டுதல்

(டிசைனிங் உட்பட)

நெக்கற்றிவ் அல்லது CD நீங்கள் தந்தால் ஹெரிஸ்மா அல்பம் கட்டுவதற்கு

*10×30 - 1 சீற் 600/-*
*உ-ம்*
*30 சீற் அல்பம் கட்டுவற்கு*
*30×600 = 18,000/-*
*கட்டும் கூலி = 3,000/-*
*21,000/-*

*டிஜிற்றல் அல்பம் கட்டுவதற்கு*
*10×15 - 1 சீற் 200/-*
*உ-ம்*
*50 சீற் அல்பம் கட்டுவதற்கு*
*50×200 = 10,000/-*
*கட்டும் கூலி = 3,000/-*
*13,000/-*

*பிரதியாக்கம்*
*10×30 - 120.00, 12×24 - 130.00*
*10×15 - 60.00*

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
*62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
தொ.பே: 021 222 1358

## இறுதி வாய்ப்பு
### STUDY IN UK

CELEBRATING 8 YEARS

IELTS இன்றி உங்கள் Student VISAவினை பெற்றுக்கொள்ள இன்னும் சில நாட்களே உள்ளன.

3 ½ வருட VISA உத்தரவாதம்.
20மணிநேர பகுதிநேர வேளைவாய்ப்புடன்.
**Bank Loans & Sponsor Arrangements**

Approved & Accredited By : Quality Study Abroad Network. United Kingdom. Reg.No: QRS12007004

**Admission From A - Grade Colleges**

**Hotlines: 0777341498 0778156616**

EBS INTERNATIONAL (PVT) LTD
No. 35, St. Lawrence Road, Colombo 06.
Tel: (011) 2362534
E-mail: ebsmanager@gmail.com

Reg No: N(PVS) 352110

## தபால் மூல கல்வி (சகல பாடநெறிகளும் தமிழ் மொழிமூலம்)
### இதழியல்/முகாமைத்துவம்/மனயியல்



| | |
|---|---|
| Diploma in Business Management | - வியாபார முகாமைத்துவம் |
| Diploma in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவம் |
| Diploma in Marketing Management | - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் |
| Diploma in Office Management | - அலுவலக முகாமைத்துவம் |
| Diploma in Sales Management | - விற்பனை முகாமைத்துவம் |
| Diploma in Administrative Management | - நிர்வாக முகாமைத்துவம் |
| Diploma in Financial Management | - நிதி முகாமைத்துவம் |
| Diploma in Travel & Tourism Management | - சுற்றுலாத்துறை முகாமைத்துவம் |
| Diploma in Personnel Management & Industrial Relationship | - தொழிலாளர் மேலாண்மையும் தொழில் உறவுகளும் |
| Diploma in Journalism | - இதழியல் |
| Diploma in Journalism & Mass Media | - இதழியல மற்றும் பொதுமக்கள் தகவல் தொடர்பு |
| Diploma in Child Psychology | - குழந்தை மனையியல் |
| Diploma in Psychology | - மனையியல் முகாமைத்துவம் |
| Diploma in Montessori Teaching | - முன்பள்ளி ஆசிரியை பயிற்சி |

➤ வீட்டில் இருந்தே கல்வி கற்கலாம் ➤ இந்திய பாடத்திட்டம்
➤ வயதெல்லை இல்லை ➤ இந்திய மற்றும் ஐரோப்பிய சான்றிதழ்

பாடநெறி முடிவில் இந்திய *SIGMA* நிறுவன *Diploma* சான்றிதழ் மற்றும் *UK International Corporation for Professional* நிறுவனத்தாரின் உறுப்புரிமை *(MemberShip) AICP(UK)* சான்றிதழ் வழங்கப்படும். *AICP(UK)* தகைமை பெற்றவர்கள் தங்கள் பெயருடன் *Title* ஆக பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**SIGMA INSTITUTE OF MANAGEMENT**
169, George R De Silva Mawatha, Kotahena, Colombo 13.
(Near Sampath Bank) Tel: 011 3135834 , 0777 897 892

## காணி விற்பனை

மல்லாகம் நீதிமன்ற வீதியில் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக சற்சதுர மூன்று பரப்புக்காணி உடனடியாக விற்பனைக் குண்டு.

*தொடர்பு கொள்ளவும்,*
*தொலைபேசி இல:- 0774104846*

*(102516)*

## ST.PATRICK'S COLLEGE, JAFFNA
## புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
### புதிய அனுமதி - 2011

புதிய அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மதியம் 12 மணி வரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் (பரீட்சைக்கட்டணம் உட்பட) ரூபா 500/= ஆகும்

- *தரம் 01* இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2005 இற்கும் 31.01.2006 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
- *தரம் 06* இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

புதிய அனுமதித் தேர்வு 23.10.2010 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகும்.

குறிப்பு:
தகுதியுடைய மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 05 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. கல்லூரியில் வருடாந்தம் சிறந்த பெறுபேறுகள் பெறும், உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் எமது கல்லூரியால் வழங்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைக்கவும் அவை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் 25.09.2010. தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(சி/570179) அதிபர்.

## திராட்சை அறுவடை

கோப்பாய்,ஒக்.29

வலி.கிழக்கு உரும்பிராய், ஊரெழு, சிறுப்பிட்டி, நவக்கிரி ஆகிய பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட திராட்சை பழங்களின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

தற்போது இங்கு கிலோவொன்று 200 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட திடீர் தொடர் மழை காரணமாக பழங்கள் பலவும் விறைத்து வெடிப்பதன் காரணமாக செய்கையாளர்கள் அவற்றை உடன் வெட்டி விற்பனை செய்வதால் இவற்றின் விலை வீழ்ச்சி கண்டுள்ளதாக உற்பத்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இப்பகுதிகளுக்கு வரும் தென்னிலங்கைப் பயணிகள் மற்றும் வியாபாரிகள் பலரும் நேரடியாக இவற்றைக் கொள்வனவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(த-72)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
### ADMISSION - 2011 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10
### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10இற்கான அனுமதி 2011

01. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2010 முதல் 15.09.2010 வரை பெற்றுக் கொள்ளலாம்.
    ஆ. எக்காரணம் கொண்டும் 15.09.2010 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
    இ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
    ஈ. விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2010 திங்கட்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
05. வயதெல்லைகள்:
    அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2005இற்கும் 31.01.2006இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
    ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2002இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
    இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L 2013 Batch) விண்ணப்பதாரி 01.02.1994இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 09.10.2010 சனிக்கிழமை காலை 09 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும், உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப் பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கும் (A/L 2013 Batch) தமிழ்/ ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப் படும். அனு மதிப்பரீட்சை 03.01.2011 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 10.01.2011 ஆரம்பமாகும். ஆங்கிலமொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான, கணித, வர்த்தகத் துறைகளுக்கு நடைபெறும்.
03. சுண்டிக்குளி மகளிர்கல்லூரியில் தரம் 12 (A/L)(தமிழ்/ ஆங்கிலமொழி மூலம் 2013 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

(சி/56998) அதிபர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா காலத்தையொட்டி துர்க்காதேவி மணிமண்டபத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் கடந்த 26 ஆம் திகதியன்று இடம்பெற்ற இசை நிகழ்ச் சியில் செல்வி சுகன்யா புலேந்திரகுமார் இசைக்கச்சேரி செய்வதையும், திருமதி மதுரா பாலச்சந்திரன் (வயலின்), பிரம்மஸ்ரீ ஜி.சுவாமிநாத சர்மா (மிருதங்கம்), ஏ.செல்வ நாயகம் (கடம்) ஆகிய பக்கவாத்தியக் கலைஞர்களையும் படத்தில் காணலாம்.

# விருந்து பசிக்கு மருந்து

ஒரு கிராமத்தின் மத்தியிலே சகல வசதிகளுடன் கூடிய மாளிகை போன்ற ஒரு வீடு. அலங்காரம், ஆடல், பாடல், கேளிக்கைகள் களைகட்டி இருந்தது. புத்தாடை, பட்டாடை, அலங்கார ஆபரணங்கள் விதவிதமான வாகனங்களுடன் உறவினர்கள், அந்தஸ்துள்ள பிரமுகர்கள் ஒன்று திரண்டனர். காரணம் சுப்நிகழ்வு விருந்து அங்கே.

பலவித உணவுகள் விருப்பத்துக்கேற்ப பரிமாறப்பட்டது. பசிபோக்க அன்றி ருசி பார்க்க வந்தவர் போல் விமர்சனத்துடன் விருந்துண்டனர். விரயமான மிகுதிகள் ஏராளம் குப்பை வாளியில்,

கொண்டாட்ட வீட்டைச் சுற்றிக் குடியிருந்தனர் சேரிவாழ் ஏழைகள். அடுத்த வேளை உணவுக்கு எங்கே போவது என்ற ஏக்கத்துடன் இருக்கும் அவர்கள் கண் முன்னே குப்பை மேட்டில் குவிந்தது டாம்பீக விழாவில் எஞ்சிய உணவுகள்.




பேருக்கும், புகழுக்கும், பண பலத்தின் வெளிப்பாட்டுக்குமே இன்றைய விழாக்களும் விருந்துகளும் ஏற்பாடாகின்றன போலும். 'விருந்து' என்பதன் உட்பொருள் அர்த்தமற்றதாகிவிடுகிறது. தன்னிறைவு உள்ளோரும், தராதர முகங்களும் சேர்ந்து உண்டு மகிழும் செலவீனத்தைக் கட்டுப்படுத்தி பசியுள்ள மக்களுக்கு உணவளிப்பது அல்லவா விருந்தின் நிறைவு.

'நீர் விருந்து அளிக்கும் போது உம் நண்பர்களையோ, சகோதரர்களையோ, உறவினர் களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்கு கைமாறு ஆகிவிடும்.

மாறாக ஏழைகளையும், உடல் ஊனமுற்றோரையும், பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்குக் கைமாறு செய்ய அவர்களிடம் ஒன்றும் இல்லை. விண்ணகத் தந்தை இறையாட்சி விருந்தில் கைமாறு அளிப்பார்' (லூக் 14:12-14)

உண்மையான விருந்து எவ்வாறு அமைய வேண்டுமென இங்கே இயேசு ஆணித்தரமாக எடுத்து உரைத்துள்ளார்.

வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாது வழங்க இன்று பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நமது அயலில் வன்னி நிலப்பரப்பில் வாழ்வைத் தொலைத்து வாடும் அனேகர் உணவு, உடை, உறையுள் வசதிகளற்று வாழ்வுக்காகப் போராடிக்கொண் டிருக்கிறார்கள்.

விழாக்கள், விருந்துகள், கேளிக்கைகள், ஆடம்பரச் செலவுகளை மட்டுப்படுத்தி சமய அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், நேரடி சந்திப்புக்கள் வழியாக எம் உற வுகளுக்கு உதவ முன்வருவோம். இறுதி நாளில் இறைவனின் விருந்தில் பங்கு கொள்ள அடித்தளமிடுவோம்.

- எஸ்.யேசுதாஸா -

# கற்பித்தல் பணிக்கு இலக்கணமாய் வாழ்ந்த ஆசிரியப் பெருந்தகை சோமசுந்தரம் அம்பலவாணர்



மீளாத் துயரில் சாய்ந்துவிட்ட ஒரு விழுமிய வித்தகன் விண்ணில் இருந்து மண் புகுந்த ஒரு இளஞாயிறாக இதுகாலும் அறிவொளி பரப்பி அன்பு மணம் கமழ அஞ்ஞானம் போக்கி மெஞ்ஞானம் தந்து மேதினி வாழ்வில் வளம் பல கண்டு தானும் வாழ்ந்து தமரையும் பிறரையும் வாழ்வித்து வையக வாழ்வை நீத்த வள்ளண்மை வாய்த்த, விண்ணவரும் போற்றும் வள்ளலது சிறப்பினை விள்ளுதல் நன்றென உணர்ந்து அவர் தம் சிறப்பினை நயம்பட நவில்கிறேன்.

## நீத்தார் நயப்புரை

இளமையிலே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் ஒரு சிறந்த தமியனாய் அன்பு மேலூற வளர்ந்து பல்கலை அறிவைத் தேடி பன்னரும் பனு வல்களைப் பயின்று தேறித்தான் பெற்ற அந்தப் புலமையை, தன் எழுத்தாற்றல் மிளிரும் கட்டுரைகளாக, கதைகளாக வாசகர்களுக்கு விருந்தாகப் படைத்து பயனுற வாழ்ந்தவர் எங்கள் இதயத்தில் நீங்காது நின்று ஒளிரும் சோமசுந்தரம் அம்பலவாணர் அவர்கள். தன் இளமைக் கல்வியை புற்றளை சாரதாபீட வித்தியாசாலையில் பயின்று, அதன் பின் வேலாயுதம் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்து கல்லூரிக் கல்வியை முடித்த பின்னர் தென்னிந்தியாவிலுள்ள திருச்சியில் கல்வி மணம் பரப்பும் புனித ஜோசப் கல்லூரியில் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகக் கற்றுத்தேறியவர் திரு. அம்பலவாணர் அவர்கள்.

ஆசிரியர் தொழிலை அவர் நாடிய போது, தான் அனுபவிக்க நேர்ந்த இன்னல்களை வென்றிடுமுகமாக சிங்களமொழியைக் கற்றுத்தேறி ஒரு விஞ்ஞான ஆசிரியராக அவர் பணியிலமர்ந்தார். ஒரு நல்லாசிரியர்க்குரிய சகல தகைமைகளும் கொண்ட அம்பலவாணர் அவர்கள் ஆசிரியர் என்ற பதத்தில் பொதிந்துள்ள அர்த்தங்களை நடைமுறையில் செயற்படுத்தியவர். வெறுமனே தான் பயின்றதை மற்றவர்க்குப் புகட்டுவதே தன் பணி என்று இராது மாணவர்களது குற்றங்களைக் களைந்து அவர்களின் அறிவும் குணமும் மேம்பட உதவி, இன்று எம்மை விட்டகன்றாலும் எங்கள் நெஞ்சத்தில் நிழலாடுகின்ற பெருமகன் திரு. அம்பலவாணர் அவர்கள்.

அவரின் பிரிவால் துயருறும் நாம், அவருடைய அரும்பெறல் புதல்வர் சாந்தி நிகேதன், அரும்பெறல் புதல்வி அமுதா மற்றும் அவர் தம் பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்களோடும் அவர் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்ற வள்ளுவர் வான்மறைக்கு ஏற்ப தம்முடைய மக்களை இந்த ஞாலத்திற்கு அளித்து தானும் அகமகிழ்ந்து ஏனையோரையும் அகமகிழ்வித்த அன்னாருக்கு அன்பொழுக நாம் இந்தக் கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்.

அவர் புகழ் ஞாலத்தில் என்றும் நிலைத்திடுக.

க.சி.சிவசுப்பிரமணியம்

# பரத நாட்டிய அரங்கேற்றம்



கனடா, ரொரண்டோவில் வசிக்கும் அஷானா - றொஷானா சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் கனடா ரொண்டோ சீன கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.

மனோகரன் - சிறி யோகானந்தி தம்பதியரின் புதல்விகளான அஷானா - றொஷானா சகோதரிகள் நாட்டியச் செல்வன் ஸ்ரீ சரவணபவ குகேந்திரனின் மாணவிகளும் வாசு சின்னராசாவின் முன்னாள் மாணவிகளும் ஆவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கந்தசாமி - யோகபாக்கியம் தம்பதியரின் பேர்த்திகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நவீன உலகில் கடதாசியின் பங்கு

இன்றைய காலகட்டத்தில் ஆரம்ப பாடசாலையில் (PRIMARY SCHOOL) கற்கை நெறிகளை மேற்கொள்ளுகின்ற மாணவர் தொடக்கம், நாட்டை ஆளுகின்ற ஜனாதிபதி வரை காகிதத்தை (Paper) பல்வேறு விதங்களில் பயன்படுத்துகின்றனர் என்பது வெள்ளிடைமலை.

கடதாசியின் தோற்றம், உற்பத்தி (Production), மூலப்பொருள் (Raw material), தரம் (Quality), வ (Grade), என்பவை பற்றி தெரிந்துகொள்வது பயனுடைத்தாகும். உலகில் முதன்முதல் காகிதத்தை கையினால் தயாரித்த பெருமை சீனர்களையே சாரும். சீனர்களிடமிருந்து அரேபியர்கள் அக்கலையைக் கற்று மேற்கு நாடுகள் எங்கும் பரப்பினர் என்பது வரலாறு. சீனர்களைப் பின்பற்றி பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் காகித ஆலையொன்று நிர்மாணிக்கப்பட்டது.

இந்தியாவில் முதன்முதலில் சிறுகைத் தொழில் (Small industries) முயற்சியில் காகித உற்பத்தி ஆரம்பமாகியது என்றும் அறிய முடிகின்றது.

இலங்கையில் முதலில் நீர்கொழும்பிலுள்ள 'காக்காப்பள்ளி' என்ற கிராமத்தில் கடதாசி தயாரிக்கப்பட்டது. மூலப்பொருள்களாக கந்தைத் துணி (Rags), வைக்கோல் (Paddy straw) பயன்படுத்தப்பட்டன. துரதிஷ்டவசமாக அந்த உற்பத்தி முயற்சியில் தன்னிறைவைப் பெறமுடியவில்லை.

1945 ஆம் ஆண்டளவில் நம்நாட்டில் காகிதத்தின் தேவை நன்கு உணரப்பட்டது. இதன் காரணமாக மட்டக்களப்புக்கு வடக்கே முப்பத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வாழைச்சேனை என்ற கிராமத்தில் பாரிய கடதாசித் தொழிற்சாலை (Paper factory) ஒன்று மேற்கு ஜேர்மனியின் அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அவ்வேளையில் கைத்தொழில் அமைச்சராகவிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் வடக்கில் காங்கேசன்துறையில் சிமெந்து மற்றும் பரந்தனில் இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கென்றும் இரு ஆலைகளைத் திறந்து வைத்தார். அதேவேளை கல்குடாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த காலஞ்சென்ற வி.நல்லையாவின் பெருமுயற்சியின் பயனாகவே கிழக்கு மாகாணத்தில் காகித தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனையும் கைத்தொழில் மந்திரியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1952 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைத்தார். பல்வேறு சிரமத்தின் மத்தியில் வாழைச்சேனையில் கடதாசி உற்பத்தி தொடர்ந்தது. உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் அதிகாரி தரத்திலுள்ள பலர் பயிற்சிக்காக இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் இயங்கிய கடதாசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு காகித உற்பத்திக்கான விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

கொலன்ன தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி அமைச்சருமான நந்தா மத்யூவின் பரிந்துரைக்கு அமைவாக எம்பிலிபிட்டியவில் இலங்கையின் இரண்டாவது காகித தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

காலப்போக்கில் இரு கடதாசி தொழிற்சாலைகளும் கணிசமான அளவு காகிதத்தை வெற்றிகரமாக உற்பத்தி செய்து சாதனை படைத்தன. வாழைச்சேனை காகித ஆலை 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து [illegible]யில் தேசிய உற்பத்தி திறன் விருதினை வென்றமை ஒரு விசேட அம்சமெனக் கொள்ளலாம். இரு காகித ஆலைகளும் உற்பத்திக்கு பிரதான மூலப்பொருளாக வைக்கோலையே பயன்படுத்தி வந்தன. மாரிகாலம் ஆரம்பிக்க முன்னர் வைக்கோலைச் சேகரித்து வைக்கும் நோக்குடன் வாழைச் சேனை ஆலை நிர்வாகம் கொடுவாமடு, சம்மாந்துறை, ஒலுவில் போன்ற இடங்களில் வைக்கோல் சேகரிப்பு நிலையங்களை யும் (Straw Purchasing Centers) தொடக்கி வைத்தது. அவ்வாறே எம்பிலிப்பிட்டியா ஆலைக்கென்று முறுத்தவெல, யோதகண்டிய, பீரவெல ஆகிய பகுதிகளில் வைக்கோல் சேகரிப்பு நிலையங்கள் இயங்கின.

ஒரு கடதாசியை எடுத்து இரண்டாகக் கிழித்தபின் ஓரங்களை உன்னிப்பாக உற்று நோக்கினால் கிழிக்கப்பட்ட இடத்தில் இழைகள்(Fibres) தென்படுவதைக் காணலாம். இந்த இழைகளை 'செலுலோஸ்' (Cellulose) என அழைப்பர். இவை இயற்கையாகவே தாவரங்களில் காணப்படுகின்ற வைக்கோல், கெனஃவ் (Kenaf), சணல் (Sunhemp), யூகலிப்ரஸ்(Eucalyptus) போன்ற மூலப்பொருள்களைப் பயன்படுத்தி வந்தன. ஆனால் இவைகளை உற்பத்திக்குப் பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் மாசடைகின்ற காரணத்தினால் மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்தியே காகிதம் தயாரிக்கப்படுகின்றது.

முன்னைய அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தியதால் நம் நாட்டின் காகித உற்பத்திக்கு பெரும் தடங்கல் நிலை ஏற்பட்டது. விற்பனையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் காகித வகைகளுடன் நாம் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது தெற்காசிய காகித ஆலைகளின் 'பொண்ட்' (Bond), 'லெட்ஜர்' (Ledger), தட்டச்சுக் கடதாசி (Type writing sheet), 'நியூஸ்பிறின்ற்' (News print) வர்த்தக சமுகத்தினர் வாஞ்சையுடன் உபயோகிக்கும் கொறுஹேற்றிங் மீடியம் (Corrugating medium), 'ரெஸ்ற் லைனர்' (Test liner), கிறாஃவ்ற் (Kraft), மார்க்கர் (Marker) 'விக்டோறியா புளூ (Victoria blue) போன்ற காகித வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இரட்டித்தல் கடதாசி (Duplicating) யையும் இந்தப் பட்டியலில் இணைத்துக் கொள்ளலாம்.

இவற்றின் மூலம் நீண்ட நாள்களுக்குப் பழுதடையாமல் நிலைத்திருக்கக் கூடிய பிறப்பு, இறப்புச் சான்றிதழ் (Birth and death certificate) காணி உறுதி (Deed) கல்விச் சான்றிதழ் (Educational Certificate), பரீட்சை வினாத்தாள் (Question Paper), விடை எழுதும் கடதாசி (Answer Paper), இலவச பாடநூல் (Free text book), போன்றவற்றிற்கான கடதாசிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்குத் தரமான வெளிநாட்டு கடதாசியும் கைகொடுத்து உதவுகின்றமையை மறுப்பதற்கில்லை.

உலகெங்கிலும் தினமும் நிகழுகின்ற புதினங்களைச் சுடச்சுட வாசிப்பதற்கு எமக்கு உதவுகின்ற நாளிதழ்கள், சஞ்சிகைகள் என்பனவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நியூஸ் பிறிண்ற் உருளைகளே (Reels) பயன்படுத்தப்படுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்காய் ஆகும்.

ஆசிய காகித் ஆலைகள் பலதரப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் உற்பத்தியை தொடருகின்றன என்பது நிதர்சனமான தொன்றே.

அருணா தருமலிங்கம்
செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஓகஸ்ட் 29 முதல் செப்ரெம்பர் 05 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். நெடு நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் முடியும். மனைவி, குழந்தைகளின் விருப் பங்களை நிறைவேற்ற கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கலாம். உத்தியோகம், விவசாயப் பணிகள், வர்த்தகம், வீடு, மனை தொடர்பான விஷயங்கள், சட்டம், காவல் துறை தொடர்பான வகையில் நன்மைகள் கைகூடும். போட்டி, எதிர்ப்புகளை முறியடித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்களுக்காக சில நல்ல காரியங்களைச் செய்யலாம். கடன்பிரச்சி னைகளை தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். புதன் சாதகமாக இருப்பதால், கல்வி முயற்சிகள், மாமன், மைத்து னர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. இருந்தாலும், தேக ஆரோக்கியத்தில் சிறு குறைபாடுகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை சந்திக் கலாம். கேது சாதகமான நிலையில் உள்ளதால் மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். இளைய உடன் பிறப்புகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சுக்கிரன் சாதகமற்ற நிலையில் உள்ள தால் பெண்கள், பயணங்கள், போன்றவற்றால் செலவுகள் கூடும்.

### இடபம்

இந்த வாரம் உடல் நலக் குறைவுகளால் அவதிப்படலாம். முக்கியமான கோயில்களுக்கு சென்று வழிபாடு நடத்தும் சூழ்நிலை உருவாகும். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலைகள் காரணமாகவோ பரபரப்பாக செயற்படலாம். உறவினர் கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. அவ்வப்போது மன அமைதியை, நிம்மதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சொத்து விவகாரங்கள், சகோதரர்கள், பொலிஸ் தொடர்பான விடயங்கள், உத்தியோக ரீதியான காரியங்கள், கட்டடப்பணிகள், கடன் விவகாரங்கள் போன்றவற்றில் சிரமங்கள், மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். இருந்தாலும் சற்று ஆறுதலான அனுபவங்களையும் அவ்வப்போது எதிர்கொள்ளலாம். பொழுது போக்கு விடயங்கள், கேளிக்கை கொண்டாட்டங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில் ரீதியாக பரபரப்பாக செயல்பட நேரிடலாம். அடுக்கடுக்காக பல வேலைகள் குவிய லாம். குரு வக்கிர கதியில் இருப்பதால், பெரிய மனிதர்கள், நல்லவர்களின் ஆலோசனை, உதவி கிடைப்பது கடினம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகள் சுலபமாக முடியும்.

### மிதுனம்

இந்த வாரம் மந்தம், மறதி, கவனக்குறைவு போன்றவற்றால் அவதிப்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். குடும்பத்தில் வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனஅமைதி பாதிக்கப்படலாம். முக்கிய வேலைகளில் முடக் கம் ஏற்படலாம். தண்டச் செலவு நேரும். கலகலப்பான அனுபவங்களைச் சந்திக்கலாம். எதிர் பாராத பணவரவு ஒன்று வந்தாலும், அதை மற்றொரு வகையில் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லலாம். தடைப்பட்ட காரியங்கள் விறுவிறுப்பாக முடியும். முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்களில் முன்னேற்றம் உண்டு. மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண் பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். தரகுத் தொழில் புரிவோர் கணி சமான வருவாய் பெறலாம். உடல் ரீதியாக சிறு, சிறு உபாதைகள் அவ்வப்போது உங்களை ஆட்கொண்டு உற்சாகத்தை குறைக் கலாம். வேலைப்பளுவும் அதிகரிக்கும். எந்த வேலையும் சுலபமாக முடியாமல் கடுமையாக இழுத்த டிக்கலாம். காரிய வெற்றி உண்டு. பணம் வரும்.

### கடகம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பழகிய சிலர் மூலமோ அல்லது நண்பர்கள் மூலமோ பணவரவுகளைப் பெறலாம். அயலார் மத்தியில் உங்க ளின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கடுமையான வேலை நெருக்கடிகள் இருந்தாலும், அனைத்தையும் செய்து முடிப்பீர்கள். எதிலும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். மற்றவர் களின் விமர்சனங்கள், வீண் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வராமல் இழுத்தடிக்கலாம். பயணங்களில் தடை ஏற்படலாம். எந்த பிரச்சினைகளையும் சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். பொலிஸ், நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் நீங்கள் எதிர்பார்த்தது போல சாதகமாக அமையலாம். வேலையாட்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். தடைபட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடும் சூழ்நிலை உருவாகும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் மீதான பாசம் அதிகரிக்கும். அவர்கள் கேட்டதை கொடுப்பீர்கள். சூடான பேச்சுவார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்களில் தொல்லைகளே அன்றி, அனுகூலம் இல்லை. எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். செலவு உண்டு.

### சிங்கம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பல மணி நேர மாகும் என, நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். பெரிய மனிதர் களின் சந்திப்பு நிகழும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சந்தோஷமான அனுப வங்களை எதிர்கொள்ளலாம். அடுத்த சில நாள்களுக்குப் பின் நடைபெற உள்ள காரியங்களுக்காக முன் னேற்பாடு செய்வீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் தன, பண நெருக்கடி, கொடுக்கல் வாங்கல்களில் குளறுபடி, நினைத்த பொருட்களை வாங்க முடியாமல் தட்டுப்பாடு, குடும்ப உறுப்பி னர்கள் இடையே கடும் பேச்சுவார்த்தைகளால் சர்ச்சைகள் உண்டாகும். உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற விடயங்களிலும் இடர்பாடுகள், தொல்லைகள் தொடரும். காவல்துறை தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். நண்பர்கள், உறவினர்கள், மாமன், மைத்துனர்கள் போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். அவர்கள் கேட்ட உதவியைச் செய்யவும், அவர்களை உபசரிக்கவும் கணிசமான பணத்தை செலவிடலாம். எதிர் பார்த்த நல்ல செய்திகள் வருவது தாமதமாகலாம். பிள்ளைகள் வழியிலோ அல்லது மற்ற வகையிலோ கணிசமான தொகை செலவாகலாம். பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. எதிலும் கவனம் அவசியம்.

### கன்னி

இந்த வாரம் மற்றவர்களை நம்பி ஒப்படைத்த சில வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங் களே செய்ய நேரிடலாம். அனாவசியமாகப் பேசி சில விடயங்களில் வம்பில் மாட்டிக் கொள் வீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். கவலைகள் விலகி மனதில் நிம்மதி குடிகொள்ளும். உடல் நலம் சொல்லிக் கொள்ளும் வகையில் திருப்திகரமாக இருக்காது. சிலர் கடன் பிரச்சினைகளால் கலக்கம் அடையலாம். உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற விடயங்களிலும் சிரமங்கள். வேலைப்பளு அதிகரிக்கும். எதையும் நினைத்த வேகத்திற்கு நடத்திக்கொள்ள முடியாமல் தவிர்க்கலாம். இருந்தாலும், பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவதிலும், அணிவதிலும் நாட்டம் செல்லும். மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பீர்கள். தந்தை, அரசி யல் வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையில் செலவு, அலைச்சல்கள் நேரும். தந்தையுடன் வாக்குவாதங்களை தவிர்ப் பது நன்மை தரும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், கல்வி முயற்சிகள், போன்றவற்றில் அனுகூலம் உண்டு. ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த சிலரை எதிர்பா ராமல் சந்திக்கலாம்.

### துலாம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சில காரியங்களுக்கு ஒன்றுக்கு இரு மடங்காக செலவாகும். சில விடயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாமல் மனம் அலை பாயும். பேராசைகளால் இழப்புகள், சங்கடங்களுக்கு ஆள்படலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் சிரமங்கள், தொல்லைகளைச் சந்திக்கலாம். எந்தக் காரியமும் நினைத்த வேகத்திற்கு முடியாமல், மெதுவாக நடக்கலாம். தொழில் செய்வோர் வேலையாட்கள் இல்லாமல் அவதிப்படலாம். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விவகாரங்களாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். வீடு, மனை வாங்கும் விடயங்களில் ஒன்றுக்கு பலமுறை யோசித்து செயற்பட வேண்டும். சிலர் வீடு கட்டுவதற்காக கணிசமான பணத்தை செலவிடலாம் அல்லது அதற்காக கடன் வாங்கலாம். பெண்கள், பயணங்கள், வாகன பராமரிப்பு, உறவினர்களை உபசரித்தல், சகோதரிகள் உடல் நலத்தை கவனித்தல் போன்ற வழிகளில் செலவுகள் ஏற்படலாம். நண்பர்கள், உறவினர்கள், மாமன், மைத்துனர்கள் போன்ற வழிகளில் ஆதாயம், அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். உற்சாகம் கூடும்.

### விருச்சிகம்

இந்த வாரம் பணவரவுக்கும், முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்ளவும், பெரிய மனிதர்களின் உதவிகளைப் பெறவும் வாய்ப்பு உண்டு. சில பொருட்களை வாங்கலாம் அல்லது உங்களுக்குப் பிடித்தமான சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். வழக் கத்திற்கு மாறாக கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்டதிட்டம் நிறைவேறும். முக்கியமான வேலை ஒன்றை மற்றவர்களின் தலையீட்டால் முடிக்க முடியாமல் போகலாம்.சூரியன் சாதகமான நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல் வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். அரசியல் வாதிகள்மேலிடத்தின் பாராட்டுகளைப் பெறலாம். பணிபுரிவோர் நிர்வாகத் தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறை வேறும். தந்தைவழியில் சில உதவிகள் கிடைக்கலாம். எதிர்ப்புகள், போட்டி கள் முடங்கி நினைத்ததைச் சாதிப்பீர்கள். கடந்த காலத்தில் காலை வாரி விட்டவர்களே, உங்க ளுக்கு கை கொடுத்து உதவ முன்வருவர். காவல்துறையில் பணிபுரி வோருக்கு பதவி உயர்வு சாதக மாக அமையும். வருமானம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் சற்று எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். கடும் பேச்சு வார்த்தைகளை தவிர்க்க வேண்டும். தண்டச் செலவுகள் நேரும்.

### தனுசு

இந்த வாரம் குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டு மனஸ்தாபம் ஏற்பட லாம். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். எதிர்பார்த்தபடி சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். நல்ல சில காரியங்கள் நடக்கலாம். கணிசமான பணவரவுகளைப் பெறலாம். உங்களின் செல்வாக்கை பயன்படுத்தி மற்றவர்கள் ஆதாயம் பெறலாம். வேலைப்பளுவுக்கு குறைவிருக்காது. தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் ஏற்படும் நெருக் கடியால் மன அமைதி பாதிக்கப்படலாம். அடிக்கடி வெறுப்பு, விரக்தி, சலிப்பு ஆள்கொள்ளும். வாகனங்கள் வழியிலோ, உறவுப் பெண்கள் வழியிலோ அல்லது சகோதரிகள் வழியிலோ கணிசமான தொகையை செலவு செய்யலாம். நீதிமன்றம், காவல்துறை தொடர்பான விடயங்கள் எதிர்பார்த்தது போல அமைவது கடினமே. சில விடயங்களில் ஏடாகூடமாக செயற்பட்டு அவதிகளுக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் பெறலாம். கல்வி முயற்சிகள் சாதகமாக அமையும். தரகுத் தொழில் புரிவோருக்கு வருவாய் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவில் நெருக் கடிகள் வராமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விடயங்களில் சிரமங்கள் இருந்தாலும், அதை வெற்றி கரமாக சமாளிப்பீர்கள்.

### மகரம்

இந்த வாரம் சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். அதேநேரத்தில், சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையும் சூழ்நிலை உருவாகும். பண வரவுகளைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளை சந்திக்கலாம். திட்ட மிட்ட வேலைகளில் திடீரென மாற்றம் செய்யலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். பெருமைக் காக சில காரியங்களைச் செய்வீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள், நல்லவர்களின் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் நினைத்தது நடக்கும். கடனுதவி, நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசும் நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களால் ஆதாயம் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களில் சிரமங்கள் உண்டாகும். தந்தையுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோ ஷம் உண்டு. ஊக்கமும், உற்சாகமுமாகச் செயல்படுவீர்கள். காரிய வெற்றி, பணவரவு உண்டு.

### கும்பம்

இந்த வாரம் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். சிறிய வேலைகளுக்கு கூட பலமுறை அலைய நேரிடலாம். தேவையில்லாத பொருள்களை வாங்கி பணத்தைக் கரைக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். பெண்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமன்றி, பணவரவுகளையும் பெறலாம். கணவன் மனைவி உறவில் சச்சரவுகள் உருவாகலாம் என்பதால், பொறுமை அவ சியம். திடீரென கோபம் கொண்டு, மற்றவர்களிடம் எரிந்து விழுவது அதிகரிக்கும் என்பதால், எச்சரிக் கையாக நடந்துகொள்ள வேண்டும். பெற்றோர் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். அரசு தொடர்பான காரியங்கள் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உறவுப் பெண் கள், சகோதரிகள், ஆதாயம் பெறலாம். அவர்கள் வழியில் உதவிகள் கிடைத்து பெருமை அடைவீர் கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சகோதரர்கள், பங்காளிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். அவர்கள் வழியில் விரயமும் நேரலாம். சொத்து விவகாரங்களிலும் கவனம் அவசியம்.சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### மீனம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவி னர்கள், நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் விருப் பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்பட லாம். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை அவசரமாக முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். கூட்டுத் தொழில் விவகா ரங்களோ அல்லது கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளிலோ பலன் கிடைப்பது கடினம். பெண்கள் வகையில் எதிர்பாராத தண்டச் செலவு களைச் சந்திக்கலாம். உடல் ரீதியான உபாதைகளாலும், வாழ்க்கைத் துணைவரால் ஏற்படும் பிரச்சினைகளாலும் பலருக்கு மன அமைதி பாதிக்கப்படலாம். வழக்கு விவகாரங்கள் எதிர்பார்த்தது போல நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். தொழில் செய்வோர் சரியான வேலையாட்கள் கிடைக்காமலும், அப்படியே கிடைத்தாலும், அவர்கள் சரியாக செயற்படாததாலும் எரிச்சல் அடையலாம். அதே நேரத்தில், தந்தை வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக் கலாம். அரசகாரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல் வாதிகளுக்கு செல் [illegible] ஸ்தானத்தில் கேது இருப்பதால், அலைச்சல்களுக்கு குறைவிருக்காது. உறவி னர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். ஓய்வாக இருக்காமல் பரபரப்பாக ஏதாவது வேலைகளைச் செய்வீர்கள். பணவரவு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளத்தில் தேங்கியுள்ள நீரினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

கைதடி,ஓக.29

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்னால் உள்ள பாரிய பள்ளம் ஒன்றில் நீர் தேங்கி நிற்பதால் அப்பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசி வருவதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பள்ளத்தில் மழைநீர் தேங்கி நிற்பதுடன் தென்பகுதியில் இருந்து வந்து அரச உணவுக் களஞ்சியத்தில் தங்குவோரும் தங்களுடைய கழிவுப் பொருள்களை இந்தப் பள்ளத்தில் போடுவதனால் இங்கு துர்நாற்றம் வீசுவதாகவும், அத்துடன் அங்கு பற்றைகளும் வளர்ந்து இருப்பதனால் நுளம்புகளும் தாராளமாக உலா வருவதனால் இப்பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இவ்வீதியால் செல்லும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்த துர்நாற்றத்தை சுவாசித்தபடியே செல்கின்றார்களெனவும், இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை எதனையும் அவர்கள் எடுத்ததாக இல்லை எனவும் பலராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் இனியாவது தக்க நடவடிக்கை எடுத்து இங்குள்ள கழிவு நீரை அகற்றுவதுடன் இப் பள்ளத்தை மூடவும் வழி செய்ய வேண்டும் எனவும் இப் பிரதேச வாசிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-288)

# நல்லூரில் 'இந்து ஒளி' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.29

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' ஆடி - புரட்டாதி வெளியீடு நல்லைக்கந்தன் மகோற்சவ சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

இதன் வெளியீட்டு வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 11மணிக்கு நல்லைக் கந்தன் ஆலய வீதியிலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவதுடன் இந்து ஒளி சிறப்பிதழின் முதற்பிரதியையும் பெற்றுக் கொள்வார்.

இந்த வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி இந்து மாமன்றத்தின் உபதலைவர் சகல இந்துப் பெருமக்களையும் கேட்டுள்ளார். (த)

# வாகனங்களின் அதிகரிப்பினால் தினமும் தொடரும் வீதி விபத்துக்கள்

தென்மராட்சி,ஓக.29

வாகனங்களின் அதிகரிப்பினால் வீதி விபத்துக்களும் தினமும் அதிகரித்து வருகின்றன.

வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைவோர் தினமும் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

கடந்த 26 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் கே.சஜீதா (வயது - 31) என்னும் பெண்ணும், மட்டுவில் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் கே.தர்சன் (வயது - 29) என்பவரும் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வாரம் வீதி விபத்துக்களில் சிக்கி 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-203)

## ரமழான் சிந்தனை

ரமழானை எப்படி வரவேற்க வேண்டும் தெரியுமா? அதன் அருமை பெருமைகளை மறுபடியும் உணர வேண்டும். இறையச்சத்தைப் பெறுவதற்குத்தான் ரமழான். அந்த இறையச்சத்தின் நறுமணம் நமது வாழ்விலும் பரவ வேண்டும் என்ற அளப்பரிய ஆசையால் மனம் பரபரப்படைய வேண்டும். இம்மாதத்தின் ஒவ்வொரு இரவையும், பகலையும், ஒவ்வொரு மணித்துளியையும் நாம் பயன்படுத்த வேண்டும். எமது வாழ்வின் இலட்சியத்தையடையக் கூடிய சக்தியை எமக்குள் உருவாக்க வேண்டும்.

எம்.ஏ.காதர்

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவையொட்டி இளங்கலைஞர்மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு திருமதி சிவரஞ்சினி ரமணாவின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

கே.குகபரன் வயலினும், வீ.ரமணா மிருதங்கமும், கே.நந்தகுமார் முகர்சிங்கும் வாசிப்பர்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பி.ப. 3 மணிக்கு 'குருவாய் வருவாய்' என்னும் தலைப்பில் கவிமாமணி அன்னை தாசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.


மாதகல் காந்திஜீ அறநெறிப்பாடசாலை, இளவாலை சித்திர மேழி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை, சுழிபுரம் ஜெகசோதி அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபை நல்லைதிரு ஞானசம்பந்த ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு முத்தமிழருவி பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா 'ஆங் தோற்றம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (201)



# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## வெற்றிதந்து காத்தருள்வாய் வேலவா!

வடிவேலன் திருமேனி வடிவழகின் காட்சி - நல்லூர்
வாழ்கின்ற உமைபாலன் தருவானே மீட்சி
அடியாரின் மனமெங்கும் குகனேசன் ஆட்சி - அவன்
அடி தொழுதல் ஒன்றேதான் மானிடத்தின் மாட்சி

வெடியோசை ஓய்ந்தாலும் தீர்வேதும் இல்லை - தமிழ்
வித்தகனாம் முருகனவன் கருணைக் கோர் எல்லை
விடிவின்றி இருள் சூழ்ந்த வாழ்வென்னும் தொல்லை - தனை
வேரறுக்கும் கந்தனருள் முகைவிரியும் முல்லை

முடிவில்லா பரம்பொருளே முக்கண்ணன் பிள்ளை - நல்லூர்
முருகனருள் தேன்மழையில் மூழ்கும் மனம் கிள்ளை
விடியலிலே ஒன்றாகும் வண்டமிழர் கொள்கை - புது
வெற்றிதந்து காத்தருளும் சந்நிதியே நல்லை

வவலாயினி ரஞ்சனி
ஆனைக்கோட்டை.

## குறைதீர்க்க வா குமரா

சுட்ட பழம் தனை ஔவைக்குத் தந்த
சுந்தரத் தமிழ்க் குமரா
பட்ட துயர் அகன்றிடவே
பல்லோரும் ஏத்தும் நல்லூரின் வேலவா
இட்டமுடன் இதயங்கள் வழிபடவே
இலங்கு மயில் ஏறிவரும் மயூரா
தொட்டுத் தொழும் தொண்டர் குறை நீக்க
தோகை மயில் மீது வா கடம்பா..

வள்ளுவன் தமிழில் வாழும் தமிழ்க் குமரா
வானுயர் நல்லூரில் வதியும் வள்ளி மணாளா
அள்ளும் நெஞ்சை அள்ளும் சிலம்பில்
ஆழ்ந்து மிளிரும் அழகா முருகா
தெள்ளு தமிழ் ஔவைக் கவியில்
தேனாய் இனிக்கும் தென்பழநி முருகா
உள்ளதெல்லாம் உருக்குலைந்த உண்மைத் தமிழ் வாழ
உன் வேலோடுவா நல்லூர்க் கந்தா...

செ.சிவபாதசுந்தரம்
மீசாலை.

## தேடிவந்தோம் காத்தருளுமையா!

ஆறுதலை முருகையா - எமக்கு
ஆறுதலைத் தாருமையா
வேறு துணை நாமறியோம் - எமக்கு
வேண்டும் வரம் தாருமையா
மாறுபடு சூரனவன் - மண்ணில்
மாண்டு தர்மம் நிலைத்துயர
தேறுதலை ஈந்தவனே - நல்லூர்
தேடி வந்தோம் காத்தருளுமையா!

லோஜனா கிருஸ்ணசாமி
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## நல்லூர் நாயகனை நினைந்திடுவோம்

எல்லாம் வல்லவனாய் என்றுமே துணையாகி
வல்வினை வீழ்த்தி வளம்பல பெருக்கி
அல்லல் அகற்றி ஆசித்து அருளீயும்
நல்லூர் நாயகனை நாளும் நினைந்திடுவோம்.

தே.சுகிர் நாகேந்திரா
அரியாலை.

## அன்புத் தெய்வமே ஆறுமுகமானவனே

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுகமான குமரா அறிந்திட்டேன் உன் மகிமை
இக்கணமே வருவாய் என் கந்தகுருவே நீ
என்னைக் காத்திடவே எனக்கு அருள் தந்திடவே
ஒரு நொடியில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தென்வினை போக்கி ஆட்கொள் குமரவேளே
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே.

ம.அலைக்ஸ்
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Calling for Tender
## Teaching Hospital, Jaffna.
## Renovation of Ward 24

- ★ The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Renovation of Ward 24, T.H., Jaffna up to 10.00am on 08.09.2010 Tender form may be collected from Director, TH, Jaffna up to 04.09.2010 on payment on non refundable deposit of Rs. 2,000/-
- ★ Tender will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
- ★ Tender forms are issued only to contractors, who have a valid registration in Grade C8 (Old scheme Grade M7) and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).
- ★ Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 08.08.2010.
- ★ Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.
- ★ For further details please contact Hospital Secretary, T.H., Jaffna.

***The Chairman,***
***Divisional Tender Board,***
***Teaching Hospital, Jaffna.***

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

**பரிபாலன சபை பொதுச்சபைக் கூட்டம் - 2010**

*காலம்:* *30.08.2010 திங்கட்கிழமை*
*நேரம்:* *பிற்பகல் 3.30 மணி*
*இடம்:* *கோயில் மண்டபம்*

மேற்படி ஆலயத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு மாண்புமிகு கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களது வருகையுடனும், நல்லூர் பிரதேச செயலரது பங்கு பற்றுதலுடனும் இக் கூட்டம் நடைபெற இருப்பதாலும், புதியதோர் நிர்வாகசபையை தெரிவு செய்ய இருப்பதனாலும் சகல திருவிழா உபயகாரர்களையும் தயவு கூர்ந்து உரிய நேரத்திற்கு இக் கூட்டத்திற்கு சமூகம் தந்து ஒத்துழைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மஞ்சத்தடி,
இணுவில். (102614)

இங்ஙனம்: க.நடராசா, சந்நிதி உரித்துடையார் தலைவர்,
மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய கோயில்.


# JANASHAKTHI
## LEADERS



We have enjoyed record-breaking growth and out performed all other industry players within a relatively short period of time, putting us on course to achieve a staggering performance of Rs.6 Billion at the end of the current year. Our untiring spirit of innovation, coupled with a commitment to develop our youthful and energetic sales and marketing team has helped us in setting high service standards, which has been the foundation of our success.

If you share our commitment for success and want to be a part of a dynamic and winning team, Janashakthi Insurance is the company to get your career on the fast track.

## VACANCIES
### INSURANCE ASSISTANTS / INSURANCE EXECUTIVES

Due to our expansion of operations, we need the service of Insurance Assistants / Insurance Executives for Office work to take up responsibilities in the following branches:

**JAFFNA, KILLINOCHCHI, NELLIYADI**

Prospective applicants should meet the following criteria :-
- G. C. E. O/L Examination qualified
- G. C. E. A/L 3 passes
- Experience in the Industry will be an added qualification

Please forward your detailed *Curriculum Vitae* together with the names and contact details of two non-related referees.

Please indicate the post applied on the top left corner of the envelope / or on the subject line of the email.

Senior Manager - North & East Zone
**JANASHAKTHI INSURANCE PLC.**
No 55/72, Vauxhall Lane, Colombo 2.
srivijaya@janashakthi.com



## FINANCIAL SPONSORSHIP

ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்:
**0714 550055**
0777302882 (யாழ்ப்பாணம்)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

கல்பேட் புறொயிலர் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் லேன், நல்லூர்.*

### வீடு வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் வீடு வாடகைக்குண்டு (கந்தோர், நிறுவனங்களுக்கு மட்டும்) தொடர்பு: 0777398337

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அருகில்.
தொடர்பு :- 0777111400

### Rooms வாடகைக்கு

இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தியில் கல்வி கற்கும் பெண்பிள்ளைகளிற்கு மட்டும் மேல் மாடி வீட்டு Room வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு: 0776106578

### வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டுக்குளிப் பகுதியில் 2 வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772492268, 004531313529

### கார் விற்பனைக்கு

NISSAN SANY Car, விற்பனைக்கு.
தொடர்பு: 0213210778


## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 29

அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் அமரர் கனகரத்தினம் பாலகிருஸ்ணா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று மாலை 6.30 மணிக்கு ஆவரங் கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ். ஜே. ரூபசிங்கமும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபர் வே. பாலசுப்பிரமணியம், மத்திய விளையாட்டுக் கழக உறுப்பினர் ச.கிருபானந்தன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (6-23)

## நீங்காத நினைவுகளுடன்
## 4ஆம் ஆண்டு நினைவு...

அமரர்
உயர்திரு. யேசுதாசன் டேமியன்

மலர்வு 26.10.1975
உதிர்வு 29.08.2006



இன்று உன் கல்லறைமுன் உனைப் பார்க்கின்றோம்.
மகனே! சகோதரா!
இப்பிரபஞ்சத்தில் நீ எங்கிருக்கின்றாய்?
உனை நினைத்து வாடுகின்றோம்,
துயரத்தில் மூழ்கி உள்ளோம்.
முத்தான உன் புதல்வியில் உனைக் காண்கின்றோம் - மகனே!
உனை அன்பாக அணைத்திட்ட தாய் தந்தையர் உள்ளத்தின் கனம் மாறவில்லையே சகோதரா!
பாசத்தின் வலி இதுதான் என்றாய்
உன் கல்லறையில்இன்று மலர் தூவி துதிக்கின்றோம்
டேமி!
இறைவனுக்குள் நீ என்றும் இருக்கின்றாய்.
அவர் அருகில் உன்முக தரிசனம் ஒளியாக பிரகாசிப்பதை நித்தம் பார்த்திட வேண்டுகின்றோம்

**பெற்றோர், சகோதரர்.**

186, 2ம் குறுக்குத்தெரு, யாழப்பாணம்.
9/1, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(102613)

## மரண அறிவித்தல்



## Dr.யமுனா மார்க்கண்டு

**MBBS, MD, MRCP(UK)**
**(MILTON KEYNES HOSPITAL - UK)**

காரைநகர், பாலாவோடையைச் சேர்ந்த Dr. யமுனா மார்க்கண்டு 18.08.2010 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம், சிவகாமிப்பிள்ளை தம்பதியினரினதும் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த பொன்னுடையார் வேலுப்பிள்ளை நாகலிங்கம்-பார்வதிப்பிள்ளை தம்பதியினரினதும் அன்புப் பேர்த்தியும், மார்க்கண்டு (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கச்சேரி - முல்லைத்தீவு) , திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு தம்பதியினரின் செல்வப் புதல்வியும் மனோகரி (FORMERLY, HNB), மாலினி (KMS - LONDON), கேதீஸ்வரி (LONDON), யாழினி (CANADA) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமச்சந்திரன் ( EXPRESS CARGO SERVICES - COLOMBO), சுகந்தன் (KNOWLEDGE MANAGEMENT SYSTEMS, COLOMBO, LONDON), சயந்தன் (LONDON), திலகேசன் (CANADA) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வசீகரன் (St.THOMAS COLLEGE, Mt. LAVINIA), ஆரணி (LONDON), ஹரினி (LONDON), கிருஷான் (CANADA) ஆகியோரின் நேசமிகு பெரியம்மாவும், தி.பொன்னுத்துரை (இளைப்பாறிய புள்ளி விவர அதிகாரி, புள்ளிவிவரத் திணைக்களம்), திருமதி இராஜலட்சுமி பொன்னுத்துரை ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.08.2010) திங்கட்கிழமை இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 31.08.2010 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**திரு.திருமதி மார்க்கண்டு**
**NO.164/4, 1St. CHAPEL LANE,**
**WELLAWATTA, COLOMBO - T.P.06.2505713**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இனப்பிரச்சினை முடக்கப்படும்

இப்போது எம்முன்னே இருப்பது அபிவிருத்தி யுத்தம். அந்த யுத்தத்தின் துருப்புகளாக இருக்கவேண்டியது நீங்களே. குறிப்பிட்ட இந்த யுத்தத்துக்காக நாட்டு நலன் கருதி புத்திசாதுரியத்துடன் தீர்மானங்களை எடுங்கள். பொதுமக்களின் சேவைக்காகவே நாம் இருக்கிறோம். உலகத்தின் கண்களுக்குத் தெரியக் கூடியதாக அபிவிருத்தி யுத்தம் குறித்த ஆக்கபூர்வமான முடிவுகளை எடுங்கள். உங்களைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்.

பொது நிர்வாக சேவையாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு அரச நிர்வாக அதிகாரிகளுக்குத் தென்பூட்டி உள்ளார்.

நாட்டில் போர் முடிந்துவிட்டதால் இனி அபிவிருத்தியே அரசாங்கத்தின் முதல் இலக்கு என்று ஜனாதிபதி இதற்கு முன்னரும் பல தடவைகள் தெரிவித்திருந்தார். இவ்வருடம் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு பகிரங்க அழைப்பும் விடுத்திருந்தார்.

நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றப்படவேண்டும். அதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் அவசியம் என்ற கருத்தை எவரும் நிராகரிக்கமாட்டார்கள். அதனை இலக்காகக் கொண்டு அரசாங்க நிர்வாக சேவை அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்பதும் அவசியமே, முக்கியமே.

ஆனால் அதற்குச் சமாந்திரமாக இங்கு பல தசாப்தங்களாக நிலவிவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்படுவதும் இன்றியமையாததாகும்.

ஆனால், நாட்டின் அரச தலைவரும் அரசாங்கமும் அதனைக் கருத்தில் கொள்வதாக இல்லை. இது குறித்து எந்தத் தரப்பு, எந்த நாடு, எந்தச் சர்வதேச அமைப்பு இடித்துரைத்தாலும் அதனைக் காதில் போடுவதாக இல்லை.

எமக்கு எவரும் புத்திமதி சொல்லத் தேவையில்லை. நாம் சுயாதிபத்தியம் உள்ள சுதந்திர நாட்டின் புதல்வர்கள், இனப்பிரச்சினை என்றாலும் சரி, போர் நிறுத்தம் என்றாலும் சரி, அமெரிக்கா என்ன, இந்தியா என்ன, பிரிட்டன் என்ன, ஐரோப்பிய ஒன்றியம் என்ன எவரும் கோடு போட்டுக்காட்டி அந்த வழி நடக்குமாறு எமக்குக் கூறமுடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது ஆற அமர்ந்து செய்யப்படவேண்டிய ஒன்று. அதனை அரசின் நிகழ்ச்சிநிரலின் பின் அட்டவணையிலேயே சேர்த்துக் கொள்ள முடியும் என்ற போக்கே அரச தலைவரும் அவரின் அரசாங்கமும் கொண்டுள்ள அசைக்க முடியாத கொள்கையாக உள்ளது. இதனை எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

அதுவும் கூட, வெளிநாடுகளிடம் கடன் உதவி மற்றும் வேறு வகை உதவிகளைப் பெறுவதற்கான தந்திரம் என்றே கருதப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இழுத்தடித்து, அந்த இடைவெளியில், ஈழத்தமிழர்கள் தங்கள் சொந்தப் பூமி என்று உரிமை கொண்டாடும் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் அவற்றுக்குப் பக்கபலமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசின் பிரதான திரைமறைவு மூலோபாயங்களில் ஒன்று.

அந்தத் திட்டத்திற்குப் பக்கபலமாக, நடாளுமன்ற உறுப்பினர் எவரும் அரசுடன் இணைந்து கொள்ளக் கதவுகள் தற்போதும் திறந்திருக்கின்றன என்று எதிர்க்கட்சிகள் தரப்பில் உள்ளவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் நாட்டின் தலைவர். அதாவது மூன்றில் இரண்டு பலம் நாடாளுமன்றத்தில் கிடைத்துவிட்டால், நினைத்ததைச் செய்யும் 'மந்திரக்கோல்' மஹிந்தகைக்கு வந்துவிடும்.

அதன் பின்னர் எந்த வெளிநாட்டின் அழுத்தத்தின் பேரிலும், இப்போதைக்கு இனப்பிரச்சினை குறித்துத் தலைவைத்துப் படுக்கவும் அரசு நினைக்காது. இந்தியா என்ன, வேறு நாடுகள் என்ன, அவர்களது தலையில் 'சம்பல்' அரைக்க நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலம் கைகொடுக்கும்.

அதற்கு உகந்த சூழ்நிலை இன்னும் இரண்டொரு நாள்களில் அரச தலைவரின் கழுத்தில் பூமாலையாக விழப்போகிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எந்த நிமிடத்திலும் அரசாங்கத் தரப்புக்குத் தாவலாம் என்ற நிலை முகிழ்த்துவிட்டது.

இனி என்ன? ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் முன்னுரிமை விடயங்கள் விரைந்து நிறைவேறும். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முக்கிய தேவை முடக்கப்பட்டுவிடும்.

# ஆசிரியர் இடமாற்ற பணிப்புரைகளை அதிகாரிகள் இறுக்கமாக பின்பற்ற வலியுறுத்து

### வவுனியா ஆலோசனைக் கூட்டத்தில் ஆளுநர் சந்திரசிறி

யாழ்ப்பாணம்,ஓக.29

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக பணிப்புரைகளை இறுக்கமாகப் பின்பற்றும்படி வடபகுதி கல்வி அதிகாரிகளுக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி வவுனியாவில் திணைக்களங்களினதும் வலயங்களினதும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் வடமாகாண ஆளுநர் நடத்திய ஆலோசனைகளின்போது கல்வித்துறையில் மீள் கட்டுமானம் மற்றும் கல்வி நடவடிக்கைகளின் மீள் சீரமைப்பு போன்ற விடயங்கள் முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் வலயம் வலயமாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மீள் கட்டுமானம் தொடர்பான விடயங்களில் நடவடிக்கைகளை துரிதமாகச் செய்து முடிப்பதற்கென பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளை அதிகரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்த வகையில் இரண்டு கட்ட நடைமுறையொன்று தீர்மானிக்கப்பட்டது. தற்காலிக செயற்பாடுகளை மேற்கொண்டு பாடசாலைகள் உடனடியாகத் தொழிற்படுவதற்கு கிடைக்கும் இடவசதிகளைப் பயன்படுத்திக் கொள்வது அதேசமயம் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புதிய கட்டடங்களையும் தொகுதிகளையும் முறையாக மீளக்கட்டியெழுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள், வகுப்பறைகள் கழுவும் வசதிகள், கற்றல் உபகரணங்கள், பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்குத் தேவையான நலன் சார் வசதிகள் யாவும் வழங்கப்பட்டுள்ளதென பொதுவாகத் தெரியவந்துள்ளது.

#### மன்னார் மாவட்ட ஆசிரியர்கள்

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கீகரிக்கப்பட்டதற்கும் அதிகமாக ஆசிரியர்களின் எண்ணிக்கை காணப்பட்டபோதிலும் ஆசிரியர்களின் தயக்கம் காரணமாக புதிதாக மீளவும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்குப் போதிய ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதன் பேரில் புதிதாக மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு போதுமான ஆசிரி யர்கள் கிடைக்கும் வகையில் இப்போது இருக்கும் ஆசிரியர்களை மீளவும் பிரித்து நியமனம் செய்யும்படி அதிகாரிகளை ஆளுநர் பணித்தார்.

மூன்றாம் தவணைக்காக திறக்கப்பட விருக்கும் ஏழு பாடசாலைகளின் தேவைகள் குறித்து ஆலோசிக்கும் போது அவ்வாறான பாடசாலைகளுக்குப் போதுமான ஆசிரியர்களை நியமித்ததன் பின்னர் பாடசாலைகளைத் திறக்கும்படி கூறிய ஆளுநர் திறக்கவேண்டும் என்பதற்காக பாடசாலைகளைத் திறக்கவேண்டாம் என்றும் வலியுறுத்தினார்.

#### அதிகாரிகளுக்கு கண்டிப்பான பணிப்புரை

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்கள் கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகள் குறித்து மீளாய்வு செய்யப்பட்டு பிரதேசத்தின் அளவும் விஸ்தரிக்கப்படும். சேவைக்கால ஆலோசகர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும். வெற்றிடமாகவுள்ள இடங்களுக்குப் புதியவர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன். சேவைக்கால ஆலோசகர்களின் பயணக் கஷ்டங்களை நீக்குவதற்காக மோட்டார் சைக்கிள்களுக்கான கடன் வசதிகளும் வழங்கப்படும். என்பது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ப)

## விவசாய பீடத்துக்கும் அமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை மீண்டும் கிளிநொச்சிக்கு மாற்றுவது தொடர்பாக இன்று யாழ்.வருகைதரும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா ஆராயவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது 1991 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக கடந்த 13 வருடங்களாக திருநெல்வேலியில் இப்பீடம் இயங்கி வருகின்றது.

எனவே விவசாய பீடத்தை மீண்டும் கிளிநொச்சிக்கு மாற்றுவது தொடர்பாக இன்று வருகைதரும் அமைச்சர் திருநெல்வேலி விவசாயப்பீடத்துக்கு சென்று துணைவேந்தர், விவசாயப் பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர்களுடன் விரிவாக ஆராயவுள்ளார்.

தொடர்ந்து நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு விவசாய பீடத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியையும் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

## கிராம அலுவலர்களுக்கு இடையே முகாமைத்துவப் போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.29

இலங்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கிராம அலுவலர்களுக்கு இடையேயான முகாமைத்துவப் போட்டியொன்று தற்போது நடைபெற்று வருகின்றது.

மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள இப்போட்டியில் முதல் கட்டமாக பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு இடையே சிறந்த முகாமைத்துவம் கொண்ட முதல் மூன்று கிராம அலுவ லர்களைத் தெரிவு செய்யும் நடவ டிக்கை ஆரம்பமாகியுள்ளது.

அலுவலகச் செயல்பாடுகள் உட்பட பொது மக்களுடனான உறவுகள், அலுவலக ஒழுங்கு, அபிவிருத்தி செயல்திட்டம் எனப் பல்வேறு செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு தெரிவுகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் இணைந்த குழுவினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இத்தகைய செயற்பாட்டினால் கிராம அலுவலர்கள் தமது அலுவலகங்களையும், கோவைகளையும் புதுமெருகூட்டும் பணியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (த-68-121-72)

## வடமராட்சி கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் செம்பியன்பற்று வடக்கு (ஜே/426), செம்பியன்பற்று தெற்கு (ஜே/427), மருதங்கேணி (ஜே/428), வத்திராயன்(ஜே/429), உடுத்துறை (ஜே/430), ஆழியவளை(ஜே/431) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2ஆயிரத்து 455 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 531 பேர் மீளக் குடியமர்த்துவதற்கான அனுமதியையே நேற்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி வழங்கியுள்ளார். அத்துடன் இப்பிரதேசத்துக்கான மீள்கட்டுமானப் பணிகளை யாழ்.மாவட்டச் செயலகத்தை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இதற்கமைய இப்பிரதேசத்தின் புனரமைப்புப் பணிகளை யாழ்.மாவட்டச் செயலகம் மேற்கொள்ளவுள்ளது. இப்பிரதேச மக்களுக்காக இராணுவத்தினரால் 75 அரை நிரந்தர வீடுகள் கையளிக்கப்படவுள்ளன. மேலும் மருதங்கேணி வைத்தியசாலை, பாடசாலைகள், கோயில்கள், கூட்டுறவுச் சங்கங்கள், திணைக்களங்கள் என்பனவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

#### அடிப்படை வசதிகளை செயலகம் வழங்கும்

மக்கள் மீள்குடியமர்வதற்கான தற்காலிக கூடாரங்கள், தண்ணீர் வசதி, சுகாதார அடிப்படை வசதிகள் என்பனவற்றை மாவட்டச் செயலகம் அங்கு மேற்கொள்ளும் என்று அரச அதிபர் தெரிவித்தார். இது தொடர்பான அடிப்படைக் கட்டுமான வசதிகள் அனைத்தையும் மாவட்டச் செயலகம் மேற்கொண்ட பின்னரே மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறும் இராணுவத் தளபதி அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டார்.

இப்பிரதேசத்தில் மீளக்குயமர உள்ள மக்களில் 1,385 குடும்பங்கள் மீன்பிடியை மட்டுமே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டவை. எனவே அவர்களது தொழிலுக்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். எனவே இப்பிரதேச மக்கள் மீளக்குடியமர்வதற்கான திகதி விரைவில் யாழ்.மாவட்டச் செயலகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

அடுத்த கட்டமாக வடமராட்சி வடக்கைச் சேர்ந்த கற்கோவளம், குடத்தனை, புலோலி, புனிதநகர் ஆகிய உயர்பாதுகாப்பு வலயங்களை விடுவிப்பதற்காக அப்பிரதேசங்களில் தற்போது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. மேலும் நாகர்கோயில் பிரதேசத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் இருப்பதனால் அப்பிரதேசத்தில் அடுத்த கட்டமாகவே மீள்குடியமர்வு இடம்பெறும்.

#### சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றார் தளபதி

கொட்டோடைப் பிரதேசத்தில் உள்ள விவசாயக் காணிகளை பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்குமாறு அரச அதிபர் கேட்டுக்கொண்டார். அது தொடர்பில் விரைவில் சாதகமாக பரிசீலிப்பதாக இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர், மருதங் கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உட்பட்ட கிராம சேவையாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க, குருநகர் சீநோர் சந்தைப் பகுதியில் இருந்து செல்லும் புதிய கடற்கரை வீதியை கடந்த 2ஆம் திகதி திறந்துவைத்து உரையாற்றும் போது வடமராட்சி கிழக்கில் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 14 : 30.08.2010 | |
| | : திங்கட்கிழமை |
| திதி | : பஞ்சமி |
| | காலை 06.32 வரை |
| நட்சத்திரம் | : அச்சுவினி |
| | மு.ப 08.48 வரை |
| சுபநேரம் | : 12.05 - 01.35 |
| ராகுகாலம் | : 07.35 - 09.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவில் சந்தியில்

நீங்கள் கடைகள் விலைக்கு வாங்க முன் பதிவு செய்ய விரும்புகின்றீர்களா?

**அனைத்தும்**

* நவீன வசதிகளுடன் கூடிய கடைகள்
* சாதாரண வசதிகளுடன் கூடிய கடைகள்

தொடர்பு:
தொலைபேசி 0789148913

## விற்பனைக்கு

பந்தல், கேட்டின் செற், பலூன் செற், பித்தளை வாஸ், சில்வர் வாஸ், டம்ளர், பிளேட், மாபிள் பிளேட், பிளாஸ்ரிக் பிளேட், கிடாரம், டபரா பேசின், பெரல், பூக்கள், ஆக், மணவறை, மேசைகள், கதிரைகள், பூ மணவறை வகைகள், கிளாஸ், நிலக்கம்பளம் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு :- சந்திரன் பான்சி ஹவுஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. : 0212228606 (102634)




## கண்ணீர்க் காணிக்கை

எமது பல்கலைக்கழக சக மாணவியாகிய கோபியா அவர்களின் அன்புச் சகோதரியான

**கதிர்காமராசா திவ்வியா**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள்.

(102633)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தம்பையா செல்வி**

தோற்றம் 20.06.1932

மறைவு 30.07.2010

அன்பின் திருவுருவாய் பண்பு பாசமெல்லாம்
அகத்தில் ஒன்றாய்க் காட்டி
இன்புறு மொழியால் எமை வழிப்படுத்தி
தரணியில் வாழ வைத்த தெய்வமே!
சீருடன் உமை நிதம் அஞ்சலி செய்வோம்.

மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் தந்தி மூலமாகவும் இறுதிச்சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்தியும் மற்றும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேவாலய வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(இ/5704438)


## காணி விற்பனைக்கு

வர்த்தக நிலையங்கள், வங்கி போன்ற கட்டடங்கள் அமைப்பதற் கேற்ற 2 பரப்புச் சற்சதுரக்காணி, மருதனார்மடச் சந்திக்கருகில் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0779493838

## வேலை வாய்ப்புக்கள்

IELTS, General English, IT கற்பிக்கக் கூடிய சிறந்த அனுபவமுள்ள ஆசிரியர்களும் மற்றும் Receptionist (Female), Visa Consultant யாழ்.கிளை நிறுவனத்துக்குத் தேவை.

தொடர்பு : 0777919293
E.mail.manager@sec.edu.lk

## இடம் தேவை

U.K. Student Visa நிறுவனத்துக்கு யாழ் நகரில் தங்களது கிளை அலுவலகத்தை திறப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட 2 அல்லது 3 அறைகள் கொண்ட இடம் பிரதான வீதிகளில் தேவை. வீட்டுச்சூழல் அமைப்பும் ஏற்கத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777919293


## தவறிவிட்டது

இல.17, பழைய பூங்கா வீதி, குருநகர் எனும் முகவரியுடைய மோசேஸ் யூலியஸ் சாஸ் [833585134 V] எனும் இலக்கமுடைய தே.அ.அட்டை மற்றும் போலீஸ் அடையாள அட்டையும் மத்தியூஸ் வீதிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

அ.றீற்றம்மா,
இல.17, பழைய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0770417988, 0773459877


## குழந்தை பராமரிப்பாளர் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ். தம்பதியரின் 2 சிறு பெண்குழந்தைகளை அன்புடன் பராமரிப்பதற்கும், வீட்டு வேலையில் உதவி புரியவும் 18 – 30 வயதில் நற்குணமுள்ள பெண்ணொருவர் தேவை.

தொடர்பு: 0773819855, 0773456779

## Personal Class

தரம் 3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (இதில் A/L எடுத்த மாணவர்களும் இணையலாம்)

தொடர்பு : K.K.S. Road, Jaffna. T.P. :0772764708

## பிரத்தியேக வகுப்புக்கள்

கணிதம்
(MATHEMATICS)
தரம் 6 முதல் 11 வரை
T.P.: 0778330024

## காணி விற்பனைக்கு

மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு 100m தொலைவில் சிவன் கோயில் Road 9 ¾ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.கந்தையா
0771186548

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு. 6 ஆம் கட்டைடியில் பருத்தித்துறை வீதியில் சிறிய வீடு. கிணற்றுடன் கூடிய 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு: 0776660740, 0776979762, 0712123811

## நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகலமாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" போன்ற வகைகள், காஸ்மிதி பேசன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**ஸ்ரார் செராமிக்ஸ்**
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.

போக்குவரத்து வசதி இலவசம்.

# ACCA

பாசமுள்ள குடும்பத்திற்கு இணையான சர்வதேச கல்வித்தகைமை இன்றே....

ACCA

Mr.N.Jeyabalasingam
Coordinator- ACCA
Regional Office & Education Centre
No.46, மணிக்கூட்டு வீதி,
(Becon tuition அருகில்)
யாழ்ப்பாணம்.
021 5670345/ accajaffna@gmail.com

(1)
Mr.N.Sugeevan
Asst.coordinator- ACCA
No 92/1, Ramanathan Rd,
Thirunelvely, Jaffna.
T.P: 0777855800, 021 222 7191

(2)
Mr.S.Baskarasingam,
Asst. coordinator- ACCA,
Menadchiamman kovilady,
Chankathanai, Chavakachcheri.
T.P: 0777 111 205/ 021 300 7395

(3)
Mr.S. Amalathas
Asst. coordinator- ACCA
Nugavil,
Karaveddy South,
Karaveddy.
T.P: 077 6258 034

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் 04, 05, 10/09.2010 ஆரம்பமாகின்றன.


## கண்ணீர் அஞ்சலி



எனது நண்பன்

**சந்தனம் சவுந்தரராஜன்**

மரணமான செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றேன். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

க.ஜெயரட்ணசிங்கம் (அண்ணர்)
யாழ்ப்பாணம். (102629) றாம்ஜி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரகுலேஸ்வரன் காஞ்சனாதேவி



மல்லாகம், மில் லேனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ரகுலேஸ்வரன் காஞ்சனாதேவி 27.08.2010 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சறோஜினிதேவி தம்பதியினரின் அன்பு மகளும் ந.ரகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் வைஷ்ணவி, தட்ஷாநவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன்,
மல்லாகம். (102632)

## மரண அறிவித்தல்

### சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன்

(யாழ்ப்பாணம் துர்க்கா நகைப்பூங்கா உரிமையாளர்)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன் நேற்று (28.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் ஆச்சாரியின் அன்பு மகனும் இராஜலெட்சுமியின் அன்புக் கணவரும் பிரபாகர், சுதாகர், கமலேஸ்வரி, சுதர்சன், பபிகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் யோகேஸ்வரி, பாபு, கிந்துயா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுர்சன், துவாரகா, கரிஸ்ராகவன், கரினிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அம்பிகாவதி, விஸ்வநாதன், பரமேஸ்வரி, நாகராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
T.P. : 0776031332,
0771554661

தகவல்:
பு.கா[illegible] (தம்பி).

35, [illegible]
[illegible] றோட், யாழ்ப்பாணம். (102628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அரசை நடத்தி வந்த ஓர் இயக்கம் அழிவதற்கு நாம் காரணமாகிவிட்டோம்

## கவலைப்படுகிறார் டாக்டர் ராமதாஸ்

சேலம், ஓக.29

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு மௌனமாக இருந்ததால் ஓர் இனமே அழிந்துவிட்டது. அந்த வகையில் இலங்கையிலுள்ள ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க ஈழ அரசை நடத்தி வந்த ஓர் இயக்கம் முற்றிலும் அழிவதற்கு நாம் காரணமாக இருந்துவிட்டோம்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மௌனமாக இருந்ததால் ஓர் இனமே அழிந்துவிட்டது. அந்த வகையில் ஓர் இனம் அழிவதற்கு நாம் காரணமாகிவிட்டோம்.

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க ஈழ அரசை நடத்தி வந்த ஒரு இயக்கம் முற்றிலும் அழிவதற்கு நாம் காரணமாக இருந்துவிட்டோம். இனி இந்திய அரசு அவர்களின் மறுவாழ்வுக்கு உதவி செய்வதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சட்டமன்றத் தேர்தலில் பா.ம.க. யாருடன் கூட்டணி என்பது பற்றி இன்னமும் எந்த முடிவும் நாங்கள் எடுக்கவில்லை.



இதுவரை பா.ம.க. எந்தக் கூட்டணியிலும் இல்லை. கூட்டணி பற்றி இப்போது எதுவும் கூறமுடியாது. தேர்தல் நேரத்தில்தான் அது பற்றி எதுவும் முடிவு செய்யப்படும்.

விஜயகாந்துடன் கூட்டணி என்று நான் மதுரையில் கூறவில்லை. மதுரையில் என்னிடம் கேட் கப்பட்ட கேள்விக் குப் பதில் அளிக்கும்போது, தமிழ்நாட்டில் நிரந்தரமாக ஒரு வசனம் உள்ளது. அரசியலில் நிரந்தரமாக எதிரியும் கிடையாது, நிரந்தரமாக நண்பனும் கிடையாது என்ற ஒரு வசனம் உள்ளது என்றுதான் நான் கூறினேன்.

பா.ம.க. தலைமையில் சமூக நீதிக் கூட்டணி அமைய வேண்டும். அதற்கு மக்கள் ஆதரவும் கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம் ஆகும்.

- இப்படி அவர் கூறினார். (ஒ-சி)

# சீனாவிலிருந்து வருகிறது டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நுண்ணுயிரி!

கொழும்பு,ஓக.29

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிப்பதற்கான நுண்ணுயிரி சீனாவிலிருந்து தருவிக்கப்படவிருக்கிறது.

இப்பொருள் கியூபாவிலிருந்து தருவிக்கப்படவிருப்பதாக முன்னர் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்திருந்தபோதிலும் இப்போது நுண்ணுயிரியில் 10 ஆயிரம் அலகுகளைக் கொண்ட தொகுதியொன்று அடுத்த இரண்டு கிழமைக்குள் வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிலுள்ள கியூபா தூதர் திருமதி குவேரா இதுபற்றி கூறுகையில்-

டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான 'பிரிஜ' நுண்ணுயிரி உற்பத்திசெய்வதில் சீனாவுக்கும் கியூபாவுக்கும் இடையில் கூட்டு இணக்கப்பாடு இருந்து வருகின்றது. அதன்படி 10 அலகுகளைக் கொண்ட பொதிகளை சீன நிறுவனம் ஒன்று கடந்த திங்கட்கிழமை கப்பலில் ஏற்றியுள்ளது. இரண்டு வாரங்களில் அவை இலங்கைக்கு வந்து சேரும் என்று கூறினார். (ப)

# தறப்பாள் கொட்டிலில் உறங்கிய சிறுவன் பாம்பு தீண்டி மரணம்

## கிளிநொச்சி உருத்திரபுரத்தில் பரிதாபம்

கிளிநொச்சி,ஓக.29

உறக்கத்தில் இருந்த வேளையில் சிறுவனைத் தீண்டியது விஷப் பாம்பு. மறுநாள் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அந்தச் சிறுவன் மரணமானான்.

உருத்திரபுரம் வடக்கைச் சேர்ந்த ஞானசீலன் நிலக்ஸன் றொபேட்(வயது 10) என்ற சிறுவனே மரணமானவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

அண்மையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட உருத்திரபுரத்தில் சிறுவனின் குடும்பத்தினர் தறப்பாளால் குடிசையை அமைத்து வசித்தனர். கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சிறுவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது பாம்பு தீண்டியுள்ளது.

பாம்பு தீண்டியதை அறியாத நிலையில் அதிகாலை வேளை சிறுவன் வயிற்று நோவால் துடித்துள்ளார்.

இதனையடுத்து மயக்கமடைந்த சிறுவனை அதிகாலை 3 மணிக்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு பெற்றோர் அவசரமாகக் கொண்டு சென்றனர்.

சிறுவன் மரணமடைந்திருக்கலாம் என்று எண்ணிய வைத்தியர்கள் சிறுவனின் உடலில் சிறு அசைவுகளை அவதானித்தனர். இதனையடுத்து உடனடியாக அம்புலன்ஸ் மூலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி சிறுவன் நேற்று முன்தினம் அங்கு மரணமானார். புனித பற்றிமா பாடசாலையின் மாணவனான இவர், கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். (ஒ-6)

# டெங்கு தடுப்பை மேற்கொள்ளாத கல்வி நிறுவனங்கள் மூடப்படும்

தென்மராட்சி,ஓக.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அனுசரிக்காத தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவ்வாறான தனியார் கல்வி நிறுவனங்களை மூடி விடவும் பிரதேச செயலகத்தினால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை 25ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களப் பிரதேச செயலகம் ஆகியவற்றினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு கடிதங்கள் அனுப்பியும் அதனை உதாசீனம் செய்யும் தனியார் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

# 8 மாதங்களுக்குள் 18 வெளிநாட்டுப் பயணம்; சுகாதார அமைச்சின் அதிகாரி சாதனை!

## ஏனைய அதிகாரிகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக முறைப்பாடு

கொழும்பு,ஓக.29

சுகாதார அமைச்சுக்கு ஆண்டு தோறும் கிடைக்கும் புலமைப்பரிசில் மற்றும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்களைக் குறிப்பிட்ட சில அதிகாரிகள் தமக்குள் பகிர்ந்து கொண்டுள்ளமை இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது தொடர்பாகச் சுகாதார அமைச்சருக்கும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் சிலர் இந்த ஆண்டின் கடந்த 8 மாத காலத்துள் மாத்திரம் 15 வகையிலான வெளிநாட்டுப் பயணங்களில் பங்கேற்றுள்ளனர். அவர்களுள் குறிப்பிட்ட உயரதிகாரியொருவர் மேற்படி கால அவகாசத்துக்குள் 18 தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு சுகாதார அமைச்சு தொடர்பாகக் கிடைக்கும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்களை ஐந்து பேர் கொண்ட உயரதிகாரிகள் குழுவொன்று தமக்குள் பகிர்ந்து கொண்டு பய ணங்களை மேற்கொள்வதாக அதே அமைச்சின் மற்றொரு அதிகாரிகள் தரப்பு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவுக்கு முறைப்பாடு செய்துள்ளது.

புலமைப்பரிசில் வாய்ப்புக்களாகச் சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கும் வெளிநாட்டுப் பயணங்களை ஒரு சில அதிகாரிகள் மட்டும் பயன்படுத்திக் கொள்வதால் ஏனைய அதிகாரிகளுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. எனவே, இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு ஏனைய அதிகாரிகளுக்கும் இந்த வாய்ப்புக்கள் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தரப்பினர் சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கும் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் மூலமான பயிற் சிப்பட்டறைகள், பலதரப்பட்ட மாநாடு கள், பயிற்சிகள் தொடர்பாக அதிகாரி களை அனுப்பி வைக்கும் முறையான தொரு செயற்றிட்டத்தைத் தயாரிக்குமாறு சுகாதார அமைச்சர், அமைச்சின் உயர் மட்டங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (த)

# தீவுப்பகுதிக்கான மாலை பஸ்சேவை சீரில்லையெனப் பயணிகள் விசனம்

ஊர்காவற்றுறை,ஓக.29

தீவுப் பகுதிக்கான மாலை நேரப் பஸ் சேவைகள் தடைப்படுவதால் பயணிகள் சிரப்படுகின்றனர்.

மாலை 4.30 மணிக்குச் செல்லும் இ.போ.ச. பஸ்ஸிற்குப் பின்னர் மாலை 6.45 இற்கு அடுத்த பஸ் செல்வதால் பல பயணிகள் நீண்டநேரம் காத்து நிற்கவேண்டி ஏற்படுகிறது.

யாழ்.-குறிகாட்டுவான், யாழ்.-ஊர்காவற்றுறை பாதை வழியாக பஸ் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்கள் மாலை வேளை சேவைகளை மேற்கொள்வதில்லை. இத்துடன் இ.போ.ச.வும் குறைவான சேவையை மேற்கொள்வதால் அலுவல்களில் இருந்து தாமதமாக வருவோர், தனியார் தொழில்களுக்குச் சென்றவர்களும் பஸ் கிடையாது நீண்டநேரம் தாமதத்திற்குட்படுவதுடன் அவரசர பயணிகள் பெருமளவு பணம் செலவு செய்து ஓட்டோவில் பயணம் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-267)

# திறந்த பல்கலைக்கழக கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம்,ஓக.29

இலங்கை திறந்த பலகலைக்கழகத்தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத் தியில் டிப்ளோமா, கலைமாணி, அபிவிருத்திக் கொள்கையில் முதுகலைமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக் கலாம் என்றும் இதற்கான படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ)

# குருநகரில் டெங்கு ஒழிப்பு பிரசாரம்

வண்ணை,ஓக.29

யாழ்.சுகாதாரத் திணைக்களம், யாழ்.நகர் மைய றோட்டறக் கழகத்தின் அனுசரணையுடன் நேற்று சனிக்கிழமை குருநகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு பிரசாரத்தை மேற்கொண்டிருந்தது.

டெங்குநோய் பரவுவதற்கான காரணிகள் அந்நோயின் அறிகுறிகள் வராமல் முன்னெச்சரிக்கையாக நடக்கவேண்டிய நடைமுறைகள் நோயாளியை வீட்டில் வைத்து பராமரிக்கும் முறைகள் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

முச்சக்கர வண்டியில் ஒலிபெருக்கி மூலம் விளங்கங்களும் வழங்கப்பட்டன.

பிரசார நடவடிக்கைகளில் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழக தொண்டர்களும் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (ஒ-160)

# கருத்தரிப்பு மாத்திரை, ஊசிப் பாவனையால் இரட்டைக் குழந்தைகள் பிறப்பு அதிகரிப்பு

## வைத்தியர்கள் தகவல்



சென்னை,ஓக.29

கருத்தரிப்பு மாத்திரைகளை உட்கொள்வதால் இரட்டைக் குழந்தைகள் பிறப்பு வீதம் அதிகரிப்பதுடன், பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன - என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

சென்னை போன்ற பெருநகரங்களில் பெரும்பாலான பெண்கள் தாமதமாக திருமணம் செய்து கொள்கின்றனர். இதனால், மணமான ஓரிரு ஆண்டுகளிலேயே குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். குழந்தை பெற்றுக் கொள்வதில் உடல் ரீதியாக இவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ள, கருத்தரிப்பு மாத்திரைகள், ஊசிகளை எடுத்துக் கொள்கின்றனர். இவற்றால், இயற்கை முறை கருத்தரிப்பைவிட, இரட்டைக் குழந்தைகள் பிறப்பு வீதம் அதிகரிப்பதுடன் பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன.

கருத்தரிப்புப் பிரச்சினை உள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு, சினைப்பையைச் சுற்றி உருவாகும் நீர்க்குமிழிகள், கருமுட்டையை கருக்குழாய் வழியாகக் கர்ப்பப்பைக்குச் செல்லாதபடி தடுக்கின்றன. இந்த நீர்க்குமிழிகளை உடைக்க தரப்படும் கருத்தரிப்பு மாத்திரைகளால், அதிக அளவில் நீர்க்குமிழிகள் உடைந்து ஒரே நேரத்தில் இரண்டு கருமுட்டைகளில் விந்துக்கள் இணைந்து இரண்டு கருக்கள் உருவாகின்றன.

தனியார் கருத்தரிப்பு மையத்தின் மருத்துவ இயக்குநர் கீதா ஹரிபிரியா கூறுகையில்-

இயற்கை முறையை ஒப்பிடும்போது, கருத்தரிப்பு ஊசிகள் மூலம் 30 சதவீதமும், மாத்திரைகள் மூலம் 8 சதவீதமும் அதிகமாக இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. திருமணமாகி ஒரு ஆண்டிற்குள் கருத்தரிக்காத இளம்பெண்களும் கருத்தரிப்பு மாத்திரைகளைச் சாப்பிடும் ஆபத்தான போக்கு தற்போது அதிகரித்து வருகிறது - என்றார். (சி)

# செப்.15...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரில் பங்குபற்றுவாரா என்ற சந்தேகம் நிலவியது. ஆனால் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் பங்குபற்றி, இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவார் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தலைமையில் உயர்மட்டக் குழு இந்தக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதன் மூலம் இலங்கை மீதான பல குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஐ.நா. சபையில் தெளிவுபடுத்தப்படும் என்று இலங்கை அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர்:
# கிண்ணத்தைச் சுவீகரித்தது இலங்கை

தம்புள்ள, ஓக. 29

இந்திய அணியை 74 ஓட்டங்களால் தோற்கடித்து முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைப்பெற்றது. இதில் டில்ஷான் 110 ஓட்டங்களையும் (12 பௌண்டரிகள், 1 சிக்ஸர்), அணித்தலைவர் சங்கக்கார 71 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் முனாப்பட்டேல், இஷாந்சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

300 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் டோனி 67 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் பெரிதாக சோபிக்கவில்லை. பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் பெரேரா, ரண்டீவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக டில்ஷானும், தொடர் ஆட்ட நாயகனாக சேவாக்கும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-6-15)


### தகரப்பந்தல் விற்பனைக்கு

புதிய,சிறிதுகாலம்பாவனைக் குட்பட்ட தகரப்பந்தல் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 0779286129

### வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட அரியாலை சாஸ்திரியார் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(மாம்பழம் சந்திக்கு அண்மையில்)
தொடர்பு : 0776230569, 0213217817

### வீடு விற்பனைக்கு
### நாவலர் றோட், யாழ்ப்பாணத்தில்

இரண்டு பரப்புக் காணியில் 4 பெரிய அறைகள், கிச்சின், மாபிள் வேலைசெய்யப்பட்ட ஹோல், பெரிய பாத்ரூம் மாபிள் வேலை செய்யப்பட்டது. மிகவும் வசதியான வீடு. நாவலர் றோட்டில் நல்லூர் கோயிலுக்கு அருகில் விற்பனைக்குள்ளது. விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி :-

Colombo +0777495688, 0112430369 ராஜூ

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் காலை 9 - மாலை 5 மணி வரை

### Sale Sale Sale

அன்னை புத்தகசாலையின் நல்லூர் உற்சவகாலச் சிறப்பு விற்பனை நிலையத்தில் இன்று முதல் ''பழைய புத்தகங்கள், வினாத்தாள்கள், சஞ்சிகைகள், இன்னும் பலதரப்பட்ட புத்தகங்கள்'' 50% விலைக்கழிவில் விற்பனைக்கு விடப்படுகின்றன. தரம் ஒன்றுமுதல் ஐந்து வரை உள்ள மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனமானவை.

குறிப்பு: இவற்றுள் 2010ஆம் ஆண்டு வெளியாகிய வினாத் தொகுப்புக்களும் உள்ளடங்கும். உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள். இச்சலுகை நல்லூர் உற்சவ காலத் தினங்களில் மட்டுமே!

அன்னை புத்தகசாலை சிறப்பு விற்பனை நிலையம், (றியோ கிறீம் ஹவுஸ் அருகில்), நல்லூர்.

### Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

ஒரே மாதிரியான உணவுகளை எத்தனை தடவைதான் சாப்பிடுவது!
வாருங்கள் மாற்றத்தை உணருங்கள்
யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

pizza

மற்றும் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட இந்திய, சீன, இலங்கை உணவுகளை சுடச்சுட சுவையாக நியாய விலையில் பெற்றுக்கொள்ளுங்கள். கீழைத்தேய மேலைத்தேய உணவுகளை சுவைத்திருங்கள்.

GREEDY'S Restaurant

- முற்றாக குளிரூட்டப்பட்டது.
- இலவச இன்டர்நெட் வசதி உண்டு.
- Home Delivery 222 1939

205, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் முதலாம் மாடி, யாழ்ப்பாணம்.
(102642)


# கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அமைச்சர் ஓட்டோ அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஓட்டோ ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளதாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் இதனை வழங்கினார்

கொக்குவில் இந்துக் கல்லூரி கல்விச் சமூகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த ஓட்டோ நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் கல்லூரி அதிபர் அ.அகிலாதாஸ், பழைய மாணவர் சங்கத் தலைவர் அ.பஞ்சலிங்கம், பிரதி அதிபர்களான க.வேலாயுதம், க.வேலாயுதபிள்ளை மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.செல்வநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஓட்டோவைப் பெற்றுக் கொண்டனர். (த-325)

# இந்தியப் பாதுகாப்புச் செயலர் விரைவில் இலங்கை விஜயம்

இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் விரைவில் இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தும் நோக்கிலேயே இவர் இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தசாப்தங்களாக நிலவி வந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.


### A/L BIOLOGY
PERSONAL CLASS

A பெறுபேற்றிற்கான மீட்டலும் எதிர்பார்க்கை வினா விடையும் சமாந்தரமாக இரு அலகுகளில்

OLD அ.1 உயிரியலின் உள்ளடக்கம்
அ.5 உயிரின் தொடர்ச்சி

NEW அ.1 உயிரியல் அறிமுகம்
அ10 இனப்பெருக்கம்

Theroy English/ Tamil
2011 u. 11 Heredity
2012 u. 4 Nutrition

**S.SRIHARAN**
11, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்

### வாடகைக்கு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அலுவலகத்துக்கு ஏற்ற வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
T.P. : 0778543174

### New Science Center
(Jaffna Beacon Center)
**PHYSICS**

A/L - 2011 (மீள் பரீட்சார்த்திகளுக்கு மட்டும்)
* 1 வருட அலகில் முழுப்பாடத்திட்டமும் முழுமையாக முடிக்கப்படும்.
* வினாவிடை வகுப்புகளும் பூர்த்தியாக்கப்படும்.

ஆசிரியர்: திரு. ம.ஸ்பெல்மன் (B.sc.)
ஆரம்பம் : 01.09.2010 புதன்கிழமை
10.00 11.00 வரை

கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 05.09.2010 |
| பிரிவு 02 | 06.09.2010 |
| பிரிவு 03 | 24.09.2010 |
| பிரிவு 04 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டணச் சலுகை வழங்கப்படுகின்றது

மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

hp
PRO 2000
MT BUSINESS PC
களை பெற்றுக்கொள்ள முடியும்
Pro - 2.70GHz Dual Core, HDD - 320 GB, Ram - 2GB DDR 3, Monitor - 19" HP
68,000/-

NALIN information Technologies Pvt Ltd
PARAMESWARA JUNCTION
TP:0212221166,0777667974

HERO HONDA
Passion PRO
Style Unlimited

வாடிக்கையாளர் நன்மை கருதி இப்போது பரந்தனில்...!



டிஜிற்றல் மற்றும் டிஸ் பிறேக்குடன்

**RG Traders**
A-9, வீதி, கரடிப்போக்குச் சந்தி அருகாமையில்.
T.P: 0777340056.

### SM Consultant Services

இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.



இலண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

G.C.E O/L English: B அல்லது IELTS உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொண்டு தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**STUDY IN UKRAINE**

வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் Lugansk & Crimea State Medical University - (Ukaraine) இல் இணைந்து சிறீலங்கா Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வர விரும்பினால் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**STUDY IN INDIA**

இந்தியாவில் பிரபலமான SRM University, Bangalore University, Madras University என்னும் இது போன்ற பிரபலமான கல்லூரிகளில் கற்பதற்கு உடன் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

பாடநெறிகள்: B.E., B.Sc., B.Ed., BBM, B.Com, B.PT, BA, LL.B., M.Sc., MBBS, MBA

அனைத்து விவரங்களுக்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com


### மரண அறிவித்தல்

**சுகந்தன் கஜந்தி**

செல்வச்சந்நிதி, தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகந்தன் கஜந்தி நேற்று (28.08.2010) சனிக்கிழமை அதிகாலை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி குணரட்ணராஜா - பூலோகறாணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற T.சுகந்தனின் அன்பு மனைவியும் சந்தோஸின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.08.2010) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்திலிருந்து பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org